தனியார் வனங்களைப் பாதுகாத்தல் (கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீட்டித்தல்) சட்ட முன்வடிவு, 1979	492—494
நோய்கள், மர்மக் காய்ச்சல், சென்னை நகர் (க.ஈ.)	488
மண்ணெண்ணெய் பற்றாக் குறை (ஒ.பி.)	461
மத்தியக் கூட்டுறவு வங்கியின் கடன் வசதி, உத்தரவாத வரையறையை உயர்த்துதல் (தீ.)	370—372
மாலை முரசு நாளேடு மீதும், திரு. இரா. நெடுஞ்செழியன் மீதும் (உ.பி.)	171, 175—176

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

புதன்கிழமை, 1979 மார்ச் 14.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1, வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

திருமங்கலம், உசிலம்பட்டி பகுதிகளில் பாசன வசதிகள்.

குறுகிய கால வினா எண் 13 திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வைகை-பெரியாறு சீர்திருத்தத்தின் மூலம் உபரியாக கிடைக்கிற சுமார் 40,000 ஏக்கருக்கு பாயக்கூடிய தண்ணீரை திருமங்கலம் உசிலம்பட்டி தாலுகாவில் உள்ள சுமார் 20,000 ஏக்கர் நிலங்களுக்காவது தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதா?

(ஆ) அப்படியானால் அதன் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு.—

(அ) & (ஆ): ஆம். பெரியாறு-வைகை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கிடைக்கும் உபரி தண்ணீரை, திருமங்கலம் வட்டத்தில் 3817 ஏக்கர் நிலங்களுக்கும், உசிலம்பட்டி வட்டத்தில் 1268 ஏக்கர் நிலங்களுக்கும் கூடுதலாகப் பாசன வசதி அளிக்க ஏற்பாடு செய்யுமாறு ஆணையிடப்பட்டது.

திரு. கே. கந்தசாமி: தலைவர் அவர்களே, திருமங்கலம் தாலுகா, உசிலம்பட்டி தாலுகா என்று இரண்டாகப் பிரிக்கப்பட்ட பகுதிகளில் வாழ்கிற பிரமலைக் கள்ளர் வகுப்பினருக்கு—குற்றப்பரம்பரையினர் சட்டத்தின்கீழ் ஆங்கிலேயர் காலத்தில்

[1979 மார்ச் 14

செய்யப்பட்டது—நல்லமுறையில் வாழ்க்கைவசதிகளை ஏற்படுத்த இந்த வைகை அணைக்கட்டுத்திட்டம் உருவாக்கப்பட்டு, —1928-ம் ஆண்டில் உருவாக்கப்பட்டு—1956-ல் இந்தத்திட்டம் நிறைவேற்றப்பட்டது. அன்றையதினம் ஆட்சிப்பொறுப்பில் இருந்தவர்கள் அரசியல் காரணங்களுக்காக அந்தப் பகுதிகளிலுள்ள பெரும்பகுதி மக்களுக்குத் தண்ணீர் கொடுக்காமல் வேறு பகுதிகளுக்கு அந்தத் தண்ணீரை எடுத்துச்சென்று அதற்குப் பின்னால் வந்தவர்கள் பல காரணங்களுக்காக அந்தப் பகுதி மக்களுக்குத் தண்ணீர் கொடுக்காமலிருந்ததும் நியாயத்திற்கு விரோதமானதாகும். ஆகவே வைகை—பெரியாறு சீர்திருத்தத்தின் மூலமாக உபரியாகக் கிடைக்கிற 40,000 ஏக்கருக்குப் பாயக்கூடிய தண்ணீரை திருமங்கலம், உசிலம்பட்டி தாலுகாக்களில் உள்ள சுமார் 20,000 ஏக்கர் நிலங்களுக்காவது அளித்தால் அங்குள்ள வறட்சி நிலையைப் போக்கி அங்குள்ள மக்களுக்கு நீதி செய்வதாகும் என்ற அடிப்படையில்தான் முதல் அமைச்சர் அவர்களிடமும் விவசாயத் துறை அமைச்சர் அவர்களிடமும் பல மனுக்கள் கொடுக்கப்பட்டு இதே சட்ட மன்றத்தில் நானும் இது பற்றிப் பேசியிருக்கிறேன். அப்படியிருந்தும் முன்னால் கொடுக்கப்பட்ட தண்ணீர்தான் கொடுக்கப்படுவதாகச் சொல்கிறார்கள். ஆகவே இது மறுபரிசீலனை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இருக்கக்கூடிய தொகுதியின் பக்கத்தில் இருக்கக்கூடிய திருமங்கலம் போன்ற தொகுதிகளிலும் பாசன வசதியை அதிகரிக்கவேண்டுமென்ற எண்ணத்தோடு மட்டுமல்ல, அங்குள்ள மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடும் அவர்கள் கொடுத்த மனுக்கள்பேரில் பரிசீலனை செய்துதான் இன்று ஏறத்தாழ ஆயிரம் ஏக்கருக்கு அதிகமாகப் பாசனவசதி கொடுத்திருக்கிறோம், மேலும் பாசன வசதியை அதிகரிக்க வேண்டுமென்றால் இத்திட்டத்திற்காக தண்ணீர் கொண்டு செல்வதில் ஏற்படுகிற சேதாரத்தைக் குறைக்கும் வகையில் பெரியாறு—வைகை பாசனத் திட்டம் நவீனமயமாக்கப்படயிருக்கிறது. இதற்காக உலக வங்கியின் உதவியோடு ரூ. 41 கோடி அளவில் இந்தத்திட்டம் இன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்மூலம் 18,760 ஹெக்டேர் பாசனவசதி பெறுமளவில் இத்திட்டமிருக்கிறது. மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற நல்ல யோசனையை மனதில்கொண்டு அப்பகுதி மக்களுக்கு எவ்வளவு தூரம் அதிகத் தண்ணீர் கொடுக்க முடியுமோ அது ஆலோசிக்கப்படும்.

திரு. என். லட்சுமிநாராயணன் : இந்த வைகை—பெரியாறு சீர்திருத்தத்தில் இருக்கக்கூடிய உபரிதண்ணீரில் மதுரை மாநகர மக்கள் குடிநீருக்காக கஷ்டப்படுவதை மனதில்கொண்டு அதில் ஓரளவு ஒதுக்கப்படுமா?

1979 மார்ச் 14]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : குடிநீருக்காக உள்ள திட்டம் இதுவரையிலும் இல்லை. இதை எப்படி உபயோகிப்பது என்பதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

திரு. செ. சிவசாமி : திருமங்கலம் தாலுகாவிற்குத் தண்ணீர் கொடுப்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், வரவேற்கிறோம். அதே நேரத்தில் அந்தத் தண்ணீர் வைகை ஆயக்கட்டிலிருந்து எடுக்கப்படுவதாகத் தெரிகிறது. கிழக்கு முகவை மாவட்டம் முழுவதும் வைகை தண்ணீரை எதிர் பார்த்திருக்கிறோம். ஆகவே அந்தப் பகுதிகள் வரண்டுவிடாமல், ஏற்கனவே வரட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வரக்கூடிய தண்ணீரை தடுத்துவிடாமல் அந்தத் தண்ணீர் நிச்சயமாகக் கொடுக்கப்படும் என்பதற்கு காரண்டி தரப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஏற்கனவே நான் சொன்னதுபோல் வைகை—பெரியாறு திட்டம் மூலம சேதாரத்தைத் தவிர்ப்பதைப் பொறுத்துத்தான் நவீனமய மாக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆகவே உபரித் தண்ணீரைக் கொண்டுதான் மேலும் பாசனவசதியை அதிகரிக்க வேண்டுமே தவிர வைகையிலிருந்து தண்ணீர் எடுத்து ஏற்கனவே பாசனவசதி பெற்றுக் கொண்டிருக்கக்கூடிய நிலங்களைப் பாழடிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன் : திருமங்கலம், உசிலம்பட்டி பகுதிகள், வரலாற்றுக் காரணங்கள் எவ்வாறிருந்தாலும் இன்று மதுரைமாவட்டத்தில் கடுமையான வறட்சிப் பகுதிகளாக அவை இருக்கின்றன. அந்தப் பகுதியில்தான் இந்த அணை கட்டப்படுகிறது. ஆகவே அவர்களுக்கு முன் உரிமை கொடுக்க முயற்சி செய்து வைகை—பெரியாறு சீர்த்திருத்தத்தின் மூலம் கிடைக்கும் உபரி தண்ணீரை 10,000 ஏக்கருக்காவது கொடுக்க அரசு முயற்சிக்குமா என்ற வாக்குறுதியைப்பெற விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சேதாரத்தைத் தவிர்க்கும்பொருட்டு, நவீனப் பணிகள் மூலமாகச் சீரமைப்புத் திட்டத்தின் மூலமாக ஏறத்தாழ 40 ஆயிரம் ஏக்கர் புதிய பாசனம் பெறும். அந்த 40 ஆயிரம் ஏக்கர் எந்தெந்த தாலூக்காக்களில் வறட்சி மிகுந்திருக்கின்றதோ அந்த இடங்களிலும், விவசாயப் பெருங்குடி மககளுக்கு உதவி கிடைக்கின்ற வகையிலும் இந்தப் பாசனம் அமையவேண்டும் என்பதை உத்தேசித்துத்தான் இந்தக் கணக்கு போடப்பட்டு வருகிறது. இன்னும் உபரியாக கிடைக்குமானால் அதையும் பாசனத்திற்காக உபயோகப்படுத்துவதற்கு- அதையும் அதிகப் படுத்துவதற்கு அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியாறு–வைகை சீரமைப்புத் திட்டத்தின் மூலமாகக் கிடைக்கின்ற உபரியாக கிடைக்கின்ற தண்ணீர் மூலமாக வறட்சிபிரதேசமாக இருக்கின்ற 7 ஆயிரம் ஏக்கர் பாசனம் பெறப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. மேலும் இப்போது 40 ஆயிரம் ஏக்கர் பொதுவாக பாசனம் பெறும் என்று சொல்லப்பட்டிருப்பதால், இதை (alternative) அல்டர்நேட்டிவ் முறையில்–அதாவது ஒரு போகத்திற்கு ஒரு பகுதியும், இன்னொரு போகத்திற்கு இன்னொரு பகுதியும் பலன் பெறுகின்ற வகையில் பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தின் ஆயக்கட்டுகளுக்குக் கொடுப்பது போல் இங்கும் கொடுப்பதற்கு செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, தேனி தொகுதியைப் பொறுத்தவரையில், ஏற்கனவே அங்குள்ள பி. டி. ராஜன் வாய்க்கால் மூலமாக அதிகமான அளவில் பாசனம் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது, மேலும் அந்தப் பகுதியில் பாசனத்தை அதிகப்படுத்துகின்ற அளவில் வைகை–பெரியாறு சீரமைப்புத் திட்டத்தின் மூலமாகக் கிடைக்கின்ற தண்ணீரை, பரம்பிக்குளம்-ஆளியாறு பகுதிகளில் கொடுக்கப்பட்டு வருவதைப்போல் தண்ணீர் கொடுக்க ஆரம்பித்தால, ஏறத்தாழ 2, 3 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் தண்ணீர் கொடுக்கவேண்டிய சூழ்நிலை இங்கு ஏற்படும். ஆகவே இப்போது இருக்கின்ற முறையிலேயே தண்ணீர் கொடுக்க முன் வந்தால்தான் அங்குள்ள விவசாயப் பெருங்குடி மக்களுக்கு மிக உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Oil exploration in Thittacheri

* Q No. 380– THIRU S. J. SADIQ PASHA: Will the Hon. Chief Minister be pleased to state

(a) whether the Oil and Natural Gas Commission is engaged in oil exploration in Tamil Nadu;

(b) whether it is a fact that in the well known as 'Karaikal 10' oil is struck in Thittacheri in Thiruchy district, and

(c) whether the Government are aware that Oil and Natural Gas Commission has a proposal to move the staff and the machinery engaged in oil exploration from Thittacheri to Rajamandry?

1979 மார்ச் 14]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம். எண்ணெய் மற்றும் இயற்கை வாயுக் குழு தமிழகத்தில் காவிரி ஆற்றுப் பள்ளத்தாக்கிலும், பால்க் சந்தி, மன்னார் வளைகுடாவின் கரையோரங்களிலும் தற்பொழுது எண்ணெய் கண்டுபிடிப்பதில் ஈடுபட்டுள்ளது,

(ஆ) ஆம். எண்ணெய் மற்றும் இயற்கை வாயுக் குழு தஞ்சை மாவட்டம், நன்னிலம் வட்டம், திட்டச்சேரி கிராமத்திற்கருகில் காரைக்காலுக்கு எட்டு கிலோ மீட்டர் தென்மேற்கிலுள்ள ''காரைக்கால்—10'' என்னும் பெயருள்ள கிணற்றில் சிறிதளவு எண்ணெய் கிடைப்பதாக அறிவித்துள்ளது. நில மட்டத்திற்கு 1,650 மீட்டர் ஆழத்தில் காணப்படுகின்ற இவ்வெண்ணெய் வணிக மதிப்பற்றதாகும்,

(இ) ஆம். கடந்த 13 மாதங்களாக காரைக்கால் பகுதியில் துளைபோடும் இயந்திரங்கள் இல்லாததால் துளை போடும் குழுவினர் மாற்றப்பட்டனர். ஆய்வுக்குழுவினரும் பகுதிப் பிரிவினரும் இப்பகுதியில் தொடர்ந்து வேலை செய்வார்கள்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில இடங்களில் எண்ணெய் கிடைக்குமா என்கின்ற பரிசோதனை நடத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். அதில் காவேரி பகுதிகளில் நடைபெற்ற முயற்சிகள் வெற்றிகரமாக எண்ணெய் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறதா? அவ்விதம் கண்டு பிடிக்கப்பட்டதில் பெட்ரோலியம் எண்ணெய் அதில் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா? இதிலுள்ள இயந்திரங்களை வேறு இடங்களுக்கு மாற்றியிருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. இதை மத்திய சர்க்காரிடம் வற்புறுத்தி அந்த இயந்திரங்களை மீண்டும் வரவழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ''காரைக்கால்—10'' என்கிற இடத்திலுள்ள கிணற்றில் எண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அது வணிக ரீதியில் இருக்குமா என்ற ஐயப்பாடும் இருக்கின்றது. மேலும், துளைபோடும் இயந்திரம் டான்சானியாவுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. ஏன் அப்படி அனுப்பினார்கள் என்று நான் பார்த்த அளவில் எனக்கும் விவரம் தெரியவில்லை. மத்திய சர்க்காருக்கு தமிழகத்தைவிட டான்சானியா முக்கியமாக இருந்திருக்கலாம்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, காவேரி வட்ட பகுதிகளில் எண்ணெய்க் கிணறுகள் தோண்டி எண்ணெயை வெளிக்கொணரவேண்டும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் மிகவும் பாடுபட்டார்கள். இடையில் இயற்கை அவரை நம்மிடமிருந்து பிரித்துவிட்டது. ஆகவே

இன்றைய அரசு-பல நல்ல காரியங்களை நடத்தவேண்டும் என்று எண்ணுகின்ற இந்த அரசு-எரிவாயு குழுவினரிடம் இதை எடுத்துக்கூறி காவேரி டெல்டா பகுதிகளிலுள்ள எண்ணெயை வெளி கொணருவதற்கானக் முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபடுவதற்கு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இந்த அரசு தொடர்ந்து மத்திய அரசை இதற்காக வற்புறுத்தும்.

[முற்பகல் 9-10]

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே உள்ள எண்ணெய் கண்டுபிடிக்கும் எந்திரத்தை டான்சானியாவுக்கு அனுப்பியிருக்கிறார்கள் என்றால், அதற்குப் பொறுப்பான மத்திய பெட்ரோலிய அமைச்சர் மீது ஒரு கண்டனத் தீர்மானத்தை இந்தச் சபையில் கொண்டுவர இந்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, கண்டனத் தீர்மானம் தேவையில்லை. மீண்டும் வற்புறுத்தினாலே போதும்.

வடபாதிமங்கலத்தில் கரும்புப் பண்ணைக் கழகத்திற்குச் சொந்தமான நிலம்

* வினா எண் 381—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகத்தைச் சேர்ந்த வடபாதிமங்கலம் பகுதியில் உள்ள கழகத்திற்குச் சொந்தமான நிலம் எவ்வளவு?

(ஆ) இதில் வேலை பார்க்கும் தொழிலாளர்கள் எவ்வளவு பேர்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) இந்நிறுவனத்திற்குச் சொந்தமாக வடபாதிமங்கலம் பகுதியில் 3,910 ஏக்கர் 71 சென்ட் நிலம் உள்ளது,

(ஆ) இக்கழகத்தில் 205 நபர்கள் நிரந்தரப் பணியாளர்களாகவும் 17 நபர்கள் தற்காலிகப் பணியாளர்களாகவும் வேலை செய்து வருகிறார்கள்.

1979 மார்ச் 14]

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகத்தின்கீழ் இருக்கும் இந்த அமைப்பிற்கு 3910 ஏக்கர் நிலம் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இதிலே வேலை செய்கின்றவர்கள் 205 பேர்கள் நிரந்தரம், 17 பேர்கள் தற்காலிகம் என்று அரசாங்கமே அறிவித்திருக்கிறது. இங்கே கான்ட்ராக்ட் முறை அமுலாக்கப்பட்டு, உண்மையான தகவலை கொடுக்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அங்கே 4,500 பேர்கள் வேலை செய்கின்றார்கள் என்ற இந்தத் தகவலும் அரசுக்குத் தெரியுமா? இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் விளக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, 1-7-77 முதல் 31-7 78 முடிய உள்ள காலத்தில் 773 ஆண்களும், 599 பெண்களும் தினக் கூலி அடிப்படையில் எடுத்துக் கொள்ளப்பட்டனர்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, அங்கே இருக்கக்கூடிய வடபாதிமங்கலம் ஸுகர் பாக்டரியின் ஓனர் சீலிங்கிலிருந்து தப்பிப்பதற்கு ஏராளமான நிலங்களை இதோடு சேர்த்து வைத்திருக்கிறார்கள். என்னுடைய கேள்வி என்னவென்று சொன்னால் அந்த நிலங்களை இந்தக் கார்ப்பரேஷன் எடுத்துக் கொள்ள முறையான நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவ அவர்களே. அந்த நிலத்தைத் தான் இநதக் கார்ப்பரேஷன் எடுத்து, அதிலே கரும்பு பயிரிட்டு, சர்க்கரை ஆலைக்குக் கொடுப்பது என்கிற வகையில், இந்த நிலங்கள் எல்லாம் இப்போது அரசாங்கத்திற்குச் சொந்தமாக உள்ளன.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்புப்பண்ணைக் கழகத்தில் 3,918 ஏக்கர் நிலங்களை எடுத்துக் கொண்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் தகவல் சொன்னார்கள். அது அரசாங்கத்தினிடத்திலே இருக்கிறது என்றும் சொன்னார்கள். அதையே நம்பி வாழ்ந்த ஆயிரக்கணக்கான அரிசனக் குடும்பங்கள், வடபாதிமங்கலம் தியாகராஜ முதலியார் அவர்களால் பழிவாங்கப்பட்டு, இப்போது நிர்க்கதியாக இருக்கிறார்கள். எனவே, அந்த நிலங்களை இத்தகைய ஏழை அரிசனங்களுக்கும், மற்றுமுள்ள ஏழைகளுக்கும் சொந்தமாக்குவதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை நல்ல யோசனை, அரசு இதைப் பரிசீலிக்கும்.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 773 ஆண்களும், 599 பெண்களும் அங்கே பணியாற்றுவதாகச் சொன்னார்கள். அவர்கள் அனைவரும் நிரந்தரமாக்கப்படுவதற்கு, தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகத்திற்கு அரசு ஆலோசனை வழங்குமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்தக் கரும்புப் பண்ணைக் கழகம், '1 ஆம் ஆண்டு சட்டம் கொண்டு வரப்பட்டபோது, ஒரு தனியாருடைய நிலத்தை எடுத்து மற்றவர்களுக்கு விநியோகம் செய்வதற்குப் பதிலாக நிறுவப்பட்ட ஒரு அமைப்புபோல் தெரிகிறது. ஆகவே, இந்தக் கரும்புப் பண்ணை தேவையா என்பதை இந்த அரசு பரிசீலிக்க இருக்கிறது.

அவினாசி வட்டத்தில் கூட்டுறவுக் கடன்கள் வசூல்

*வினா எண், 382—திரு. சொ. ந. பழனிசாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) அவினாசி தாலுகா மங்கரசவளையபாளையம், தண்டுக்காரம்பாளையம், பழங்கரை, கைக்காட்டி புதூர் ஆகிய கிராமங்களில் கூட்டுறவு அதிகாரிகள் வண்டி, எருதுகள், சைக்கிள்கள் மற்றும் இதரபொருட்களை ஜப்தி செய்தது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) மங்கரசவளையபாளையம், குமாரபாளையம், மற்றும் கைக்காட்டிபுதூர் கிராமங்களில் ஜப்தி நடவடிக்கைகள், 8-6-78 மேலும் 10-6-78 அன்றும் எடுக்கப்பட்டன.

(ஆ) திருவாளர்கள் கணபதியப்பக்கவுண்டர், பழனிச்சாமி, மாரப்பகவுண்டர் ஆகிய மூன்று பெரிய விவசாயிகள் வீடுகளில் உள்ள எருது, சைக்கிள், மாட்டுவண்டி, கடிகாரம், மேஜை முதலான பொருட்கள் ஜப்தி செய்யப்பட்டன. மூவரும் சிறிய விவசாயிகள் அல்ல.

திரு. சொ ந. பழனிசாமி: கூட்டுறவுக் கடன்களை வசூலிக்க முற்படும் அரசு ஊழியர்கள் விவசாயிகளைத் துன்புறுத்துகிறார்கள் என்பதை அரசு அறியுமா? வெள்ளம்,

1979 மார்ச் 14]

புயல் போன்ற இயற்கை உற்பாதங்கள் ஏற்படும்போது விவசாயிகள் தவிர மற்றத் துறையில் இருப்பவர்கள் நிவாரண உதவிகள் பெற முடிகிறது. விவசாயிகளுக்கு இந்த உற்பாதங்களால் ஏற்பட்ட சங்கடங்களை நிவர்த்தி செய்யும் வகையில் 1977-78-ம் ஆண்டு வரை விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடன்களை வஜா செய்யவும் அதற்குப் பிறகு வாங்கிய கடன்களை நீண்ட காலக் கடன்களாக மாற்றவும் அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : 16-12-78-ம் நாளில் இருந்து எந்த விவசாயிகளின் மீதும் ஜப்தி நடவடிக்கை கூடாது என்றும் இந்நிலை இன்று வரை தொடருகிறது என்றும் விவசாயிகள் உச்ச மட்டக்குழு பரிந்துரை வரும் வரை ஜப்தி நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ளாது என்றும் உங்கள் மூலம் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கான்சாபுரத்திலுள்ள கூட்டுறவு நாணய சங்கம்

*வினா எண் 383—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி கான்சாபுரம் பஞ்சாயத்து மன்ற பகுதியில் உள்ள கூட்டுறவு நாணய சங்கத்தில் பணம் கையாடல் நடைபெற்றுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) முகவை மாவட்டத்தைச் சேர்ந்த திருவில்லிபுத்தூர் தொகுதி கான்சாபுரம் பஞ்சாயத்து மன்றப் பகுதியில் உள்ள கூட்டுறவு நாணய சங்கத்தில் பணம் கையாடல் நடை பெற்றுள்ளது உண்மை.

(ஆ) இது பற்றி காவல் துறையின் ஒரு முழுமையான புலனாய்வுக்கு அனுப்பப்படவிருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட தலைவர் ஒரு வக்கீலாக இருக்கிறார். இவர் கையாடல் பண்ணியிருக்கிறார். கூட்டுறவு அதிகாரிகள் நான்கு வருஷங்களுக்கு முன்னால் ஒப்புதல் கொடுத்து முறைப்படி ஏ. பி. பி. அனுமதி வழங்கி வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அவர்

வக்கீலாக இருக்கும் காரணத்தால் சம்பந்தப்பட்ட ஏ. பி. பி.யை சரிக்கட்டிக் கொள்கிறார். மேலும் சொந்தம் முறை கொண்டாடி வழக்கு தொடர முடியாத நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறார். ஆகையால் சம்பந்தப்பட்ட இந்த கேசில் அமைச்சர் அவர்கள் நேரடியாகக் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா? எவ்வளவு தொகை கையாடல் செய்யப்பட்டது? யார் யார் இதிலே சம்பந்தப்பட்டிருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : இந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் சார்பாகப் பணம் முறைகேடுகளில் ஈடுபட்டவர்கள் என்று இன்றைய தினம் கூட்டுறவுச் சங்கத்தினுடைய 65-வது பிரிவின்கீழ் விசாரணை செய்யப்பட்டு இன்றையதினம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பவர்கள் 5 பேர். 1. திரு. கே. ராமசாமி, முன்னாள் செயலாளர்; 2. திரு. டி. கதிரேசன். பி. எஸ். சி., பி. எல்., சங்கத் தலைவர். 3. திரு. கே. முத்தையா, சங்கத்தின் முன்னாள் இயக்குநர், 4. திரு. பால் பாண்டியன், முன்னாள் சரக மேற்பார்வையாளர், 5. திரு. என். சுப்பிரமணியம், அனுமதிக்கப்பட்ட முன்னாள் எழுத்தர், சங்கத்தின் செயலாளர்.

இவர்கள் ஐந்து பேர் மீதும் இன்றையதினம் 65-வது பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டு அவர்கள் ஏறத்தாழ 3171ரூபாய் கையாடல் செய்திருக்கிறார்கள் என்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது மேலும் அவர்கள் மீது கிரிமினல் குற்றங்கள் இருக்கின்றனவா, இருந்தால் எப்படி மேல் நடவடிக்கை எடுப்பது என்பதற்காக உயர்நீதி மன்ற அரசு வழக்குரைஞரைக் கலந்து ஆலோசித்து காவல் துறையினரின் முழுமையான புலனாய்வுக்குப் பிறகு மீண்டும் இவைகளில் மேல் நடவடிக்கைகள் எடுக்கலாம் என்று அரசு ஆலோசனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : அந்தக் கூட்டுறவு விவசாய நாணயச் சங்கம் இப்போது செயல்படாத நிலை இருக்கிறது. அவர் லட்சக் கணக்கில் கையாடல் செய்து பினாமி பெயரில் சொத்துக்கள் வாங்கி வைத்திருக்கிறார். அந்தச் சொத்துக்களை ஜப்தி செய்யவும், கூட்டுறவுச் சங்கத்தைச் செயல்படுத்தவும் அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்துக்களை மனதில் வைத்துக்கொண்டு தக்க நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும்.

1979 மார்ச் 14]

யமாகா அவுட் போர்டு மோட்டார்கள் வாங்கல்

* வினா எண் 384—திரு. தி. சு. நல்லதம்பி: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) மீன்வளத் துறைக்காக, யமாகா அவுட் போர்டு மோட்டார்கள் பெருமளவில் வாங்க அரசு உத்தேசித்து உள்ளதா?

(ஆ) ஆம் எனில் மேற்படி மோட்டார்களின் செயல் திறனைப்பற்றி பரிட்சார்த்தமாக பரிசீலிக்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. க. உஸ்ரோ. எட்மண்ட்:

(அ) தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம், ஜப்பானிலிருந்து 200 யமாகா அவுட்போர்டு மோட்டார்களை இறக்குமதி செய்ய தீர்மானித்திருக்கிறது.

(ஆ) தமிழ்நாட்டு கடற்கரைப் பகுதிகளான சென்னை, தஞ்சை, இராமநாதபுரம் மாவட்டப்பகுதியில், தமிழ்நாடு மீன் துறை கட்டுமரங்களில் யமாகா அவுட் போர்டு மோட்டார்களை இணைத்து ஒட்டி பரிசோதனை செய்தது. மீனவர்களுக்கும் இம்முறை மன நிறைவையும் அதிகமான மீன் பிடிப்பதற்கான வாய்ப்புகளையும் ஏற்படுத்தியுள்ளது.

(முற்பகல் 9-20)

திரு. தி. சு. நல்லதம்பி: பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் 200 யமாகா அவுட் போர்டு மோட்டார்கள் வாங்குவதற்கு ஏற்பாடு செய்ய அரசு தீர்மானித்திருக்கிறது என்று சொன்னார்கள். ஏற்கனவே சென்ற ஆண்டு ஜப்பானுக்குச் சென்று வாங்கி வந்ததாகவும் அது இந்தியத் துறைமுகத்தில் வந்தவுடனே, 3, 4 மோட்டார்கள் பழுதுபட்டு விட்டதாகவும் அதன் காரணமாக அதற்குச் செலவுகள் செய்யப் பட்டதாகவும் சொல்லப்படுகிறதே, அது உண்மையா?

மாண்புமிகு திரு. க. உஸ்ரோ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்பேர்ப்பட்ட ஆதாரமற்ற தவறான செய்திகளை மாண்புமிகு உறுப்பினர் இந்த அவையிலோ வெளியிலோ சொல்லாமல் இருப்பது அவருக்கும் நல்லது, நாட்டிற்கும் நல்லது.

திரு. தி. சு. நல்லதம்பி: தலைவர் அவர்களே, நாட்டிற்கு நன்மை என்ற காரணத்தால் தான் இப்படிப்பட்ட மோட்டார்கள் வாங்கத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது என்பதால் இதைவிட விலை மலிவாகவும் செயல் திறன் அதிகமாகவும் உள்ள மோட்டார்கள் இந்தியாவிலே தயாரிக்கப்படக்கூடிய நிலைமை

இருப்பதை நிர்வாகத்தினுடைய சம்பந்தப்பட்டவர்கள் இந்த அரசை அணுகி அதற்கு கொட்டேஷன்கள் தந்ததாக அறிகிறோம். அப்படி இருக்கும்போது ஏன் வெளிநாட்டிற்குச் சென்று வாங்க வேண்டுமென்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, ஜப்பானிலே தயாரிக்கப்படுகிற இந்த யமாகா அவுட் போர்டு மோட்டார்களைத் தயாரிக்கக்கூடியவர்கள் இந்தியத் துணைக் கண்டத்திலேயும்த் பல்வேறு இடங்களிலே அவைகளைத் தயாரிக்கிறார்கள். அந்தத் தயாரிப்பாளர்களையெல்லாம் அழைத்து நானும் அதிகாரிகளும் ஏற்கனவே பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறோம். ஆனால் அவர்கள் சொல்கிற விலை ஜப்பானிலே உற்பத்தி செய்யப்படுகிற யமாகா அவுட் போர்டு மோட்டார் எஞ்சின்கள் இங்கே இறக்குமதியாகின்ற கட்டத்திலே ஆகின்ற விலையை விட அதிகமாக இருக்கிறது என்பது உண்மை. இன்னொன்று, இந்தியத் துணைக் கண்டத்திலே தயாரிக்கப்படுகிற எஞ்சின்கள் பெட்ரோலால் ஓடுகிற எஞ்சின்களாக மட்டும் இருக்கின்றன. ஆனால் ஜப்பானிலே தயாரிக்கப்படுகிற எஞ்சின்கள் மண்ணெண்ணெயினால் ஓடக்கூடிய என்சின்களாக இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினருக்கு தெரியும், இப்போது உள்ள நிலையில் பெட்ரோலை வைத்து எஞ்சினை ஓட்டி மீன்பிடிப்பது அவர்களுக்குக் கட்டுபடியாகாது. ஆகவே மண்ணெண்ணெய் வைத்து எஞ்சினை ஓட்டி மீன் பிடிப்பது தான் அவர்களுக்கு எளிதாக இருக்கும். இந்த இரண்டு காரணங்களால் பரீட்சார்த்தமாக, டிரயிலாக, எக்ஸ்பெரிமண்டலாக, செய்ய வேண்டுமென்ற அளவிலே ஜப்பானிலேயிருந்து 200 என்சின்களைத் தருவிக்க அரசு முடிவு செய்து மத்திய அரசிடம் அனுமதி கேட்டு அவர்கள் 200 எஞ்சின்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதியை அளித்திருக்கிறார்கள். அதற்கான அன்னியச் செலவாவணியையும் அனுமதித்து இருக்கிறார்கள். முதலிலே எக்ஸ்பெரிமண்டலாக, பார்த்து விடுவதற்காக, 10 என்சின்களை மட்டும் இறக்குமதி செய்வதற்காக இந்த அரசு உத்திரவு பிறப்பித்திருக்கிறது.

டாக்டர் கே. சமரசம்: தலைவர் அவர்களே, இந்த மீன் வளத் துறைக்கு யமாகா அவுட்போர்டு மோட்டார்கள் வாங்குவது எங்கு எங்கு பயன்படுத்தப்படுவதற்காக? கடலிலே மட்டும் பயன் படுத்தும் சாதனமா அல்லது பெரிய அணைக்கட்டுப் பகுதிகளிலேயும் பயன்படுத்தமுடியுமா?

மாண்புமிகு திரு.க. உரொ.எட்மண்ட்: தலைவர் அவர்களே, இந்த யமாகா அவுட் போர்டு மோட்டார் என்சின்கள் மீன் பிடிப்பதற்காகத் தண்ணீரிலே ஓடுகின்ற எந்தப் படகிலேயும் பொருத்துவதற்குப் பொருத்தமாக இருக்கும்.

1979 மார்ச் 14]

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, ஜப்பானிலே வாங்கப்படுகிற எஞ்சினின் விலை என்ன? அதே போன்று இந்தியாவிலே அவர்கள் சொல்கிற விலை என்ன? இந்தியாவிலே தயாரிக்கப்படுகிற எஞ்சினை வாங்கிப் பரீட்சார்த்த மாகப் பார்ப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, ஜப்பானிலிருந்து தருவிக்கப்பட உத்திரவிடப்பட்டிருக்கிற 200 எஞ்சின்களின் விலை அன்னியச் செலாவணி ரூபாய் 11 இலட்சத்து 5,802. அதாவது ஒரு இலட்சத்து 29,600 அமெரிக்கன் டாலர்கள். இதைக் கணக்கிட்டுப் பார்த்தால் ஒரு எஞ்சினுக்கு, துறைமுகத்திலே இறக்குமதியாகும்பொழுது நமக்கு ஏற்படும் விலை ஏறக்குறைய ஐயாயிரத்து ஐநூறு (5,500) ரூபாய்க்கு அருகில் வருகிறது. இங்கே தயாரிக்கப்படுகின்ற எஞ்சின்களின் விலையெல்லாம் இதைவிடக் கூடுதலாகத்தான் இருக்கிறது. அது மட்டுமல்லாமல், நான் ஏற்கனவே சொன்னதைப்போல நம்முடைய மீனவர்களுக்குப் பொருத்தமானது மண்ணெண்ணெயால் ஓடுவதுதான் பொருத்தமாக இருக்கும். பெட்ரோலால் ஓடும் என்சின்கள் பொருத்தமாக வராது. இப்பொழுதே நான்கு ரூபாய் விற்கிறது. அதைக் கணக்கில் வைத்துதான் இந்த எஞ்சின்களை வாங்குவது என்று இப்பொழுது அரசு முடிவு செய்தது.

விவசாயப் பொருட்களுக்கான கொள்முதல் விலை அறிவிப்பு,

* வினா எண் 385—திரு. துரை முருகன் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விதை விதைக்கும் பருவத்திற்கு முன்பே, விவசாய பொருட்களுக்கான கொள்முதல் விலை அறிவிக்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் சாதக பாதகங்களை மத்திய அரசுக்கு மாநில அரசு அறிவித்ததா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :

(அ) ஆம்.

(ஆ) விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு விதை விதைக்கும் பருவத்திற்கு முன்பே விவசாயி விளை பொருட்களுக்கு கொள்முதல் விலை அறிவிக்கப்பட வேண்டுமென்று மத்திய அரசிடம் மாநில அரசு வற்புறுத்தி வந்துள்ளது. அடுத்த ஆண்டு முதல் இவ்வாறு செய்யப்படுமென்று மத்திய அரசு இப்பொழுது அறிவித்துள்ளது.

[1979 மார்ச் 14

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, விதை விதைக்கும் பருவத்திற்கு முன்பே விலை அறிவிக்கப் படும் என்று அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எந்தெந்த விளைபொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்யப்படும்? நெல் போன்ற தானியங்களுக்கு இப்பொழுது இருக்கும் விலையை விட அதிகமாக விலை நிர்ணயம் செய்வதற்கு மத்திய அரசு ஏதேனும் அறிவித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மத்திய அரசாலே இப்பொழுது எந்தெந்த உணவுப்பொருட்களுக்குக் கொள்முதல் விலை நிர்ண யிக்கப்பட்டிருக்கிறதோ அந்த உணவுப்பொருட்கள் எல்லா வற்றிற்கும் அடுத்த ஆண்டு முதல், விதை விதைக்கும் காலத் திலேயே அதற்கான விலை மத்திய அரசால் நிர்ணயிக்கப்படும். விலை அதிகமாகக் கூட்டித் தரப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்டார்கள். பலமுறை இந்த மன்றத்திலே சொல்லியிருக்கிறேன், எந்த உணவுப் பொருளுக்கும் விலை நிர்ணயம் செய்யும் அதிகாரம் மத்திய அரசினிடத்திலே இருக் கிறது, மாநில அரசுக்கு இல்லை. இந்த அரசு தொடர்ந்து மத்திய அரசிடம், நெல்லுக்குக் கூடுதல் விலை கொடுக்க வேண்டும், இங்கே நெல் உற்பத்திக்காகும் செலவின் அடிப்படையில் அதிக விலை கொடுக்க வேண்டும், உற்பத்தி 117 ரூபாய் வருகிறது. ஆகவே, 130 ரூபாய் கொடுக்க வேண்டும், அப்படியில்லா விட்டால் கோதுமைக்குக் கொடுப்பதைப் போலாவது நெல்லுக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று இந்த அரசு மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தி வருவதையும், தென் மாநில முதல்வர்கள் மாநாட்டை நம்முடைய தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் கூட்டிய நேரத்திலும் இதற்கான தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பியதையும் இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரவர்கள் சுருக்கமாகச் சொல்லியிருந்தால் துணைக் கேள்விகள் இத்தனை எழாது. அமைச்சரவர்கள் விரிவாகச் சொல்வதால்தான் துணைக் கேள்விகள் நிறைய எழுகின்றன. எனவே, சுருக்கமாகச் சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஒ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவரவர்களே, விதை வினியோகம் செய்யும்பொழுது அதன் முளைப்புத் திறனைப் பரிசோதித்துப் பார்க்கிறார்களா? சில கிட்டங்கிகளில் —டெப்போக்களில்—முதல் ஆண்டு விதைகள் விற்காமல் இருந்தால்

1979 மார்ச் 14]

மறு ஆண்டும் அதே விதைகள் விற்கப்படுவதாகக் குறை கூறப்படுகிறது. அது உண்மையாக இருந்தால் அதைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மூலக் கேள்வி விவசாயப்பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்யப்படும் காலத்தைப் பொறுத்தது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்பது விதையின் தரத்தைப் பொறுத்தது. இரண்டுக்கும் பொருத்தமில்லை.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: தலைவரவர்களே, நெல்லுக்கு விலையை நிர்ணயிப்பதைப்போல இதர உணவுப் பண்டங்களுக்கும் விலை நிர்ணயம் ஏற்பட அரசு முன் ஏற்பாடு உண்டா? அதேபோல பருத்தி, கரும்பு, நிலக்கடலை போன்ற உற்பத்திப் பொருட்களுக்கு விலை நிர்ணயிக்கும் ஏற்பாடு உண்டா? அப்படி ஏற்பாடு செய்யக்கூடிய நேரத்தில் உற்பத்தியாகும் பொருட்களை விவசாயிகளிடமிருந்து அந்த விலைக்குச் சேகரம் செய்ய அரசு என்ன ஏற்பாட்டை மேற்கொள்ளவிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கரும்புக்கு ஏற்கனவே விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அந்த விலை போதாது என்றுதான் கரும்பு உற்பத்தியாளர்கள் இப்பொழுது போராட்டம் நடத்திக்கொண்டு வருகிறார்கள். தங்கள் பிரச்னைகளையெல்லாம் அரசாங்கத்தின் முன் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அது மத்திய அரசு வரைக்கும் போயிருக்கிறது என்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும்.

நிலக்கடலைக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது என்றாலும் நிலக்கடலை விலை நிர்ணயம் செய்யப்பட்டதற்கும் அதிகமான விலையிலே வெளிச்சந்தையிலே இப்பொழுது விற்றுக் கொண்டிருக்கிறது.

[முற்பகல் 9.30]

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, நெல் விலை நிர்ணயம் பற்றி இங்கே கேள்வி கேட்டார்கள். இப்பொழுது ரஷியப் பிரதமருக்கும் இந்தியப் பிரதமருக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலே 6 இலட்சம் டன் நெல்லை, பெட்ரோலுக்குப் பதிலாக வழங்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, இப்பொழுது வாய்ப்பிருக்கிற காரணத்தாலே மத்திய சர்க்காரை வலியுறுத்தி, மீண்டும் விலையை ஏற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1979 மார்ச் 14

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, தொடர்ந்து இந்த அரசு, நெல்லுக்கு அதிக விலை கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்திக்கொண்டுதானிருக்கிறது. இவற்றை மனதிலே வைத்து, பாரதப் பிரதமருக்கும் ரஷியப் பிரதமருக்கும் இடையிலே ஏற்பட்டிருக்கிற ஒப்பந்தத்தின்படி, நெல், அரிசி ஏற்றுமதி செய்யப்படுகிற சூழ்நிலையில் அதற்கான விலையைக் கூட்டிக் கொடுக்கிற பொறுப்பு மத்திய அரசைப் பொறுத்தது என்றாலும் இந்த அரசு இந்த சூழ்நிலையைப்பயன்படுத்தி மத்திய அரசை வலியுறுத்தும்.

திரு. மா. மணிமாறன்: பேரவைத் தலைவரவர்களே, கோதுமைக்குக் கொடுப்பது போல், நெல்லுக்குக் கூடுதல் விலை கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசிடம் இந்த அரசு தொடர்ந்து வாதாடி வந்துகொண்டிருக்கிறது. இதற்கு ஒரு முடிவு காணமுடியுமா? இல்லையென்றால், மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்தி, கூடுதல் விலை பெற ஒரு தீர்மானம் நிறைவேற்ற அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாநில அரசு தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டே வருகிறது, மீண்டும் அரசு வற்புறுத்துமா என்ற கேள்வியைத்தான் இறுதியிலே கேட்டார்கள். அதைத்தான் முதலிலே சொன்னேன். தொடர்ந்து மாநில அரசு வற்புறுத்தி வருகிறது. குறைந்தபட்சம் கோதுமைக்குக் கொடுக்கிற விலையை நெல்லுக்குக் கொடுக்க வேண்டுமென்று இந்த அரசு வலியுறுத்திக் கொண்டிருக்கிறது. இந்த அவையிலே தீர்மானம் போடுவதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு பிரச்னையை இங்கே எழுப்பினார்கள். மாண்புமிகு முதல்வரோடு கலந்து அப்படிப் போட வேண்டிய அவசியம் ஏற்பட்டால், நிச்சயமாக இந்த அரசு தீர்மானம் போடுவதற்குத் தயங்காது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பொது நூலகங்கள்.

* வினா எண் 386—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

அனைத்து மாவட்டங்களிலுமுள்ள நூலகங்களை அரசே ஏற்றுக்கொள்ளும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: நூலக சீரமைப்புக் குழு அனைத்து நூலகங்களையும் அரசே தனது நேரடிப் பார்வையில் நடத்த வேண்டுமென்றும், நூலக ஆணைக் குழுக்கள் நடத்தத்

தேவையில்லை என்றும் பரிந்துரைத்திருந்தது. இதனை ஆய்ந்து அரசு கொள்கை அளவில் நூலக ஆணைக் குழுக்கள் சில மாற்றங்களுடன், நூலகப் பணியை தொடர்ந்து நடத்தலாம் என கருதுகிறது.

பொது நூலக அலுவலர்கள்.

*வினா எண் 387 — திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு பொது நூலகத்துறை அலுவலர்கள் அண்மையில் அரசுக்குக் கோரிக்கை ஏதேனும் விடுத்துள்ளனரா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) ஆம்.

(ஆ) கீழ்க்காணும் ஐந்து அம்சக் கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி இராமநாதபுரம் மாவட்ட நூலக ஊழியர்களிடமிருந்து கோரிக்கைகள் வந்தன:—

1. மாதந்தோறும் 1-ந் தேதி ஊதியம் வழங்க வேண்டும்,

2. குடும்ப நலப் பாதுகாப்புத் திட்டம் ரூ.10,000 நூலகப் பணியாளர்களுக்கும் வழங்க வேண்டும்.

3. ஓய்வு ஊதியம் வேண்டும்.

4. பதவி உயர்வுக்கான வாய்ப்புக்களை உருவாக்க வேண்டும்.

5. அனைத்துப் பிரச்சனைகளையும் தீர்க்கும் வண்ணம் நூலக ஊழியர்களை அரசுப் பணியாளர்களாக விரைவில் அறிவிக்க வேண்டும்.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் எத்தனை நூலகங்கள் இருக்கின்றன? புதிதாக, நூலகங்களைத் துவக்க இந்த அரசு முயற்சி எடுத்துள்ளதா? நூலகங்களை, நூலக ஆணைக் குழு நடத்துவதற்கும் அரசே நடத்துவதற்கும் என்ன வேறுபாடு இருக்கிறது? நூலக ஆணைக் குழு ஊழியர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கு அளிப்பதைப் போன்ற சலுகைகளை அளிக்க, அரசு நிதித்துறை சிறப்புத் தனி அதிகாரி திரு. சீனிவாசனைக் கொண்ட கமிட்டி போட்டது, அதனுடைய முடிவு என்ன? எனவே, நூலக ஆணைக் குழு ஊழியர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கு வழங்குவது போன்ற.....

[1979 மார்ச் 14

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இத்தனை துணைக் கேள்விகளைப் போட்டால், அமைச்சர் நினைவில் வைத்து எப்படி பதில் சொல்ல முடியும்? 4 துணைக் கேள்விகள் போட்டீர்கள், உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நூலகப் பணியாளர்களை அரசுப் பணியாளர்களாக்க வேண்டுமென்பது நூலகச் சீர்திருத்தக் குழுவின் முக்கிய பரிந்துரைகளில் ஒன்று. அரசு ஊழியர்களுக்குக் கிடைக்கும் சலுகைகள் நூலக ஊழியர்களுக்கும் தரப்பட, பின்னவர்களை அரசு ஊழியர்களாக ஆக்குவதுதான் நல்லதா, அல்லது உள்ளாட்சிக் கழக ஊழியர்களுக்கு இச்சலுகைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளது போலச் செய்தால் போதுமா என்பன போன்ற பல கருத்துக்களை அரசு மிகக் கவனத்துடன் ஆராய்ந்து வருகிறது. மேற் சொன்ன பரிந்துரைகளின்மீது அரசு முடிவு எடுக்கும்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, தங்களின் மேலான அனுமதியோடு தொடர்ந்து சில கேள்விகள் கேட்க விரும்புகிறேன். தமிழ்நாடு பொது நூலகங்களில் பணி புரியும் ஊழியர்கள் ஏனைய அரசு ஊழியர்கள் பெறும் எல்லாவித சலுகைகளையும் பெறுவதற்கு அரசு ஏற்பாடு செய்து வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அதை எப்பொழுது நிறைவேற்ற இருக்கிறார்கள் என்பதையும், தனியார்களுக்குச் சொந்தம் இல்லாத, பொது முன்னேற்றத்திற்குத் தேவையான சில நூலகங்களின் கட்டிடங்களுக்கு, காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் சரி, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலும் சரி, அந்தக் கட்டிடங்களுக்கு வரி கிடையாது,நெருக்கடி நிலை காலத்திலும் கிடையாது. ஆனால் இன்றைய தினம் மாயூரத்தில் அண்ணாவின் பெயராலே இலவசப் படிப்பகமும், நூலகமும் நடைபெற்று வருகின்ற அண்ணா பகுத்தறிவு மன்றக் கட்டிடங்களுக்கு ஏராளமான வரி விதிப்பட்டிருக்கிறது. அது தனியாருக்கும் சொந்தமானது அல்ல, கட்சிக்கும் சொந்தமானது அல்ல. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் செய்தது போல செய்யாவிட்டாலும் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் செய்ததைப் போலவாவது அந்தக் கட்டிடத்திற்கு வரி விலக்கு அளிக்க முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, நூலகத் திட்டத்தை மேம்படுத்தவும் சீரிய முறையில் செயலாற்றவும் அரசால் ஏற்படுத்தப்பட்ட நூலக சீரமைப்புக் குழு. நூலக ஆணைக் குழுக்கள் இயங்கி வந்த முறையினை ஆராய்ந்து, ஒவ்வொரு மாவட்ட நூலக ஆணைக் குழுவிற்கும் முழுநேர மாவட்ட நூலக அதிகாரி ஒருவரை நியமித்தல், நூலக ஆணைக் குழுவை அரசு ஊழியர்களாக ஏற்றுக் கொள்ளுதல், நூலக ஆணைக்குழுக்கள் சரியாக இயங்காததால் அவற்றை நீக்கிவிட்டு

1979 மார்ச் 14]

எல்லா நூலகங்களையும் அரசே எடுத்துக் கொள்ளல் போன்ற பல்வேறு பரிந்துரைகளை அரசுக்கு அளித்தது. இவைகளில் ஒவ்வொரு மாவட்ட நூலக ஆணைக் குழுவிற்கும் முழு நேர மாவட்ட நூலக அதிகாரியை நியமிக்கும் பரிந்துரையை ஏற்று, ஏற்கனவே அரசு ஆணை எண் 2692, கல்வி நாள் 16-12-76-ல் பதிமூன்று மாவட்ட நூலக அதிகாரிகளை நியமனம் செய்துள்ளது. மற்றவைகள் பரிசீலனையில் இருக்கின்றன. வரி குறைப்பைப் பற்றிக் கேட்டார்கள். அது குறித்துப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள பல்வேறு நூலகங்களில் பால் உணர்வைத் தூண்டக்கூடிய வகையில் புத்தங்களையும், வேறு மதநம்பிக்கைகள் கொண்ட புத்தகங்களையும் நிறைய வைத்திருக்கிறார்கள். அது போல மூட நம்பிக்கைகளையும், பகுத்தறிவற்ற கீழ்த்தரமான நூல்களையும் அங்கே வைத்திருப்பதைக் காண்கிறோம். அது போல் இல்லாமல் செய்வதற்கும், அவற்றை முறைப்படி மாற்றி யமைப்பதற்கும், ஒரு குழுவை ஏற்படுத்தி ஆராய்ந்து என்னென்ன புத்தகங்களை வைக்க வேண்டும் என்று முயற்சி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்றும், அதேபோல முற்போக்கு சிந்தனைகளைக் கொண்ட, படிப்பவர்களுக்கும் சமூகத்திற்கும் முன்னேற்றம் தரக்கூடிய புத்தகங்களை, பெரிய சிந்தனையாளா களின் படைப்புகளை, குறிப்பாக கார்ல் மார்க்ஸ், ஏன்ஜெல்ஸ், மாசேதுங் போன்ற சிந்தனையாளர்களின் புத்தகங்களை வைப் பதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, சமூக முன்னேற்றத்திற்கும், முற்போக்கான கருத்துக்களை கொண்ட புத்தகங்களை நூலகங்களில் வைக்க வேண்டும் என்ற கருத்து மிக முக்கியமானது என்பதை அரசு ஏற்றுக் கொள்கிறது. அதேபோல மூட நம்பிக்கைகளின் விளைவாக பழமை கோட் பாடுகளை கொண்ட புத்தகங்கள், நல்ல முற்போக்கு கருத்துக்களை கொண்ட புத்தகங்கள் இருக்கவேண்டும் என்தையும் இந்த அரசு ஏற்றுக்கொண்டு உறுப்பினர் அவர்களின் ஆலோசனையைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவர் அவர்களே தமிழகத்தில் நூலக பட்டப்படிப்புக கல்லூரிகள் எத்தனை இருக் கின்றன? அந்த பட்டப்படிப்புக் கல்லூரிகளில் பயிற்சி பெற்ற பட்டம் பெற்ற பட்டதாரிகள் நூலகங்களில் வேலை இல்லாமல் இருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இதனை அவர் தனிக் கேள்வியாக போட வேண்டும் என்று கூறிக் கொள்கிறேன்.

[1979 மார்ச் 14

திரு சு. பாலன் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியின் பொறுப்பில் உள்ள நூலக கட்டிடங்கள் மிகவும் மோசமான நிலையில் பழுது பார்க்கப்படாமல், வெள்ளையடிக்கப் படாமல், கேவலமான நிலையில் சிதிலமடைந்திருக்கின்றன. அவற்றை உடனடியாக பழுது பார்த்து ரிப்பேர் செய்ய அரசு முயலுமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, சென்னையில் உள்ள நூலகங்களுக்கு நல்ல கட்டிடங்கள் கட்டுவதற்கான ஒரு ஆலோசனை அரசின் பரிசீலனையில் ஏற்கனவே இருந்து வருகிறது.

திரு. கோ. இளங்கோவன் : பேரவைத் தலைவர் அவர்களே, நூலக ஊழியர்களுக்கு, முதல் தேதி சம்பளம் கொடுக்கவேண்டும் என்பது அவர்களின் கோரிக்கைகளில் ஒன்று, அவர்களுக்கு கொடுக்கின்ற சம்பளமே குறைவு—அதையும் முதல்தேதி கொடுக்கின்ற நிலை உருவாக வேண்டும் என்பதை அரசு ஏற்றுக் கொண்டு கொடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நிதி வசதி செம்மையாய் இல்லாத இராமநாதபுரம் போன்ற ஒரு சில மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள் தவிர, மற்ற நூலக ஆணைக் குழு ஊழியர்களுக்கு மாதந்தோறும் 1 ஆம் தேதி ஊதியம் வழங்குவதில் தடை ஏற்படுவதில்லை. மாவட்ட நூலக ஆணைக் குழுக்களில் நிதி நிலைமை சீர் குலைவதற்கான முக்கிய காரணம், உள் ஆட்சிக் கழகங்கள், அவைகளுக்கு செலுத்தப்பட வேண்டிய நூலக வரியை அவ்வப்போது செலுத்தாததே. அதனால் அக் குழுக்களுக்கு, அரசால் வழங்கப்படவேண்டிய இணை மான்யமும் தடைபடுகிறது. உள் ஆட்சிக் கழகங்கள், வசூலிக்கப்பட்ட நூலக வரியை, அவ்வப்போது செலுத்த வேண்டிய அவசியத்தை அவைகளுக்கு உணர்த்தும் பொருட்டு அரசின் மட்டத்திலிருந்து அவைகளுக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. அரசு வழங்க வேண்டிய இணை மானியங்களை ஒப்பளிப்பதில் எந்த வித தாமதத்திற்கும் இடம் கொடாமல் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இருந்தாலும் ஒரு சில நூலக ஆணைக் குழுக்களில் மாதம் 1-ந்தேதி ஊதியம் வழங்குவதில் சில சமயங்களில் தாமதம் ஏற்பட்டுவிடுகிறது. அதை நீக்குவதற்கும் தீவிரமான முயற்சிகளில் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

[முற்பகல் 9·40]

டாக்டர் கே. சமரசம் : தலைவர் அவர்களே, தமிழகத்தில் எந்தெந்த மாவட்டத்தில் அரசுக்குச் சொந்தமான நூலகக் கட்டிடங்கள் உள்ளன? தருமபுரி மாவட்டத்தில் இப்படிப்பட்ட

1979 மார்ச் 14]

நூலகக் கட்டிடம் வேண்டும் என்று அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா? அதைப்பற்றி பரிசீலித்து இந்த ஆண்டாவது அரசு ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, தனிக்கேள்வி போடவும்.

திரு. சேலம். மு. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, பல மாவட்டங்களில் மாவட்ட நூலக ஆணைக்குழு கட்டிடங்கள் வசதி அற்ற நிலையில் இருப்பதால், படிப்பதற்குக் கூட வசதி இல்லாமல் இருப்பதால், அரசு அதை உணர்ந்து உடனடியாகச் சொந்தமாகக் கட்டிடம் கட்ட முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, வாடகைக் கட்டிடமா, சொந்தக் கட்டிடமா என்பதை விட வசதிகளைக் கொண்ட கட்டிடமாக இருக்க வேண்டும் என்று அரசு கருதுகிறது. அந்த அடிப்படையில் எந்தெந்த மாவட்ட நூலகங்களுக்கு கட்டிடங்கள் தேவை என்கிற அடிப்படையில் கட்டிடம் கட்டும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நிச்சயமாக அந்தக் குறையைப் போக்க அரசு முயலும்.

மதிய உணவுக்கான தொகை வழங்கல்

*வினா எண் 388 திரு. மொ. பரமசிவம்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திண்டிவனம் வட்டம், நொளம்பூர் கிராமத்தில் உள்ள நீதி உதவி ஆரம்பப் பாடசாலை (காலனி)யில் வழங்கப்பட்ட மதிய உணவுக்கான தொகை ரூ. 965 வழங்கப்படவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(ஆ) அத்தொகையை அப்பள்ளிக்கு உடனடியாக வழங்கிட நடவடிக்கை எடுக்கும்படி திண்டிவனத்திலுள்ள மாவட்டக் கல்வி அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திரு. மொ. பரமசிவம்: தலைவரவர்களே, திண்டிவனம் வட்டம், நொளம்பூர் கிராமத்தில் உள்ள ஆரம்பப் பாடசாலையில் 'கேர்' நிறுவனத்தின் உதவியுடன் மதிய உணவு வழங்கியதற்காக 1975 ம் ஆண்டு டிசம்பர் மாதம் வரையில் உள்ள பாக்கி ரூ. 965

வழங்கப்படாமல் இருக்கிறது. இந்த பாக்கியை பள்ளிக்கல்வி இயக்குநர் வழங்கவேண்டுமா, அரிசன நலத்துறை இயக்குநர் வழங்க வேண்டுமா என்ற பிரச்னை இருக்கிறது. ஆகவே, இது குறித்து அரசு இறுதி முடிவு சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இது குறித்து பள்ளிக் கலவி இயக்குநா தெரிவித்த முடிவுப்படி, இப்போது மாவட்ட கல்வி அலுவலர் அறிவுறுத்தப்பட்டு இருக்கிறார்.

அரிசனநல சங்கம் என்ற பெயரால் வசூலிக்கப்பட்ட தொகை

*வினா எண் 389 திரு. கு. ரமணி: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோவை நகர எல்லையில் உள்ள வாலாங்குளம் பகுதியில் அரிசனநல சங்கம் என்ற பெயரால் சிங்காநல்லூர் நகரமன்ற மாஜி உறுப்பினர் ஒருவர் ரூ. 12,000 வரை வசூலித்து அரிசனங்களை ஏமாற்றியுள்ளது குறித்து அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதுபற்றிய விபரங்கள் என்ன?

(இ) அரிசனங்களின் உரிமைகளை பாதுகாக்க என்ன செய்யப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: (அ) சிங்காநல்லூர் நகராட்சியின் முன்னாள் உறுப்பினர் திரு. முனியப்பன், புலியகுளம் கிராமம் (வாலாங்குளம் பகுதி) பொது மக்களிடமிருந்து வீட்டு மனை நிலப்பட்டா பெற்றுத் தருவதாக வாக்களித்து ஒவ்வொருவரிடமும் ரூ. 200 வீதம் ரூ. 12,000 வசூலித்ததாக தெரிய வந்துள்ளது என்று கோயம் புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

(ஆ) இது குறித்து புலன் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

(இ) அந்தப் பகுதியில் அரிசன மக்கள் இது போன்றவர்களிடம் எச்சரிக்கையாக இருக்கும்படி மாவட்ட ஆட்சியாளர் அறிவுறுத்தியுள்ளார்.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களும், அரிசன மக்களும் குடியிருக்க இடம் இல்லாமல் இருப்பதால், இடம் கிடைக்க வேண்டும் என்பதற்காக பல முறை விண்ணப்பங்கள் போட்டும், அது மறுக்கப்படுவதால், இந்த மாதிரி சூழ்நிலை ஏற்பட்டு வருவதை அரசு கவனத்தில் எடுத்துக்

1979 மார்ச் 14]

கொள்ளுமா? இப்படி விரும்பத்தகாத பேர்வழிகள் அவர்கள் எந்தப் பதவியில் இருந்தாலும் சரி, அரிசனங்களை ஏமாற்றி பணம் பறிக்கும் வழிகளை மேற்கொண்டு வருவதால், இது தொடராமல் இருப்பதற்கு காவல் துறையிலும், மற்றும் ரெவின்யூ இலாகாவிலும், அதிலும் குறிப்பாக தாசில்தார் வகையறா அலுவலர்களைக் கொண்டு அதைக் கண்காணிக்க தொடர்ந்து ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்டவர்கள் விவரம் தெரியாதவர்கள் என்கிற காரணத்தால்தான் இது போன்ற சமூக விரோதிகள் இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபடுகிறார்கள். வீட்டு மனை வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்ப்பதற்கு இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இப்படிப்பட்ட கையாடல் பேர்வழிகள் கண்டுபிடிக்கப்பட்டு உடனடியாக அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான் இந்த அரசாங்கத்தின் கொள்கை ஆகவே இந்த முனியப்பனையும் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு தான் கைது செய்து, தற்போது நீதிமன்றத்தால் ஜாமீனில் விடப்பட்டு இருக்கிறார். அந்தப் பகுதி மக்கள் எச்சரிக்கையாக இருக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.

தமிழ்நாடு அரிசன வீட்டுவசதி வளர்ச்சிக் கழகம்

*வினா எண் 390—திரு. செ. சதாசிவம்: மாண்புமிகு அரிசன நலத்துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு அரிசன வீட்டுவசதி வளர்ச்சிக் கழகம் நிரந்தரமான அமைப்பா அல்லது தற்காலிகமானதா?

(ஆ) தற்காலிகமானதாயிருப்பின் எப்போது நிரந்தரம் ஆக்கப்படும்?

(இ) அதில் நியமிக்கப்பட்டிருக்கும் பணியாளர்கள் யாவரும் நிரந்தரமாக்கப்பட்டுவிட்டார்களா?

(ஈ) இல்லை என்றால், எப்போது நிரந்தரமாக்கப் படுவார்கள்?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: (அ) தமிழ் நாடு அரிசன வீட்டுவசதி வளர்ச்சிக் கழகம் தற்காலிகமான அமைப்பு.

(ஆ) அதை நிரந்தரமாக்கப்படுவதைப்பற்றி இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை.

(இ) அதில் நியமிக்கப்பட்டிருக்கும் பணியாளர்கள் யாவரும் நிரந்தரமாக்கப்படவில்லை.

(ஈ) கழகம் நிரந்தரமாக்கப்படுவது குறித்து முடிவு எடுத்த பின் பணியாளர்கள் நிரந்தரமாக்கப்படுவது பற்றி முடிவு செய்யப்படும்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, தமிழ்நாடு அரிசன வீட்டுவசதி வளர்ச்சிக் கழகம் அரிசனங்களுக்கு அதுவும் வருமானம் குறைந்தவர்களுக்கு இனாமாக வீடுகட்டிக்கொடுக்க அமைக்கப்பட்டது. அது இதுவரையில் நிரந்தரமாக்கப் படவில்லை என்று சொன்னார்கள். அதற்கு என்ன காரணம்? அவர்களுக்கு இதுவரையில் எத்தனை வீடுகள் இந்த கழகத்தின் சார்பில் கட்டித் தரப்பட்டிருக்கின்றன? அங்கே பணியாற்றுகின்ற ஊழியர்களும் நிரந்தரமாக்கப்படவில்லை என்று சொன்னார்கள். ஆகவே, இந்த கழகத்தை நிரந்தரமாக்கி, வீடு இல்லாத-கடன் கூட பெற முடியாத நிலையில் இருக்கின்ற—அனைவருக்கும் வீடு கட்டிக் கொடுக்க விசேஷ முயற்சி எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, இந்த நிறுவனம் 1974 ஆம் ஆண்டு தொடங்கப் பட்டது. பல்வேறுபட்ட நிறுவனங்களிடமிருந்து, அதாவது—ஆயுள் ஈட்டுறுதிக் கழகம், கட்கோ போன்ற நிறுவனங்கள், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்—போன்றவைகளிடமிருந்து எதிர்பார்த்த அளவுக்கு இந்த கழகத்திற்கு கடன் உதவி கிடைக்கவில்லை. உரிய கடன் வசதி கிடைக்காததால் பணிகள் அதிகம் இல்லை. ஆகவே இந்தக் கழகம் இதுவரை நிரந்தர மாக்கப்படவில்லை. அரசாங்கம் தருகின்ற நிதியை வைத்துக் கொண்டு வீடு கட்டும் பணியையும் மற்றப் பணிகளையும் இந்தக் கழகம் செய்து கொண்டிருக்கிறது. கிடைக்கிற நிதி குறைவாக இருப்பதால் நிரந்தரமாக்குவது தள்ளிப்போடப்படுகிறது. இந்தக் கழகமே நிரந்தரம் இல்லாமல் இருக்கும்போது அதிலே பணி யாற்றும் பணியாளர்களை நிரந்தரமாக்குவதையும் கொஞ்சம் தள்ளி வைத்திருக்கிறோம்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவரவர்களே, இந்தக் கழகமே நிரந்தரமில்லை என்று சொன்னார்கள். அப்படி இருக்கும்போது சென்னையிலிருந்து விழுப்புரத்திற்கு இதன் அலுவலகத்தை ஏன் மாற்ற வேண்டுமென்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, சென்னையில் இருக்கும்போதுதான் நிரந்தரமாக்கப்பட படவில்லை. விழுப்புரத்திற்குப் போனபின்னாலாவது நிரந்தர மாகுமா என்கிற எண்ணத்திலேதான் அங்கு இந்த அலுவலகத்தை மாற்றியிருக்கிறோம்.

1979 மார்ச் 14]

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, இந்த அரிசன வீட்டுவசதி வளர்ச்சிக் கழகம் தமிழ்நாட்டில் வீடற்றோர் களுடைய சர்வே ஏதாவது எடுத்துள்ளதா ? இந்தக் கழகத்திற்கு விண்ணப்பித்தவர்கள் எத்தனை பேர் ? இந்த ஆண்டு அவர்களில் எத்தனை பேர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க அரசு உத்தேசித்து உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் ; தலைவர் அவர்களே, இந்த வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் எத்தனை அரிசனங்களுக்கு அல்லது அரிசன குடும்பங்களுக்கு வீடு இல்லை என்கிற சர்வேயை எடுத்தபோது கிட்டதட்ட 8 இலட்சத்திற்கு மேற்பட்ட குடும்பங்கள் இருப்பதாக தற்போது அறிகிறோம். அவர்கள் அத்தனை பேர்களுக்கும் நிரந்தரமான வீடு கட்டித் தர நிதி நிலைமை இந்த கழகத்திடம் தற்போது இல்லை. ஆகவே, எதிர்காலத்தில் செய்து தர யோசித்துக் கொண்டிருக் கிறோம். இந்த ஆண்டு எத்தனை வீடு என்று கேட்டார்கள். 1,666 வீடுகளுக்கு இதுவரை முடிவு செய்து நான் கையெழுத்து இட்டிருக்கிறேன்.

திரு இரெ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, அரிசன வீட்டுவசதி வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக இந்த அரசு வந்த பிறகு கட்ட ஆரம்பிக்கப்பட்ட வீடுகள் 'பேஸ்' மட்டத்தில் அப்படியே நிற்கின்றன. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட வீடுகளுக்குக் கூட இதுவரை வீடுகளைக் கட்டிய கான்ட்ராக்டர்களுக்கு பணம் கொடுக்கப்படாமல் இருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்று அதிகாரிகளைக் கேட்டால் அரசாங்கத்திலிருந்து நிதி ஒதுக்கீடு எதுவுமே செய்யவில்லை என்று சொல்கிறார்கள். அது உண்மையா? கட்டி முடிக்கப் பட்ட வீடுகளுக்கு உரிய பணத்தை கான்ட்ராக்டர்களுக்கு கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய வினா வில் எதுவுமே உண்மை இல்லை. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு கட்டப்பட்ட வீடுகள் 'பேஸ்' மட்டத்தில் இருக்கின்றன என்று சொன்னார்கள். பல ஊர்களில் வீடுகள் கட்டப்பட்டு, அந்த வீடுகளில் குடியிருக்கிறார்கள். இந்த அரசை பொறுத்த வரையில் அவ்வப்போது பணத்தை ஒதுக்கிக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 391

திரு. இரெ. இராசமாணிக்கம்: தலைவரவர்களே, முழுமையான பதில் வரவில்லை. இன்னொரு கேள்விக்கு வாய்ப்பு கொடுங்கள். (திரு. செ. சிவசாமி, திரு. சி. ஆறுமுகம், மற்றும் சிலர்— எங்களுக்கும் வாய்ப்பு வேண்டும்.)

[1979 மார்ச் 14

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு கேள்வியில் எல்லோருக்கும் எப்படி துணைக் கேள்வி கேட்க வாய்ப்பு கொடுக்க முடியும்? இன்னும் 10 நிமிடங்களுக்குள் கேள்வி நேரத்தை முடிக்க வேண்டும். எல்லோருக்கும் வாய்ப்பு வேண்டுமென்று கேட்கிற முறையே தவறு.

திரு. சி. ஆறுமுகம்: எல்லோரும் கேள்வி கேட்கத்தான் இங்கே வந்திருக்கிறோம். முக்கியமான கேள்வியாக இருந்தால் பலர் கேட்கத்தான் செய்வார்கள். நீங்கள் அனுமதி கொடுக்க வேண்டும்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: நான் கேட்ட கேள்வி சம்பந்தப்பட்ட ஊரையாவது சொல்லிவிடுகிறேன். அனுமதி.... (திரு. சி. ஆறுமுகம் உட்கார்ந்துகொண்டே பேசிக் கொண்டிருந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: யாரும் உட்கார்ந்து பேசக் கூடாது. என்னை வற்புறுத்தி யாரும் கேட்க முடியாது. நான் அடுத்த கேள்விக்குப் போய்விட்டேன். அதன் பிறகு முன் கேள்வியில் துணைகேள்வி கேட்க வாய்ப்பு வேண்டுமென்று கேட்ப சரியல்ல. நான் தீர்ப்பு சொன்ன பிறகு மறுபடியும் அதுபற்றி கேட்கக் கூடாது.

எலி ஒழிப்புத் திட்டம்

*வினா எண். 391

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்:
திரு. என். திட்டப்பா:

மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வயல் பயிர்களை நாசம் செய்யும் எலிகளை ஒழிப்பதற்கு விவசாயிகள் அரசிடம் முறையிட்டுக் கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது சம்பந்தமாக அரசிடம் திட்டம் ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:

(அ) குறிப்பிட்ட கோரிக்கை ஏதும் வரவில்லை.

(ஆ) எலிகளை ஒழிக்கும் திட்டம் விவசாயத் துறையில் பயிர் பாதுகாப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக எல்லா மாவட்டங்களிலும் செயல்பட்டு வருகின்றது. எலிகளை ஒழிக்கும் மருந்துகள் போதுமான அளவு வேளாண்மைத் துறையின்

1979 மார்ச் 14]

கிடங்குகளின் மூலமாக உழவர்களுக்குக் கிடைக்க வகை செய்யப் பட்டுள்ளது. விவசாயப் பணியாளர்கள், எலி ஒழிக்கும் முறை களை விளம்பரப்படுத்துகின்றனர்.

[முற்பகல் 9—50]

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவரவர்களே, எலிகளை ஒழிப்பதற்கு என்னென்ன மருந்துகள் கொடுக்கப்படுகின்றன? இப்போது உலகம் முழுவதும் 3 கோடி எலிகள் இருப்பதாகச் செய்திகள் எல்லாம் வந்திருக்கின்றன. எலிகள் விவசாய உற்பத்திக்கு பெரிதும் பாதகத்தை ஏற்படுத்து கின்றன. பெங்களூர் விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகத்தில் எலிகளை ஒழிப்பதற்கு ஒரு மருந்து கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆகவே அதையும் பயன்படுத்தி எலிகளை ஒழிப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, எலிகளை ஒழிப்பதற்குரிய மருந்துகளான துத்தநாக பாஸ்பைடு, அலுமினியம் பாஸ்பைடு மாத்திரைகள் போதுமான அளவு வேளாண்மைக் கிடங்குகளின் மூலமாக உழவர்களுக்குக் கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது. நம்முடைய உற்பத்தியில் ஏறத்தாழ 5 சதவீதம் உணவை எலிகள் தின்றுவிடுகின்றன. ஒரு மனிதனுக்குரிய உணவை பத்து எலிகள் சேர்ந்து சாப்பிட்டு விடுகின்றன. ஆகவே இந்தக் கணக்கு எல்லாம் போடப்பட்டுத் தான் எலிகளை ஒழிப்பதற்கு வேளாண்மைத்துறை தீவிரமாக செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மற்ற இடங்களை விட தமிழகத்தினுடைய நெற்களஞ்சியங்களாகிய தஞ்சை, திருச்சி மாவட்டங்களுக்கு ஒரு தனியான திட்டத்தை, எலிகளை ஒழிப் பதற்காக உருவாக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்பு கிறேன். இதுபற்றி மாண்புமிகு ஆளும் கட்சி உறுப்பினர் அவர்கள் கூட இங்கே குறிப்பிட்டார்கள். அதாவது தற்போது ஒரு புதிய முறை எலிகளை ஒழிப்பதற்குக் கண்டுபிடிக்கப் பட்டிருப்பதாகச் செய்திகள் கூட வந்திருக்கின்றன. அரசு அதனைப் பரிசீலனை செய்து அந்த முறையைப் பின்பற்ற முன் வருமா? மற்ற எல்லாவற்றையும் பின்பற்ற முடியாவிட்டாலும் எலிகளை ஒழிப்பதற்காக பூனைகளை வளர்க்கின்ற ஒருதிட்டத்தை யாவது ஆரம்பிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, எலிகளை ஒழிப்பதற்கு நான்கு வகையான வழிகள் வேளாண்மைத் துறையின் மூலமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. துத்தநாக பாஸ்பைடு என்ற நச்சு மருந்தை

[1979 மார்ச் 14

உணவுப் பொருட்களுடன் கலந்து வைப்பது ஒரு முறை. $2\frac{1}{2}$ கிராமம் 10 சத போரேட்டுக் குருணைகளை 10 லிட்டர் தண்ணீரில் கரைத்து எலிகளின் வளைகளில் ஊற்றுதல் மற்றொரு முறை. விசைத் தெளிப்பான் வெளிப்போக்கும் நச்சு வாயுவை எலி வளைகளுள் செலுத்தல் என்பது மூன்றாவது முறை. எலிப்பொறி வைத்தல் என்பது நான்காவது முறை. இப்படி இந்த நான்கு வகைகளில் எலி ஒழிப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர்கள் சொல்வதைப் போன்று பூனைகள் வளர்க்கும் திட்டத்தை நமது அரசு ஏற்படுத்தவில்லை. வேண்டுமானால் அதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அருமை நண்பர் அவர்கள் சார்ந்திருக்கக் கூடிய கட்சியிலே இருக்கின்றவர்கள் பூனைகளை வளர்க்கின்ற திட்டத்தை, அது பயன் உள்ளதாக இருந்தால், பயன்படுத்திக் கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. பண்ணை சேதுராம்: பேரவைத் தலைவரவர்களே, கேரளாவில் செயல்படுத்தப்படுகின்ற திட்டங்களிலே தவளைகளைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு ஒரு தவளைக்கு 25 பைசா என்ற அளவில் கொடுக்கின்ற ஒரு திட்டமும் இருக்கின்றது. தமிழகத்தில் எலிகள் பெரிதாக வளர்ந்து பெருச்சாளிகளாக மாறி இருக்கின்றன. ஆகவே அந்தப் பெருச்சாளிகளைப் பிடிப்பதற்கும் இந்த அரசு திட்டம் வகுக்க முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவ அவர்களே, எலிகளை ஒழிப்பதற்குத் திட்டம் இருக்கின்றது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பெருச்சாளி என்று சொன்னார்கள். பெருச்சாளி என்று சொல்கின்றபோது எந்தப் பெருச்சாளியைப் பற்றிச் சொல்கிறார் என்பது தெரியவில்லை. மேலும் தவளைகளைப் பிடித்துக் கொடுத்தால் 25 பைசா கொடுக்கின்ற திட்டம் கேரளாவில் செயல்படுத்தப்படுவதாகச் சொன்னார்கள். இதுபோன்று அதாவது ஊக்க போனஸ் போன்று கொடுக்கப்பட்டால் மீண்டும் எலிகளை வளர்க்கின்ற திட்டத்தை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் ஆரம்பித்து விடுவார்களே என்று பயப்பட வேண்டியிருக்கிறது. ஒரு எலிக்கு 25 பைசா என்று வைத்துவிட்டால் மீண்டும் எலிகள் பெருகுகின்ற பயங்கரமான நிலை ஏற்பட்டுவிடும். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மேலான யோசனையை இந்த அரசு பரிசீலனை செய்யும்.

திரு. கே. கந்தசாமி: தலைவர் அவர்களே.......

திரு. சி. ஆறுமுகம்: இன்று பெருச்சாளிகள் பூராவும் ஆளும் கட்சிப் பக்கத்திற்குப் போய்விட்டது. நாங்கள் ஹாப்பியாக இருக்கிறோம்.

1979 மார்ச் 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் பெருச்சாளிகள் என்றுதான் சொன்னார்கள். ஆறுமுகம் ஏன் அதற்காகக் கோபித்துக் கொள்ளவேண்டும். மக்களை பெருச்சாளிகளாக ஆக்காதீர்கள்.

திரு. சி. ஆறுமுகம் : உங்களுக்கு புரிவதுபோல் எங்களுக்கும் புரியும்.

திரு. கே. கந்தசாமி : எலிகளை ஒழிப்பதற்கு நான்குமுறை இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த நான்கு முறைகளினாலும் செலவுதான் அதிகமாகும். அப்படி எலிகளைக் கொன்று பயன் இல்லை. ஆகவே எலிகளைப் பிடிப்பதற்காக திரு. பண்ணை சேதுராம் அவர்கள் சொன்னதுபோல் நான்கணா இல்லை என்றாலும் ஒரு எலிக்கு 10 பைசா கொடுத்தால் அதைப் பிடிக்க பல பேர்கள் இருக்கிறார்கள் கிராமங்களில். அதனால் வேலையில்லாத் திண்டாட்டமும் ஒழியும். எலிகள் தின்று உணவு பொருள்கள் ஐந்து சதவீதம் பாழாவதும் தவிர்க்கப்படும். அதோடு இப்போது மாமிசத்தின் விலை கிடுகிடுவென்று ஏறிக் கொண்டே போகிறது. எலிகளைச் சாப்பிடக்கூடிய மக்களும் இருக்கிறார்கள். ஆகவே ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் எலி ஸ்டால் ஒன்று 'ஓப்பன்' செய்து......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கேள்வியா? விவாதமா? தயவுசெய்து, இன்னொரு தடவை இப்படிக்கேள்வியை நீட்டித்துக் கொண்டு போனால் நான் அனுமதி தருவதற்கில்லை. ஆகவே கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு சபாநாயகர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன், விவசாயி நான் கஷ்டப் படுகிறேன். விவசாயிகளின் கஷ்டத்தைச் சொல்கிறேன். இப் போது பொரி வாங்கிப் போடச் சொல்கிறார்கள். மனிதன் தின்பதற்கே பொரியில்லை. எலிகளை மனிதன் தின்கிறான் அது ஒரு உணவுப் பொருளாக இருக்கிறது. ஆகவே அரசாங்கம் ஒவ்வொரு பஞ்சாயத்து ஒன்றியத்திலும் அரை கிலோ, ஒரு கிலோ என்று குறைந்த விலைக்கு எலிகளை விற்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? அதனால் வருமானமும் பெருகுமே. ஆகவே இதுபற்றி அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பொறி என்றவுடன் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடலைப்பொரியை நினைத்து விட்டார் போலிருக்கிறது. பொறி என்று சொன்னால் கருவி என்று பொருள். (சிரிப்பு) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மக்கள் எலிகளைச் சாப்பிடுகிறார்கள் என்று சொன்னார்கள். மக்கள் வெள்ளை எலியைச் சாப்பிடுகிறார்கள். ஆனால் அதே

போன்று மற்ற எலிகளைச் சாப்பிடுவதாகத் தெரியவில்லை. அப்படிச் சாப்பிடுகிறார்கள் என்றால் அவர்களுடைய தொகுதியில் அப்படி இருக்கிறார்களோ என்னவோ, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனை பரிசீலிக்கப்படும்.

திரு. மு. அம்பிகாபதி : இந்தியாவில் 480 கோடி எலிகள் இருப்பதாகவும், 15 இலட்சம் டன் உணவை அவைகள் சாப்பிடுவதாகவும் சொல்லப்படுகிறது. எலிகளுக்கு வைக்கிற மருந்துகளை அவை தின்றுவிட்டு கொழுத்துவிடுவதால் பூனைகளால் எலிகளை பிடிக்க முடிவதில்லை. ஆகவே நாட்டுப் பூனைகளுக்குப் பதிலாக காட்டுப் பூனைகளை எலிகளைப் பிடிப்பதற்குப் பயன்படுத்துவதற்கான ஏற்பாட்டினை அரசு அறிவிக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அதுபோன்ற யோசனை அரசிடம் இல்லை.

திரு. சேலம் மு ஆறுமுகம்: அமைச்சர் அவர்கள்கூறிய நச்சுப் பொருள்கள் அத்தனையையும் தின்றுவிட்டு எலிகள் கொழு கொழு என்று வளர்கிறதே தவிர அவை இறப்பதாகத் தெரியவில்லை. ஆகவே அதிகத்திறன் படைத்த நச்சுப்பொருள்களைக் கண்டுபிடிக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அந்த ஆராய்ச்சி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மற்ற கேள்விகள்–பதில்கள் அச்சடித்து நடவடிக்கைக் குறிப்பில் சேர்க்கப்படும்.

கிழக்குக் கடற்கரைச் சாலையில் பால வேலைகள்

*வினா எண் 373—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிழக்குக் கடற்கரை நெடுஞ்சாலையில் மேலும் எத்தனை பாலங்கள் கட்டும் உத்தேசம் உள்ளது ?

(ஆ) தற்போது வேலை நடந்துகொண்டிருப்பவை எத்தனை?

(இ) எத்தனைப் பாலங்கள் கொள்கை அளவில் ஒப்புக் கொள்ளப்பட்டு பரிசீலனையில் உள்ளது?

வினா எண் 373, 374, 392–399 ஆகியவை பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நடவடிக்கைக் குறிப்பில் அச்சிடப் பெற்றுள்ளன.

1979 மார்ச் 14]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) சென்னையிலிருந்து - கன்னியாகுமரி வரை செல்லும் கிழக்குக் கடற்கரைச் சாலையில், தற்போது மேலும் பாலங்கள் கட்டும் உத்தேசம் இல்லை.

(ஆ) தற்போது நான்காவது ஐந்தாண்டு திட்டத்தில் மாநிலத் தொடர்பு மற்றும் பொருளாதார முதன்மைப் பணித் திட்டத்தின்கீழ் 6 பால வேலைகள் நடைபெற்று வருகின்றன.

(இ) மேற்கூறிய 6 பாலங்கள் தவிர கிழக்குக் கடற்கரைச் சாலையில் தற்போது எந்த பால-வேலைகளும் கொள்கை அளவில் ஒப்புக் கொள்ளப்பட்டு பரிசீலனையில் இல்லை.

வடக்குத் தாமரைக்குளத்தின் அருகே உள்ள பாலம்

*வினா எண். 374 —திரு. செ. கிருஷ்ணன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கன்னியாகுமரி தொகுதியில் வடக்குத் தாமரைக்குளத்தில் மேற்காக வடக்குத் தெற்காக ஓடுகின்ற பழைய ஆற்றின் குறுக்கே உள்ள கல்பாலம் சமீபத்தில் ஏற்பட்ட பெருவெள்ளத்தால் பழுதடைந்துள்ளதைப் புதுப்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இல்லை.

சடையனேரி கால்வாய்.

*வினா எண். 392— திரு. இரா. அமிர்தராஜ் : மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி மாவட்டம், சடையனேரி கால்வாயில் ஸ்ரீவைகுண்டம் அணையில் மறுகால் தண்ணீர் சென்றால்தான் தண்ணீர் விடப்படும் என்ற ஒப்பந்தத்தை மாற்றி அமைக்கும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில் எப்போது அந்த முறை மாற்றியமைக்கப் படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) சடையனேரி கால்வாயின் கீழுள்ள 13 மானுவாரி குளங்களுக்கு ஸ்ரீவைகுண்டம் அணை மறுகால் பாயும்போது தான் தண்ணீர் கொடுக்கப்படும் என்கிற நிபந்தனையை மாற்ற தற் சமயம் உத்தேசம் ஏதுமில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

Milk booths in Madras City

*Q. No. 393 : Thiru S. M. VASAN : Will the Hon. the Minister for Rural Industries be pleased to state the details of the conditions under which the Tamil Nadu Dairy Development Corporation is leasing out the Milk Booths in Madras City?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தமிழ்நாடு பால்வள நிறுவனம், பால் விநியோகிக்கும் டெப்போக்களை பால் விநியோகம் செய்வதற்காக சென்னை நகரில் வாடகைக்கு விடுவதில்லை. தனியார் எவருக்கும் வாடகைக்கு விடுவதாகத் திட்டம் ஏதும் தற்போது இல்லை. எனினும் இந்த டெப்போக்கள் ''தமிழ்நாடு பதநீர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்திற்கு'' நீரா என்ற பானம் விற்பனை செய்வதற்காக மாத வாடகை ரூ. 7.50க்கு (ஏழு ரூபாய் ஐம்பது பைசா மட்டும்) பதநீர் காலங்களில் அதாவது மார்ச் முதல் ஜூன் வரையிலான மாதங் களில் கொடுக்கப்படுகிறது.

கச்சா முந்திரி விநியோகம்

*வினா எண். 394.—திரு. தே. ஞானசிகாமணி : மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழகத்தில் உற்பத்தியாகும் 13 ஆயிரம் டன் கச்சா முந்திரியை அரசே நேரடி கொள்முதல் செய்து தொழிலாளர் களின் வீதாச்சார அடிப்படையில் தொழிற்சாலைகளுக்கு விநி யோகிக்கும் திட்டம் ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு கே. இராஜா முகமது ; அது போன்ற திட்டம் எதுவும் இல்லை.

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1979 மார்ச் 14]

வேலூர் சி. எம். சி. மருத்துவ மனைக்கு அரசு மானியம்

*வினா எண். 395 திரு பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வேலூரிலுள்ள சி. எம். சி. மருத்துவ மனைக்கு அரசு மானியத் தொகை வழங்கப்பட்டு வருகிறதா?

(ஆ) ஆம் எனில், ஆண்டுக்கு எவ்வளவு?

(இ) எத்தனை ஆண்டுகளாக வழங்கப்பட்டு வருகிறது?

மாண்புமிகு திரு திருச்சி ஆர். சௌந்திரராஜன் :

(அ) ஆம்.

(ஆ) & (இ) : வேலூரிலுள்ள கிறிஸ்துவ மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அன்றாடம் இலவசமாக சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு நபர் ஒருவருக்கு ஒரு நாளைக்கு 50 பைசா வீதம் ஒரு வருடத்திற்கு உயர்ந்த அளவு ரூ. 10,000 மானியத் தொகையாக அரசு நிர்ணயித்தது. 1951-ஆம் ஆண்டு முதல் 1953-ஆம் ஆண்டு வரை ஆண்டு ஒன்றுக்கு ரூ. 10,000 இவ்வரசு அளித்துள்ளது. இம்மானிய உதவி போதுமானதாக இல்லை என்பதால், 1954-ஆம் ஆண்டு முதல் இம்மானியத் தொகையின் உயர்ந்த அளவை ரூ. 10.000த்திலிருந்து ரூ. 20,000ஆக இவ்வரசு உயர்த்தியுள்ளது. அதன்படி, 1954-ஆம் ஆண்டு முதல் 1971-ஆம் ஆண்டுவரை ஆண்டு ஒன்றுக்கு ரூ. 20,000/- தொடர்ந்து வழங்கப்பட்டது.

மதுரையில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு

*வினா எண் 396. திரு மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரையில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது எடுத்துக் கொள்ளப்படும்?

மாண்புமிகு திரு திருச்சி ஆர். சௌந்திரராஜன் :—

(அ) (ஆ) : மதுரை அரசு எர்ஸ்கின் மருத்துவமனையில் ஏற்கெனவே புற்றுநோய் சிகிச்சைப்பிரிவு செயல்பட்டு வருகிறது.

மலேரியா தடுப்பு நடவடிக்கை

* வினா எண். 397 திரு என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

[1979 மார்ச் 14

மலேரியா நோய் பரவுவதைத் தடுக்க அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு திருச்சி ஆர். சௌந்திரராஜன் :

அவைமுன் ஒரு விவர * அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

மறுவாழ்வு இல்லங்களில் இருந்து வெளி வந்தவர்கள்.

* வினா எண் 398. திரு பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா :

(அ) அரசு மறுவாழ்வு இல்லங்களில் சிகிச்சை பெற்று வெளிவந்த தொழு நோயாளிகள் இதுவரை எத்தனை பேர்?

(ஆ) அவர்களுக்கு அரசு வேலை வாய்ப்புக்கு ஏதேனும் வசதி செய்து கொடுத்துள்ளதா?

மாண்புமிகு செல்வி. பி. டி. சரஸ்வதி :—

(அ) 77 நபர்கள்.

(ஆ) ஆம்.

Leprous beggars.

* Q. No. 399 Thiru K. ABDUL LATHEEF : Will the Hon. the Minister for Social Welfare be pleased to state:

(a) the steps taken to round up all the leprous beggars in the streets of Madras City; and

(b) the action taken to segregate them from the public?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :—

(அ) மற்றும் (ஆ)

சென்னை நகரில் தெருக்களில் அலையும் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களை அப்போதைக்கப்போது சென்னை நகர காவல்துறையினர், 1945ஆம் ஆண்டு தமிழ்நாடு பிச்சை எடுத்தல் தடுப்புச்சட்டத்தின்கீழ் பிடித்து வழக்கு பதிவு செய்கின்றனர். குற்றவியல் நீதிபதியால் தண்டிக்கப்படுபவர்கள் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்காக தமிழ்நாட்டில் அரசு ஏற்படுத்தியுள்ள பத்து மறுவாழ்வு இல்லங்களிலும் சேர்க்கப்படுகின்றனர்.

[*120, 121-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.]

1979 மார்ச் 14]

தெருக்களிலும், பொதுமக்கள் கூடுமிடங்களிலும், பொது மக்களுடன் தொழுநோய்ப்பிச்சைக்காரர்கள் கலந்து இருக்காத படி காவல்துறையினர் கண்காணித்து அவர்களை அகற்றி விடுகிறார்கள். ரயில் நிலையங்கள், கடைவீதிகள், ஆலயங்கள், கடற்கரை முதலிய இடங்களில் சென்னை நகரத்தில் பகற் பொழுதில் பிச்சைக்காரர்களை வளைத்துப் பிடிக்கவும் அதற்கான தீவிர தனி நடவடிக்கை எடுக்கவும், தனது பணியாளர்கள், பிச்சைக்காரர்கள் மீது வழக்குகள் பதிவு செய்வது குறித்து காவல்துறைத் துணை ஆணையாளர் ஆய்வு செய்யவும் வழி வகுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்]

[முற்பகல் 10.00]

2. ஒழுங்குப் பிரச்சினைகள்.

(அ) துணைக் கேள்விகள் அனுமதிப்பது குறித்து.

திரு. துரை கோவிந்தராஜன் : கேள்வி நேரத்தின் போது, ஆளும்கட்சி தரப்பிலிருந்து ஐந்தாறு பேர்களுக்கு மட்டுமேதான் சந்தர்ப்பம் தந்திருக்கிறீர்கள். இனிமேலாவது ஆளும்கட்சித் தரப்பிலுள்ள உறுப்பினர்களுக்கு அதிகமான துணைக் கேள்விகள் கேட்பதற்கு இடம் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(ஆளும் கட்சித் தரப்பிலிருந்து கைதட்டல்..)

திரு. சி. ஆறுமுகம் : கேள்வி நேரத்தில் எதிர்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களுக்குத்தான் அதிக வாய்ப்புத் தர வேண்டும். அது தான் மரபாக இருந்து வந்திருக்கிறது. ஆளும் கட்சிக்கு இதில் என்ன சங்கடம் என்று தெரியவில்லை.

(திரு. கு. ரமணி, திரு. எஸ். ஆர். இராதா ஆகியோர் எழுந்திருந்தார்கள்..)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு பேர்களும் எழுந்து நின்றால் நான் யாரை அழைப்பது? நீங்களே ஒரு முடிவுக்கு வாருங்கள். திரு. ரமணி

திரு. கு. ரமணி : நேற்றையதினமும் இது போல் தாங்கள் கேள்வி நேரத்தை முடித்தபோது, இன்னும் ஐந்து நிமிடங்கள், பத்து நிமிடங்கள் நீடித்து கேள்விகளை முடித்துக்கொள்ளுங்கள் என்று கேட்டோம். அவ்வாறு தாங்களும் அனுமதித்தீர்கள். முன்பும் இப்படிப்பட்ட வழக்கம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அது போல் இன்றைய தினமும் சற்று கேள்வி நேரத்தை நீட்டித்து கேள்விகளை கேட்க அனுமதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் பத்து கேள்விகள் இருக்கின்றன. இதையெல்லாம் முடிப்பதற்கு இன்னும் ஒரு மணி நேரம் ஆகும். நேற்று இரண்டு மூன்று கேள்விகள் மட்டும் இருந்தது, ஆதலால் பத்து நிமிடத்தில் கேள்வி நேரத்தை முடித்துவிட்டோம். இன்று, நேற்றைக்கு ஒத்தி வைத்த கேள்விகள் 2, இன்னும் பாக்கியுள்ள கேள்விகள் 9, ஆக 11 கேள்விகள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் முடிக்கவேண்டும் என்றால், இன்னும் ஒரு மணி நேரம் ஆகும். அதே நேரத்தில் ஆளும் கட்சித் தரப்பில் அதிகமான பேர்களை அழைக்கவில்லை என்றும் சொல்லுகிறார்கள். இந்த நிலையில் இன்னும் ஒரு மணி நேரம் வேண்டும் என்று கேட்டால், அது இயலாத காரியம்.

திரு. கு. ரமணி : நான் ஒரு மணி நேரம் நீடிக்கவேண்டும் என்று கேட்கவில்லை. பட்டியலிலுள்ள கேள்விகளை எல்லாம் முடித்தாக வேண்டும் என்று கேட்கவில்லை. ஐந்து நிமிடம் அல்லது பத்து நிமிடம் நீட்டித்தால், அதில் எவ்வளவு துணைக் கேள்விகள் கேட்கலாமோ அந்த அளவுக்கு துணைக்கேள்விகள் கேட்கட்டும். அதைச் செய்தால் போதும் என்று தான் சொல்லுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு கேள்வி, இரண்டு கேள்வி என்றால் பத்து நிமிடம் நீடித்து நடத்தினால் கேள்விகள் முடிந்துவிடும். இருக்கின்ற கேள்விகளை எல்லாம் முடிக்க வேண்டும் என்றால், இன்னும் ஒரு மணி நேரத்திற்கு மேல் ஆகும் அப்படி இதிலே ஒரு மணி நேரத்தை எடுத்துக்கொண்டால், மற்ற நிகழ்ச்சிகள் நின்று விடும். அதனால் தான் இத்துடன கேள்விகளை நிறுத்திக் கொண்டு ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்துக் கொண்டேன்.

(ஆ) உரிமை மீறல் அறிவிப்பு குறித்து.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, நான் ஒரு உரிமைப் பிரச்னை கொடுத்திருக்கிறேன்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுபற்றி இன்னும் ஆராய்ந்து முடிவு எடுக்கவில்லை. அதைப்பற்றி இப்போது பேச முடியாது. அது நாளையோ மறு நாளோ எடுத்துக் கொள்ளலாம்.

1979 மார்ச் 14]

திரு. க. சுப்பு : பாயின்ட் ஆப் ஆர்டர்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லிக் கொண்டு இந்தப் பிரச்னையைப்பற்றி பேசக் கூடாது.

திரு. க. சுப்பு : பாயின்ட் ஆப் ஆர்டர், நான் ஒரு அவை உரிமைப் பிரச்னை கொடுத்திருக்கிறேன்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் நேற்று தந்து இருக்கிறீர்கள், அதை இன்றைக்கே எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லை. அதற்கான விவரங்கள் தயாரான உடன் அதை எடுத்துக்கொள்ளலாம்.

திரு. க. சுப்பு : நான் ஏற்கனவே இதை கொடுத்து விட்டேன், நீங்கள் இன்று அதை என்னவென்றும் சொல்ல வில்லை. இப்படி நீங்கள் ஒருதலைப் பட்சமாக நடக்கக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி பேசிக் கொண்டு இருந்தால் சுப்பு அவர்களை நான் பேச அனுமதிக்க முடியாது. அவர்கள் கொடுத்ததை நாளையோ மறுநாளோ எடுத்துக் கொள்கிறேன்.

(திரு. க. சுப்பு அவர்கள் எழுந்து நின்று கொண்டிருந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கொடுத்ததின் பேரில் இன்னும் நான் முடிவு எடுக்கவில்லை.

திரு. க. சுப்பு : எல்லாவிஷயத்திலும் உடனே முடிவு எடுத்துவிடுகிறீர்கள். இதில் ஏன் இவ்வளவு தாமதம், இன்று இதை எடுத்தேயாகவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி என்னை வலுக் கட்டாயமாக இன்றே எடுத்துக்கொள்ளவேண்டும் என்று சொல்ல முடியாது. நீங்கள் கொடுத்தது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. இப்போது அதை எடுத்துக்கொள்ள முடியாது. தயவு செய்து உட்காருங்கள், இப்போது பேசுவதற்கு உங்களுக்கு நேரம் தரமுடியாது.

திரு. க. சுப்பு: என்னைப் பேச அனுமதித்தே ஆகவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் இப்படி என்னை கட்டாயப்படுத்த முடியாது. இதற்கு எதிர்கட்சித் தலைவர்கள் சேர்ந்து ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

(திரு. க. சுப்பு நின்று கொண்டிருந்தார்..)

திரு. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, இது நாளைக்கு நிச்சயமாக எடுத்துக்கொள்ளப்படும் என்ற உறுதியையாவது கொடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளைக்கு நிச்சயமாக எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. க. சுப்பு : நான் இது என்ன பிரச்னை என்றே இன்னும் சொல்லவில்லையே..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படி சொல்லவேண்டிய அவசியம் இல்லை. நீங்கள் விதிகளை தெரிந்து இருக்கிறீர்கள். ஆகவே இதில் என்னை நீங்கள் கட்டாயப்படுத்த முடியாது.

திரு. க. சுப்பு : மேலும் மேலும் இதையே சொல்லிக் கொண்டிருக்காதீர்கள். என்னை பேச அனுமதியுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆய்வுக் குழுவிலே முடிவெடுக்கப்பட்டது....

திரு. க. சுப்பு : அதற்கும் எனக்கும் சம்பந்தமில்லை. ஆய்வுக் குழுவைப் பற்றி அக்கறை இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது உங்கள் சொந்தக் கருத்து.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் ஒரு உரிமைப் பிரச்னையை எழுப்பியிருக்கிறார்கள். உணர்ச்சிவசமாக இருக்கிறார். நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று பிரதான எதிர்க் கட்சித் தலைவர் எடுத்துச் சொல்லியிருக்கிறார். ஆகவே, இந்த உத்தர வாதத்தோடு அவர்கள் இதை விட்டுக் கொடுக்கலாம் என்றும், சபையின் நடவடிக்கைகள் தொடர அனுமதிப்பார் என்று நான் நிச்சயமாக எதிர்பார்க்கிறேன்.

திரு. க. சுப்பு : உங்களுக்கு வேண்டியவர்கள் என்றால் சீக்கிரமாக உடனடியாக எடுத்துக் கொள்ளுகிறீர்கள். நான் கொடுத்துள்ள பிரச்னை என்னவென்று வாசிக்கக் கூடாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு சு. சுப்பு அவர்களுடைய பிரச்னையை நாளைக்கு எடுத்துக் கொள்ளுகிறேன். தயவுசெய்து உட்காருங்கள்.

1979 மார்ச் 14]

திரு க. சுப்பு : எந்த விதியிலே அப்படி சொல்லப்பட்டு இருக்கிறது?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்த விதியிலேயும் சொல்லப்படவில்லை. ஆறுமுகம் அவர்கள்.

திரு சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவரவர்களே, தங்களுடைய மேலான கவனத்திற்கு இதை ஒரு ஆலோசனையாகக் கூறுகிறேன். பல துறைகளைச் சேர்ந்த கேள்விகளுக்கு முறைப்படி பதில்கள் பெற முடியவில்லை. காரணம், பேரவைத் தலைவர் அவர்கள் அந்தப் பக்கத்திலே உள்ளவர்களைத் தான் அனுமதிக்கிறார். ஆகவே, நாளையிலிருந்து இந்தப் பக்கத்திலே உள்ளவர்களைக் கேள்விகள் கேட்க அனுமதிக்க வேண்டும். இதைத் தூய நோக்கத்தோடு தான் சொல்கிறேன், தீய நோக்கத்தோடு அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் என்ன உரிமைப் பிரச்னை கொடுத்தார்கள் என்பதைத் தான் சொல்ல விரும்புகிறார்கள். அதைச் சொல்ல விடுங்கள். பிரச்னையை நாளை எடுத்துக் கொள்ளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதிகளில் அப்படி இல்லை நான் அனுமதித்தால் தான் உண்டு. சொல்ல வேண்டுமென்ற நிர்ப்பந்தம் இல்லை. நாளை எடுத்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : யார் மீது கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லக் கூடாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளைக்கு எடுத்துக் கொள்வதாக உத்தரவாதம் தருகிறேன்.

திரு. க. சுப்பு :பல பிரச்சனைகளை நான் கொடுத்திருக்கிறேன் இது என்ன என்பதைச் சொல்லக் கூடாதா)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரே ஒரு உரிமைப் பிரச்னையைக் கொடுத்துவிட்டு, உண்மைக்குப் புறம்பான முறையிலே பலவற்றைக் கொடுத்திருப்பதாகச் சொல்வதெல்லாம், இந்த அவையின் மரபை, மரியாதையை காப்பாற்றுவதாக இல்லை. எதிர்க் கட்சித் தலைவர்தான் இதற்கு ஒரு முடிவெடுக்க வேண்டும். தயாராக இருந்த பிரச்னையை எடுத்துக் கொண்டேன். இது தயாராக இல்லை. 4 பத்திரிகைகளை

நான் கேட்டிருந்தேன். 2, 3 பத்திரிகைகளையாவது கொண்டு வாருங்கள் என்று சொன்னேன். கொண்டு வராததால் அனுமதிக்க முடியவில்லை.

திரு. க. சுப்பு : அப்படி கொடுக்கவேண்டுமென்று ரூலிங்கைக் காட்டுங்கள். அனுமதிக்க முடியாது என்று தாங்கள் சொல்ல முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்த விதியின் கீழ் அவை மீறல் பிரச்னையைக் கொடுத்துவிட்டு, நான் அனுமதிக்க முடியாது என்று சொல்ல முடியாது என்று சொல்லுகிறார்கள்? முன் வரிசையிலே உள்ளவர்கள் இதற்கு வழிகாட்டினால்தான் நல்லது. இப்படி கட்டுப்பாடு இல்லாத முறையில் நடந்து கொண்டால் எப்படி நான் அவையை நடத்த முடியும். நாளைக்கு எடுத்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : நீங்கள் அசெம்பிளி நடத்துகிறீர்களா? அல்லது மீன் மார்க்கெட் நடத்துகிறீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களைப் போன்றவர்கள் இருந்தால் மீன் மார்க்கெட் தான் நடக்கும். உங்கள் தலைவர் சொன்னதற்கே கட்டுப்பட முடியாது என்று சுப்பு சொன்னால்' என்ன அர்த்தம்.

திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான பிரச்னை. சிம்கோவைப் பற்றிக் கொடுத்த தாகத் தெரிகிறது. நாளைக்கு எடுத்துக் கொண்டால் சரியாக இருக்கும்.

திரு. க. சுப்பு : நான் கொடுத்திருப்பது சிம்கோ பிரச்னையைப் பற்றி அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது பிரிவிலெஜ் மேட்டரைப் பற்றியது. நாளைக்கு எடுத்துக் கொள்கிறேன்.

திரு. துரை கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, அவர் களுடைய தலைவர் பேசிக் கொண்டிருக்கிறார். ஆனால், உறுப்பினர் சுப்பு அவர்களும் நின்றுகொண்டு பேசுகிறார். இரண்டு பேர்களும் எப்படிப் பேசலாம்?

[முற்பகல் 10.10]

திரு. க. சுப்பு : எனக்கு மைக் போடவில்லை, அவருக்கு மட்டும் எப்படி மைக் போட்டீர்கள்?

1979 மார்ச் 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அவருக்கு அனுமதி கொடுத்தேன்.

திரு. க சுப்பு : என்ன உரிமைப் பிரச்சினை? யார் மேல் என்று சொல்ல வேண்டாமா: என்ன பயம்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சொல்லக்கூடாது. நான் அனுமதித்தாலொழிய சொல்லக்கூடாது.

திரு. க. சுப்பு : நான் சொல்லாமல் விட முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்த விதியின்கீழ் அவர் சொல்ல முடியும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொடுத்திருக்கிறார். உங்களுடைய அனுமதியின் பேரில்தான் அது இந்த அவைக்கு வரமுடியும். நீங்கள் அனுமதி கொடுக்க வேண்டும். ஏன் உரிமைப் பிரச்சினையை எடுத்துக் கொள்ளவில்லை என்று வற்புறுத்த யாருக்கும் உரிமை கிடையாது என்பதைத் தங்கள் மேலான கவனத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : ஆயிரம் பேர் என்ன சொன்னாலும் உரிமைப் பிரச்சினை என்ன என்று நான் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அனுமதித்தாலொழிய நீங்கள் சொல்ல முடியாது. இந்த நிலை பற்றி எதிர்க்கட்சித் தலைவர்கள் ஒரு முடிவு எடுத்தாக வேண்டும்.

திரு. க. சுப்பு : சபாநாயகர் சபாநாயகராக இல்லை. நான் உரிமைப் பிரச்சினை என்ன என்று சொல்லாமல் விடமாட்டேன். எங்கள் மேல் உரிமைப் பிரச்சினை கொடுத்தால் உடனே எடுத்துக் கொள்வது, அடுத்தவர்கள் மீது கொடுத்தால் எடுத்துக் கொள்வதில்லை.

3. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

(அ) சிதம்பரத்தில் திரு. லத்தீப் அவர்களை சிலர் தாக்க முயன்றது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டப் பேரவை உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் 10–3–79 அன்று இரவு 7-20 மணிக்குச் சிதம்பரம் நகரைக் கடந்து கொண்டிருந்தபோது சில காலிகளும், போலீசாரும் தடுத்து நிறுத்தித் தாக்க முயன்றதன்

விளைவால் ஏற்பட்ட கொந்தளிப்பான நிலையைப் பற்றி விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டு திருவாளர்கள் மு. அம்பிகாபதி, கே. கந்தசாமி, துரை முத்துசாமி, ஜே. ஜேம்ஸ், எஸ். சிவசாமி, துரை கலியமூர்த்தி ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : (மேஜை மேல் உள்ள வெயிட்டை எடுத்துக் காட்டி) இந்தத் துணி உறைக்குள் முன்பு மணல் இருந்தது, தற்போது பஞ்சை அடைத்து வைத்திருக்கிறார்கள். மீண்டும் மணலை அடைத்து வைப்பார்களா அல்லது வெயிட்டுக்கு கல்லை வைப்பார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கடந்த வாரம் நடந்த நிகழ்ச்சியின் காரணமாக மாற்றியிருப்பார்கள் என்று கருதுகிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : நீங்கள் எதிர்க்கட்சியில் இருந்தபோது நாங்கள் மாற்றினோம்.

திரு. மு. கருணாநிதி : திரு. சுப்பு அவர்கள் கொடுத்த உரிமைப் பிரச்சினை நேற்றே உங்களிடம் தரப்பட்டது. அதை ஏன் எடுத்துக்கொள்ள மறுக்கிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்று என்னிடம் கொடுத்தபோது ஒரே ஒரு பத்திரிகை காட்டப்பட்டது. இன்னும் இரண்டு மூன்று பத்திரிகைகள் தாருங்கள் என்று கேட்டேன். இரண்டு மூன்று பத்திரிகைகளைப் பார்க்க வேண்டும்.

திரு. மு. கருணாநிதி : என்ன உரிமைப் பிரச்சினை என்று படித்தால் என்ன?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது ஆய்வில் இருக்கிறது. நான் அனுமதி தரவில்லை. எதிர்க்கட்சித் தலைவர்தான் வழி காட்ட வேண்டும். வேறு இரண்டு மூன்று பத்திரிகைகளைக் காட்டச் சொன்னால் தேவையில்லை என்று சொல்லுகிறார்.

திரு. சி. ஆறுமுகம் : பத்திரிகைகள் இங்கேயே இருக்கின்றன. ஒரு நாள் போதாதா அவற்றைப் பார்ப்பதற்கு? நீங்கள் வரவழைத்துப் பார்க்க முடியாதா? உங்களுடைய அறைக்குப் பக்கத்திலேயே எல்லாப் பத்திரிகைகளும் இருக்கின்றன. அதை ஏன் பார்க்கக்கூடாது?

திரு. மு. கருணாநிதி : யார் மீது உரிமைப் பிரச்சினை என்பதையாவது சொல்ல அனுமதிக்கலாம் அல்லவா?

1979 மார்ச் 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதிகளின்படி அனுமதி இல்லை. நான் அனுமதிக்காமல் பிரச்சினையைச் சொல்ல முடியாது.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மதிப்பிற்குரிய சட்டப் பேரவை உறுப்பினர் லத்தீப் அவர்கள் கடந்த 10.3.79 அன்று சிதம்பரம் வழியாகச் செல்லுகிறபோது அங்கே காவல் துறையினர் அவரைத் தடுத்து நிறுத்திபோது நான் பொதுக் கூட்டத்திற்குச் செல்ல வேண்டும் நான் ஒரு சட்டமன்ற உறுப்பினர்' என்று கூறியும் அந்தக் காவல் துறையைச் சேர்ந்தவர் அங்கே நின்று கொண்டிருந்தவர் 'யாரடா சட்ட மன்ற உறுப்பினர்' என்று கேட்டிருக்கிறார். அவமரியாதை யாகப் பேசி, ஒரு சட்டமன்ற உறுப்பினரையே கேவலப்படுத்தி இருப்பதோடு மட்டுமல்லாமல் சில காலிகளும் அங்கே முறைகேடாக அவரிடம் நடந்து இருப்பதாகச் செய்திகள் வருகின்றன. ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் நடத்தப்படவேண்டு மென்று நடத்தப்படாமல் மிகவும் மோசமாக, கேவலமாக காவல் துறையைச் சேர்ந்தவர்களால் நடத்தப்பட்டிருப்பது, சட்ட மன்ற உறுப்பினர்களையெல்லாம் அவமானப்படுத்துகிற நிகழ்ச்சியாகும். ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்கிறபோது கான்ஸ்டபிளோ, ஹெட் கான்ஸ்டபிளோ, சப்-இன்ஸ்பெக்டரோ எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்ற முறையில் கூட இல்லாமல் நடந்து கொண்டிருக்கிறார்கள், இதே மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் நாளைக்கே கூட அமைச்சராகலாம். இன்றைக்கு அமைச்சராக இருக்கிறவர்கள் சட்டமன்ற உறுப்பினராகலாம். எனவே சட்டமன்ற உறுப்பினரா, அமைச்சரா என்று இல்லாமல்- சட்டமன்ற உறுப்பினரே கூட இல்லாமல் போகலாம், மக்கள் நினைத்தால் யாரை வேண்டுமானாலும் எங்கே வேண்டுமானாலும் வைக்கலாம்-மரியாதையாக நடத்தப்படவேண்டும். அதைப்பற்றி விரிவாக இந்தச் சபையிலே விவாதிக்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினருக்கு டாக்ஸி கூட வரமாட்டேன் என் கிறார்கள், ஆட்டோ கூட வரமாட்டேன் என்கிறார்கள். பணம் கூடுதலாகக் கொடுத்தால் வருவதில் சிக்கல் இருக்கிறது. இங்கே சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலே டெலிபோன்கூட சரியாக வேலை செய்யவில்லை, டெலிபோன் கூட எங்களுக்கு சரியாக மதிப்புக் கொடுக்கவில்லை. அதன் பேரிலே விவாதம் நடைபெற வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் 10.3.79 அன்று இரவு சிதம்பரத்திலே காவல்துறையின ரால் இழிவாகப் பேசப்பட்டது சம்பந்தமாக விவாதிப்பதற்காக அவையின் மற்ற நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டு மென்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன்,

திரு கே. கந்தசாமி : தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் கண்ணியமிக்க திரு. லத்தீப் அவர்கள் சட்டப்பேரவை நடந்துகொண்டிருக்கிற நேரத்திலே சிதம்பரம்

வழியாகக் குறிப்பிட்ட தெருவின் வழியாக, அடுத்த ஊருக்குப் பொதுக் கூட்டத்திலே கலந்து கொள்வதற்காக ஒரு கொடியைக் கட்டிய காரிலே அந்தத் தெருவிலே நுழைந்து செல்கிற போது, சில பேர்கள் கல்லெறிந்ததாகவும், போலீஸ் அதிகாரிகள் வந்து கேட்டபோது, திரு. லத்தீப் அவர்கள் நான் சட்டமன்ற உறுப்பினர் என்று சொன்னதற்குப் பிறகும், உன்னை யாரடா சட்டமன்ற உறுப்பினர் என்று சொல்வான், என்ற முறையிலே சொல்கிற அளவிற்கு மனம் புண்படும்படியாகப் பேசியதோடு மட்டுமல்லாமல் பொதுமக்களும் அங்கே ஆவேசமாக வந்து, அவருடைய உயிருக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய சூழ்நிலையெல்லாம் இருந்தது என்று மாண்புமிகு உறுப்பினரே என்னிடத்திலே நேரிலே சொன்னார்கள். இங்கே அவர்கள் இருக்க வேண்டுமென்ற நிலமை இருப்பினும், அவருடைய துணைவியார் உடல்நிலை குறித்து அவருக்கு தந்தி வந்த காரணத்தால் அவர் கிராமத்திற்குப் போயிருக்கிறார், அதனாலே அவர் நேரிலே இங்கே விளக்கம் சொல்ல வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது மாண்புமிகு உறுப்பினர் லத்தீப்புக்கு தனிப்பட்ட முறையிலே ஏற்பட்ட நிகழ்ச்சியாகக் கருதாமல் நம் அத்தனை பேர்களுக்கும் நடந்துவிட்ட நிகழ்ச்சியாக கருதி, இது தொடர்ந்து நடைபெறாத முறையிலே மரியாதை அளிக்கிற அளவிற்கு, காவல் துறையினர் தங்களுடைய கடமைகளைச் செய்ய வேண்டும் ஏதேதோ கடமைகளைச் செய்யவேண்டுமென்றெல்லாம் எழுதி வைத்து இருக்கிறார்கள், எந்தப் பிரஜையாக இருந்தாலும் மரியாதையாக நடத்துவதற்கு அவர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள். முறையோடு சொல்லி நிறுத்தியிருக்கலாம், ஆனால் கூட்டம் நடந்துகொண்டிருக்கிறது என்று சொன்னாலும்கூட, அல்லது எதுவாக இருந்தாலும்கூட, முறை தவறி நடந்தது ஒரு பதட்டமான நிலைமையை ஏற்படுத்தி இருக்கிறது. இதைப் பற்றி விவாதித்து முடிவுசெய்வதற்கு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பலரும் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்கின்ற முறையிலே இதர அலுவல்களை ஒத்திவைக்கக் கோருகிறேன். வணக்கம்.

[முற்பகல் 10.20]

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் சிதம்பரம் வழியாகச் சென்றபொழுது நடைபெற்ற நிகழ்ச்சியைப்பற்றி எனக்கு முன்னால் எடுத்துக்கூறிய நண்பர்கள் விரிவாக எடுத்துக் கூறினார்கள். நான் குறிப்பிட விரும்புவதெல்லாம் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு எந்த மரி

யாதையும், எந்தப் பாதுகாப்பும் இந்த நாட்டில் இருக்கிறதோ அந்த அளவிற்கு எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்களுக்கும், எதிர்க் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், தலைவர்களுக்கும் கொடுக்க வேண்டிய கடமை இந்த அரசாங்கத்தையே சார்ந் திருக்கிறது என்பதைக் கூற விரும்புகிறேன். அதற்குப் பதிலாக இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பல்வேறு நிகழ்ச்சி களைப் பார்க்கும்பொழுது ஆளுகின்ற ஆளுங்கட்சியைச் சேர்ந்த வர்களுக்கு ஒரு நியதியும், எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்களுக்கு இன் னொரு நியதியும் என்ற முறையிலே அரசாங்கத் தரப்பிலே மட்டு மல்ல, பல்வேறு இலாக்காக்களிலும் நடைபெற்றுக் கொண்டிருக் கிறது குறுப்பாக, போலீஸ் இலாக்காவில் திட்டமிட்ட செய லாகவே நடத்திக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அங்கத்தினர் லத்தீப் அவர்களை நடத்தியமுறை, அவர்களிடம் எந்த முறையில தகாத வார்த்தைகளை உபயோகித்தார்கள் என்பதைப்பற்றி இங்கே இந்த மாமன்றத்திலே எடுத்துக்கூறக்கூடிய வார்த்தைகள் அல்ல என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இந்த அரசாங்கம் நிச்சயமாக போலீஸ் இலாக்கா விற்கு ஒரு டைரக்ஷன் கொடுத்தாக வேண்டும். எதிர்க் கட்சியினரோடு முறைகேடாக நடக்கக்கூடாது, அப்படி நடந்தால் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உத்தர வாதம் கொடுத்தால்தான் போலீஸ் இலாக்காவிலுள்ள அதிகாரிகள் ஒழுங்காக செயல்படுவார்கள் என்ற அளவிற்கு வந்துவிட்டது. இப்பொழுது இருக்கும் முறை என்னவென்றால் எதிர்க்கட்சி அங்கத்தினர்களை, அல்லது சட்டமன்ற உறுப்பினர்களைத் தாக்கியவர்களுக்குத்தான் பரிசு என்ற முறையில் அரசு இருக்கும் நிலையில், அதன் அதிகாரிகள் செயல்படுகிறார்கள். ஆகவே, இந்த நிலை நிச்சயமாக மாறவேண்டும். ஆகவேதான் சிதம்பரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியைப்பற்றி இன்று நாம் விரிவாக விவாதிக்க இந்தச் சட்டமன்றத்தின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலை வரவர்களே, இந்த நிகழ்ச்சியைப் பொறுத்த வரையில் நமது மதிப்பிற்குரிய முஸ்லீம் லீக் சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு லத்தீப் அவர்கள் சென்னையிலிருந்து சிதம்பரம் வழியாகத் தேரழுந்தூருக்குச் சென்றிருக்கிறார்கள். 10-3-79 ஆம் தேதி யன்று சுமார் ஏழேகால், ஏழரை மணியளவில் சிதம்பரம் வடக்கு வீதியும், கீழ வீதியும் சந்திக்கும் இடத்தில் ஆளுங் கட்சியினரால் தடுத்து நிறுத்தப்பட்டு அங்கே அவரைத் தரச் குறைவாகப் பேசியிருக்கிறார்கள். அவர் முஸ்லீம் லீக் சட்டமன்ற உறுப்பினர் என்று சொன்னபொழுது, இவர்தான் ஆளுங் கட்சியை மிகத் தீவிரமாக எதிர்த்துப் பேசுகிற சாயபு என்று தரக்குறைவாகப் பேசியிருக்கிறார்கள், சொல்லக்கூடாத வார்த்தைகளைப் பேசியிருக்கிறார்கள். அங்கே போலீஸ்காரர்கள் இருந்திருக்கிறார்கள். அருகிலேதான் டி.எஸ்.பி.யின் விடுதி

இருக்கிறது. அதற்கு அருகில்தான் இந்தச் சம்பவம் நடந்திருக்கிறது. அங்கே ஆளுங்கட்சியினரின் கூட்டம் நடப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. நான் சென்னையிலிருந்து 6—40, 6—45 மணி அளவிலே அங்கே செல்கிறபொழுது அங்கே எந்தவிதமான அதிகப்படியான கூட்டமும் இல்லை. அங்கே மிகச் சாதாரணமான முறையிலேதான் இருந்தது. அதுவரையிலும் போக்குவரத்துத் தடைப்படவில்லை. 6-40 மணிக்கு நாகப்பட்டினம் செல்லும் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் வண்டி அந்த வழியாகச் சென்று கொண்டிருந்தது. அதற்குப்பிறகு சில நிமிஷங்களுக்கெல்லாம்தான் இந்தக் கார் போயிருக்கிறது. அந்த நேரத்திலே அது தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது. அவர் தன்னை முஸ்லீம் தோழர், சட்டமன்ற உறுப்பினர் என்று சொன்னதற்குப் பிறகும் தரக்குறைவாகப் பேசப்பட்டிருக்கிறது. அங்கே உள்ள முஸ்லீம் தோழர்கள், முன்னேற்றக் கழகத்தினர், இன்னும் பொதுமக்கள் ஆகியோர் சேர்ந்து கொண்டு எப்படி நீங்கள் அவரை இப்படிப் பேசலாம் என்று கேட்டிருக்கிறார்கள். அது வேறு விதமாகக் கலவரமாக முடிந்து விடும் என்ற நிலையிலே பக்கத்திலிருந்த டி.எஸ்.பி.யின் வீட்டிற்குச் சென்று நமது சட்டமன்ற உறுப்பினர் சொல்லி புகார் கொடுத்துவிட்டு அத்துடன் திரும்பி வந்திருக்கிறார்கள்.

ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கே இந்தக் கதி என்றால், சட்டமன்ற உறுப்பினர் என்று தெரிந்தும் போலீஸ்காரர்களின் எதிரில் இந்த நிலையிலே நடைபெற்றிருக்கிறது என்றால், மேலும் இப்படி நடைபெற்றுக்கொண்டிருந்தால், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எப்படிப் பாதுகாப்பு இருக்கும்? சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி இராமச்சந்திரன் அவர்கள் தாக்கப்பட்டு கவலைக்கிடமான நிலையிலே இருந்தார்கள். இந்த நிலையிலே பார்க்கும் பொழுது மிகத் தீவிரமாக ஆளுங்கட்சியிலே இருப்பவர்களை தமிழக அரசிலே மிகத் தீவிரமாக நடவடிக்கை எடுத்து நல்லமுறையில் இவைகளை நிறுத்தி வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அந்த முறையிலே விரிவாக விவரங்களைப் பேச வேண்டுமென்றால் இந்தச் சபையின் நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று பேரவைத் தலைவரவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை இங்கே முன்மொழிந்த மாண்புமிகு உறுப்பினர்கள் ஏன் இந்தச் சபையை ஒத்தி வைக்க வேண்டுமென்பதைப் பற்றி விளக்கினார்கள். ஆனால், இன்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் இல்லையே என்பது உண்மையிலே ஒருகுறை என்றுதான் கருதுகிறேன். நேற்றையதினம், இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்வதாக இருந்தது. ஆனாலும், மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்களை நேரில்

1979 மார்ச் 14] [திரு. ச. இராமச்சந்திரன்]

கேட்டறிந்து அதற்குப் பிறகு இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளலாம் என்ற வகையில் நேற்றையதினம் எடுத்துக் கொள்ளவில்லை. மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்களையும் நேரிலே கேட்டேன் அவரிடத்திலும் சொன்னேன், இன்றைய தினம் இதை எடுத்துக்கொள்ளலாம் என்று. அவர்களும் நேரில், என்ன நடந்தது என்பதைப் பற்றி என்னிடத்திலே தெளிவாக எடுத்துக் கூறினார்கள்.

நான் குறிப்பிட விரும்புவது, 10—3—1979 அன்று மாலை சுமார் 7.25 மணிக்கு லத்தீப் அவர்கள் காரிலே சிதம்பரத்திற்குப் போயிருக்கிறார்கள். அப்படி போகிறபொழுது வடக்கு வீதியும் மேற்கு வீதியும் சேர்ந்திருக்கிற சந்திப்பினை அந்த கார் சென்று அடைந்திருக்கிறது. அந்தக்கார் தவறான வழியில்—அதாவது சரியான வழியல்ல, தவறான ரூட்டில்— அது திரும்பியிருக்கிறது. அப்படித் திரும்பி இருக்கும்போது அங்கே டிராஃபிக்கிலே இருந்த கான்ஸ்டபிள் செல்வராஜ், பி.சி.1850 என்பவர், அந்த வண்டியை நிறுத்தி காரிலே உள்ள டிரைவரை ஏசி இருக்கிறார். அந்தக் காரிலே இருந்த சட்டமன்ற உறுப்பினர் காரை விட்டு கீழே இறங்கி—லத்தீப் அவர்கள் சொன்னது தன்னை சட்டமன்ற உறுப்பினர் என்று அறிவித்தும்கூட, மீண்டும் அந்த கான்ஸ்டபிள் தரக்குறைவாக ஏசினார் என்பது. ஆனால், கான்ஸ்டபிளைப் பொறுத்தவரையிலே, அவர் கொடுத்திருக்கின்ற விளக்கம், நான் டிரைவரைத் தான் ஏசினேன், சட்டமன்ற உறுப்பினரை ஏசவில்லை என்கிறார்கள். ஆக, என்ன நடந்தது இருவருக்குள் என்பது நாம் விசாரித்து தெரிந்துகொள்ள வேண்டிய ஒன்றாகும்.

ஆனால், நல்ல வேளையாக மாண்புமிகு உறுப்பினர் லத்திப் அவர்கள்— அருகிலேயே டி.எஸ்.பி. வீடு இருந்திருக்கிறது—டி.எஸ் பி. இடத்திலே நேரிலே போய் அந்த விவரங்களை எலலாம் சொல்லியிருக்கிறார். டி.எஸ்.பி., அவரை சமாதானப்படுத்தியிருக்கிறார், வருத்தமும் தெரிவித்திருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள், பண்புள்ள டி.எஸ்.பி., பண்பில்லா காவலர் என்று அவரிடத்திலே சொல்லிவிட்டு வந்தார்.

நேற்றையதினம் நான் பேசும்பொழுது 'என்னிடத்திலே டி.எஸ்.பி. நல்லமுறையிலே நடந்து கொண்டார்' என்று என்னிடத்திலே தெரிவித்தார். நானும் நேற்று மாலை, டி.எஸ்.பியோடு தொடர்பு கொண்டேன், என்ன நடந்தது என்று கேட்டேன். அவரும், அந்த கான்ஸ்டபிள் எப்படி நடந்து கொண்டார் என்று அங்கே இருக்கிற பொது மக்களிடத்திலே விசாரித்து அறிவதாகவும் சொல்லியிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் எழுத்து மூலமாகப் புகார் கொடுத்திருக்கிறாரா என்றால், ஒன்றும் தரவில்லை. இருந்தாலும் அது சம்பந்தமாக நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம். என்று

குறிப்பிட்டார்கள். நான், மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ அவர்களுக்குத் தெரிவிப்பது, ஆளுங்கட்சிக்கு ஒரு நியதி, எதிர்கட்சிக்கு ஒரு நியதியா என்று கேட்டார்கள். நிச்சயமாக அந்த நிலை ஏற்படாது என்பதைத் தெரிவித்துக் கொண்டு இது சம்பந்தமாக என்ன நடந்தது என்பதைப் பற்றி ஆராய்ந்து ஒரு நல்ல தீர்வு காண அரசு முற்படும் என்பதைத் தெரிவித்து, இத்தகைய ஒரு நிலைமை ஏற்பட்டதற்கு நான் உண்மையிலே என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்து, அதோடு இந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் தேவையில்லையென்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லையென்ற காரணத்தினால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

[முற்பகல் 10.30]

(ஆ) கைத்தறி நெசவுத் தொழிலாளர்களது மறியல் போராட்டம் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் பற்றிய ராஜா சுப்பிரமணியம் கமிட்டியின் சிபாரிசை வெளியிட்டு அமுல் நடத்தவும் மற்றும் பல கோரிக்கைகளுக்காகவும் மாநிலம் முழுவதும் உள்ள கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் 12.3.79 முதல் மத்திய மாநில அரசு அலுவலகங்கள் முன்பு தொடர்ந்து மறியல் செய்து வருவதால் ஏற்பட்டிருக்கும் பதட்ட நிலையைக் குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டு

1. திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், 2. திரு. ஆர். கிருஷ்ணன், 3. திரு. என். வரதராசன், 4. திரு. தே. ஞானசிகாமணி, 5. திரு. சி. கோவிந்தராசன், 6. திரு. சோ. அழகர்சாமி, 7. திரு. மு. அம்பிகாபதி, 8. திரு. சேலம் மு. ஆறுமுகம், 9. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா, 10. திரு. ஏ. ஆர். மாரிமுத்து, 11. திரு. செ. சதாசிவம், 12. திரு. சொ. ந. பழனிசாமி, 13. திரு. ஒ. சுப்பிரமணியன், 14. திரு. வி. கே. கோதண்டராமன் ஆகியோர் தீர்மானம் கேட்டிருக்கிறார்கள், இது எப்படி அவசர முக்கியமானது என்று சுருக்கமாக விளக்குமாறு திரு. பி. சொரணம் அவர்களை அழைக்கிறேன்.........

1979 மார்ச் 14]

திரு. எஸ். சிவசாமி : தலைவர் அவர்களே நானும் இதற்கு பெயர் கொடுத்திருக்கிறேன்—ஆனால் என்னுடைய பெயர் படிக்கப்படவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எனக்குக் கொடுத்திருக்கிற உறுப்பினர்களின் கடிதங்களில் உங்கள் பெயர் இல்லை ; இருப்பதை எல்லாம் படித்துவிட்டேன்.

சேலம் திரு. மு. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் நான் கொடுக்கும்போது தான் சேர்த்து கொடுத்தார்கள்....

கூத்தகுடி திரு. ச. சண்முகம், : (எழுந்திருக்கிறார்) தலைவர் அவர்களே......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எனக்கு கொடுத்த குறிப்பேட்டில் இல்லையென்றாலும் உங்கள் பெயரையும் படித்து விடுகிறேன். திரு. செ. சிவசாமி, திரு. கூத்தகுடி ச. சண்முகம், திரு. சி. ஆறுமுகம்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் அவர்கள் எப்படி அவசர முக்கியமானது என்று சுருக்கமாக தெரிவிக்க வேண்டு கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளத் தொழிலாளர்களுடைய போராட்டம் சம்பந்தமாக விவாதிப்பதற்காக ஏன் இந்த அவை ஒத்தி வைக்கவேண்டும் என்று விளக்குவதற்காக நான் இங்கு முன் வந்திருக்கிறேன். பொதுவாக கைத்தறி நெசவுத் தொழிலைப் பொறுத்த வரையில் தமிழகத்திலே விவசாயிகளுக்கு அடுத்த படியாக அதிகமான மக்கள் பிரதானமாக இந்த புராதனமான தொழிலைச் செய்து வருகிறார்கள். இந்தத் தொழிலைப் பற்றி, இங்கே இருக்கிற படங்களிலே இருக்கின்ற வள்ளுவர் கூட ‘‘ செய்யும் தொழிலை சீர் தூக்கிப்பார்க்கின் என்று சொன்னார். அந்தப் புராதன தொழில் இன்று சீர் குலைந்ததோடு மாத்திரம் அல்ல அது மிகவும் மோசமான நிலையை எட்டக்கூடிய நிலைமை வந்துக் கொண்டிருக்கிறது. அவைகளை பாதுகாக்க வேண்டும். இன்னும் சொல்லப்போனால் கிட்டத்தட்ட தமிழகத்திலே 30 லட்சம் பேர்களுக்கு வாழ வழி செய்யக் கூடிய இந்த தொழில் இன்றைக்கு அழிந்து போகக்கூடிய சூழ்நிலையில் இருப்பதன் காரணமாக அந்தத் தொழிலாளர்கள் இந்த வேலை மறியலை செய்திருக்கிறார்கள். அவர்கள் நிலை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக ராஜா சுப்பிரமணியம் தலைமையில் ஒரு கமிட்டி அமைக்கப் பட்டது. அந்த கமிட்டியினுடைய அறிக்கையும் கொடுக்கப்பட்டு

ஆண்டுகள் பல ஆகின்றன். இதனை வெளியிட வேண்டும் என்று பல கட்சிகள் வற்புறுத்தியும் கூட இன்னும் வெளியிடப் படவில்லை என்ற நிலையை வேதனையோடு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்த கோரிக்கை மாத்திரம் அல்ல, குறைந்த பட்ச கூலி நிர்ணயம் செய்யப்பட வேண்டும், அவர்களின் மொத்த வருட ஊதியத்திலே பன்னிரண்டில் ஒரு பங்கு (1/12) பணத்தை போனஸாக கொடுக்கப்பட வேண்டும். கம்போசிட் மில்களுக்கு வழங்கப்படக் கூடிய நூலினுடைய விலையிலேயே இவர்களுக்கும் நூல் கொடுக்கப்பட வேண்டும். ஏனென்றால் அந்த மில் முதலாளி களுக்கு வழங்கப்படும் நூலின் விலையைவிட இவர்களுக்கு கொடுக்கப்படும் நூலின் விலை 35 சதவீதத்திலிருந்து 40 சதவிகிதம் வரை அதிகமாக இருக்கிறது. இப்படிப்பட்ட கோரிக்கைகளை அரசின் கவனத்திற்கு கொண்டு வருவதற்காகவே சென்ற 12, 13 தேதிகளிலே, இந்தக் கைத்தறி நெசவுத் தொழி லாளர்கள், மத்திய, மாநில அரசு அலுவலகங்கள் முன்பு தொடர்ந்து மறியல் செய்யக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதற்கு அரசினுடைய கவனக்குறைவே காரணம் என்றும் அதனால் தான் இந்த நிலை ஏற்பட்டது என்றும் சொல்லிக்கொள்கிறேன். ஆகவே, இப்படிப்பட்ட நிலையின் காரணமாக 12, 13, மற்றும் இன்றைய தேதிகளிலும் கூட மறியல் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. அந்த மறியல் நடத்துவதில் குறிப்பிட்ட கட்சிகள் என்று எதுவும் இல்லை. எல்லாக் கட்சிகளிலும் உள்ளவர்கள் அந்த இயக்கத்தில் மறியலில் ஈடுபட்டு இருக் கிறார்கள். ஒரு உதாரணத்தைச் சொல்ல வேண்டுமானால், மதுரையில் நேற்றைய முன்தினம் கைது செய்யப்பட்ட 159 கைத்தறி நெசவுத் தொழிலாளர்களிலே ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் 3 பேர், தி.மு.க. 34, ஜனதா 19, சி.பி.ஐ. 4, கா.கா.தே.கா. 2. இந்திரா காங்கிரஸ் 2 மீதம் C.P.M. என்று இப்படி மாநிலம் பூராவும் போலீசாரால் பல்லாயிரக்கணக் கானவர்கள் கைது செய்யப்பட்டு இருப்பதால், மக்கள் மத்தியில் ஒரு பதட்ட நிலை உருவாகியிருக்கிறது. ஆகவே, இது குறித்து அனைத்துக்கட்சி சார்பிலே உள்ள உறுப்பினர்கள் சேர்ந்து விவாதித்து ஒரு முடிவு எடுக்க வழிவகுக்கும் வகையில் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இது குறித்து விவாதிக்க அனுமதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

திரு. செ. சிவசாமி ; மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நாடு முழுவதும் கைத்தறியாளர்கள் போராட்டம் நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். அரசு அவர்கள் மீது யுத்தமே தொடுத்துக் கொண்டு இருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன். மதுரையில் கிட்டதட்ட 287 பேர் கைதாகி யிருக்கிறார்கள். தருமபுரியில் 190 பேர் கைதாகி இருக்கி

றார்கள். கும்பகோணத்தில், திண்டுக்கல்லில் தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளில் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். இப்படி ஆயிரக்கணக்கான பேர் கைதாகியிருக்கிறார்கள். தமிழகத்தில் இப்படி உடைகளை உற்பத்தி செய்பவர்களை ஒடுக்குவதற்காக கைது செய்யப்பட வேண்டிய காரணம் என்ன? இப்படிப்பட்ட ஏழைப்பட்டாளத்தின் மீது அரசு போர் தொடுக்க வேண்டியதன் அவசியம் என்ன? அவர்கள் கேட்பது என்ன? எங்களுக்கு கூலி நிர்ணயம் செய்யப்படவேண்டும், லீவு வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் என்று சாதாரண கோரிக்கைகளை வைத்து அவர்கள் இன்றைக்குப் போராடிக்கொண்டு இருக் கிறார்கள். அவர்கள் கோரிக்கைகளின் மீது இந்த அரசாங்கம் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்கிற காரணத் தால்தான் இன்றைக்கு எங்கே பார்த்தாலும் இப்படிப்பட்ட நிலை இருக்கிறது, எல்லாப் பொருள்களின் விலையும் உயர்ந்து விட்டது. அந்த நிலைகளை கணக்கிட்டு அரசாங்கம் ஊதியத்தை நிர்ணயிக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். ஏற்கனவே ஊதியங்கள் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னாலும் அதைகொடுக்க வேண்டும் என்பதற்கு எந்தவிதமான நட வடிக்கையும் எடுக்கப்படவில்லை. நூல் விலை ஏறுகிறது, நூல் விலை ஏற்றத்தின் காரணமாக துணி விலை ஏறி, அதனால் துணி தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. அதைப்போக்க அரசு எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. கைத்தறியாளர் களைப் பொறுத்த வரையில், இந்த அரசு தவறுதலாகவே நடந்து கொண்டு வருகிறது. இன்று நாடு முழுவதும் அவர்கள் நியாயமான கோரிக்கைகளை வைத்துப போராடுகிறபோது, அவர்களுக்கு எந்தவிதமான பரிகாரமும் காண அரசு முற்பட வில்லை. ஒரு உதாரணம் சொல்கிறேன். கடந்த காலத்தில் ஏற்பட்ட புயல் வெள்ளச்சேதத்தில் பரமக்குடியில் ஒரு கைத்தறி நெசவாளர் வைகை ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டார். அந்தப் பிணம் இராமனாதபுரம் கண்மாயில் மீன்களுக்கு இரையாகி விட்டது. அப்படிப்பட்ட கைத்தறி நெசவாளர்களின் குடும் பத்திற்கு உதவித் தொகை கேட்டு அரசுத் தரப்பில் தாசில்தார் வந்து நேரடியாக ரிப்போட்டு எழுதியது வாஸ்தவம்தான், அரசு உதவி கொடுக்கவேண்டும் என்று பரிந்துரை செய்த பின்பும், அந்தக் குடும்பத்திற்கு உதவித்தொகை 4 மாதங்கள் ஆகியும் இன்னும் கொடுக்கப்படவில்லை. இப்படிப்பட்ட சாதாரணமான ஏழை எளிய மக்களுக்கு, அவர்களின் குடும் பங்களுக்கு எந்தவிதமான உதவியையும் இந்த அரசு செய்ய வில்லையென்றால், இதைக் காட்டிலும் கைத்தறியாளர்கள் பிரச்சனையில் அரசு எப்படி நடந்து கொண்டு இருக்கிறது என்பதைக் காட்ட வேறு உதாரணம் தேவையில்லை என்று கருதுகிறேன். ஆகவே, இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படு வதைத் தடுக்கவும், இப்படிப்பட்ட நிலைமைகளை கருத்தில் கொண்டு, போராட்டத்தை நிறுத்தவும், அவர்களுக்கு வேலை களை ஒழுங்காகத் தரவும், அவர்களுடைய வசதிகளைப்

பெருக்கவும், போன்ற பல்வேறு விவரங்களைக் குறித்து விவாதிக்க, இந்த சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, கடந்த ஒரு வார காலமாக தமிழ்நாட்டில், சேலம், தருமபுரி, கோவை, மதுரை போன்ற நகரங்களில் ஆயிரக்கணக்கான கைத்தறி நெசவாளர்கள் தங்களுடைய எதிர்கால வாழ்விற்காக போராடிக் கொண்டு இருக்கிறார்கள். இன்று கைத்தறியே தங்களுடைய வாழ்வாக நம்பி வாழ்கிற கைத்தறி நெசவாளர்கள் தங்களுடைய எதிர்காலம் என்ன ஆகுமோ என்ற அடிப்படையில் நாள் தோறும் செத்துக்கொண்டு இருக்கிறார்கள். இன்று அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்சக் கூலி கூட ஒழுங்காகக் கிடைக்கவில்லை. அப்படி ஒழுங்காகக் கூலி கொடுக்காத காரணத்தால் முதலாளிகள் மீது எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. நூல் விலை உயர்ந்து இருப்பதால் துணியில் விலை உயர்ந்து இருக்கிறது. ஆகவே, மக்களின் வாங்கும் சக்தி குறைந்து இருப்பதால், கோடிக்கணக்கான கைத்தறித் துணிகள் தேங்கிக்கிடக்கின்றன. இதனால் கைத்தறி நெசவாளர்களின் வேலை தட்டுப்பட்டு இருக்கிறது.

[முற்பகல் 10-40]

அதுமட்டுமல்ல, சில கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்கெனவே இருந்த நிர்வாகிகளுடைய ஊழல் காரணமாக சேலம் போன்ற மாவட்டங்களில் 2,000 பேர்களுக்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்கூட கடந்த இரண்டு மாதங்களாக மூடப்பட்டு, நெசவுத் தொழிலாளர்கள் வேலையில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அப்படிப்பட்ட சங்கங்களை எல்லாம், கைத்தறி தீவிர வளர்ச்சித் திட்டத்தின்கீழ் உதவி செய்து திறக்கச்செய்து, வேலையில்லாமல் கஷ்டப்படும் நெசவாளர்களுக்கு வேலை கொடுக்க உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். இப்படிப்பட்ட பல்வேறு பிரச்சனைகளைப் பற்றி விவாதிக்க, அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, இந்த கைத்தறி நெசவுத் தொழில் என்பது தமிழ்நாட்டில் ஒரு முக்கியமான தொழில். குறிப்பாக அந்நியச் செலவாணி ஈட்டித்தருகிற ஒரு முக்கியமான தொழிலாக இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு தொழிலில் ஈடுபட்டிருக்கும் நெசவாளர்களின் பிரச்சனைகளைத் தீர்த்து வைக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும் கடமை இந்த அரசுக்கு நிச்சயமாக இருக்கிறது. இந்தப் பிரச்சனை சம்பந்தமாக கழிந்த மாதம்

1979 மார்ச் 14] [திரு .எஸ். ஜே. சாதிக் பாட்சா]

14-ந் தேதி தமிழ்நாட்டு நெசவாளர்கள் ஒரு போராட்டத்தை தொடங்க இருப்பதாகவும், அதில் ஒரு பகுதியாக சென்னை கோட்டையை நோக்கி ஊர்வலம் வருவதாகவும் அறிவிக்கப் பட்டது அரசுக்குத் தெரியுமா? அதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று ஒரு கேள்வியை அமைச்சரிடம் கேட்டேன். அப்போது அமைச்சரவர்களால் அதற்கு பதில் சொல்ல இயலவில்லை. கைத்தறி நெசவுத் துறை அமைச்சர் கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். ஈரோடு சென்னிமலை போன்ற பகுதிகளில் இத்தொழிலில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்களைப்பற்றி அவர்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். அமைச்சரவர்கள் அந்த நேரத்திலே உரிய பரிகாரம் கண்டிருந்தால் இன்றைக்கு இந்தப் பிரச்சனை எழுந் திருக்காது.

குறிப்பாக, இராஜா சுப்பிரமணியம் குழுவின் சிபாரிசுகளை நிறைவேற்ற வேண்டும் என்பது நெசவாளர்களுடைய முக்கியமான கோரிக்கை. இன்றைக்கு கோர்ட் மூலம் ஏற்பட்ட முடிவுகளைக் கூட நிறைவேற்ற முன்வராமல் இருக்கிறார்கள் என்று குற்றஞ் சாட்டுகிறார்கள். கோர்ட்டிலே, அந்த வழக்கின் மூலமாக நெசவாளர்களுக்கு சில உரிமைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. போனஸ் பெறுகிற உரிமை உண்டு என்று சொல்லியிருக் கிறார்கள். இப்போது முதலாளிகள் நூலை விற்க தனியாக பில் போட்டு கொடுத்துவிடுகிறார்கள். அதை துணியாக்கிய தற்குப் பின்னால் அதற்கு தனியாக கூலி கொடுக்கிறார்கள். அந்தவகையில் வீவர்ஸுக்கும் மாஸ்டர்ஸுக்கும் உள்ள ரிலேஷன் ஷிப்பைப் பிரிக்கிறார்கள். இதையெல்லாம் கவனத்திற்கொண்டு அமைச்சர் பொறுப்பை ஏற்றிருக்கிற அம்மையாருக்குள்ள அந்த மென்மையான உள்ளத்தோடு இந்தப் பிரச்சனையை பரிசீலித்து நடவடிக்கை எடுக்கவேண்டும். இதைப்பற்றி விரிவாக விவாதித்து, முடிவு செய்ய இந்த அவையின் இதர அலுவல் களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, நெசவாளர் பிரச்சனை என்பது நீண்டநாட்களாக அவர்களுடைய கோரிக் கைகளின்படி அரசு பல நிவாரணங்களை அளிக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தும்கூட இதுவரை அவர்களுக்கு போதுமான பாதுகாப்பு கொடுக்கப்படவில்லை. இராஜா சுப்பிரமணியம் அவர்களுடைய பரிந்துரைகளின்படி எடுக்க வேண்டிய நடவடிக்கை களைபூராவும் எடுக்கவில்லை என்ற முறையிலே கோரிக்கைகள் எல்லாம் வலியுறுத்தப்பட்டு வந்திருக்கின்றன. அரசு அதிலே போதிய கவனம் செலுத்தவில்லை.

அடுத்து, இந்த ஆண்டு நூல் விலை ஏறிய காரணத்தால் ஒரு குடும்பத்தில் 10 ரூபாய், 12 ரூபாய் கூலி பெற்றதற்குப் பதிலாக இன்றைக்கு 5 ரூபாய்தான் கிடைக்கிறது என்று சொல் கிறார்கள். ஊதியம் சரிபாதியாக குறைந்துவிட்டது. மாஸ்டர்

வீவர்கள் அவர்களிடம் கூலிக்கு வேலை செய்யும் தொழிலாளர்களுடைய ஊதியத்தை அந்த அளவுக்கு குறைத்துவிட்டார்கள். ஊதியம் அதிகரிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கும்போது, அதற்காக போராட்டங்கள் நடத்திக் கொண்டிருக்கும் போது திடீரென்று நூல் விலை இரண்டுமடங்குக்கு மேல் ஏறியதன் காரணமாக ஊதியம் குறைந்து, அவருடைய வருவாய் குறைந்து பல்வேறு தொல்லைகளுக்கும் கஷ்டங்களுக்கும் நெசவாளர்கள் ஆளானதால் அவர்கள் வாழ முடியாமல் இருக்கிறார்கள் என்ற காரணத்தால் போராட்டம் தொடங்கி இருக்கிறார்கள். ஆகவே அரசு போதிய கவனத்தோடு உடனடியாக நூல் விலையை குறைத்துக் கொடுக்க ஏற்பாடு செய்தாலொழிய பரிகாரம் காண வழி இருக்காது. நெசவாளர்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய ஊதியம் கிடைக்க வேண்டும்; மாஸ்டர் வீவர்ஸ் சரியாக கூலி கொடுக்க உத்தரவாதம் வேண்டும்; இராஜா சுப்பிரமணியம் குழுவின் பரிந்துரைகளை உடனடியாக அமுலாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இவைகள் பற்றி விரிவாக விவாதித்து பரிசீலிப்பதற்காக சபையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* <u>மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்:</u> தலைவரவர்களே, கடந்த 12, 13 ஆகிய தேதிகளில் மதுரை, கும்பகோணம், கோவை, செங்கல்பட்டு, வட ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் தொழிலியல் நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களை அதிகப்படுத்த வேண்டும் என்றும், திரு. ராஜா சுப்பிரமணியம் கமிட்டியினுடைய பரிந்துரைகளை அமுலாக்க வேண்டும் என்றும் கோரி மறியலில் ஈடுபட்டு வந்ததாகவும் 14-3-1979 அன்று குறிஞ்சிப்பாடி, பண்ருட்டி, கடலூர் ஆகிய இடங்களில் நெசவாளர்கள் கிளர்ச்சி செய்யப் போவதாக அரசுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இதர மாவட்டங்களான இராமநாதபுரம், திருச்சி, சேலம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் இதுவரை நெசவாளர் கிளர்ச்சிகள் எதுவும் நிகழவில்லை. தற்போது ஆறு தீவிர கைத்தறி வளர்ச்சி நிலையங்கள் கரூர், காஞ்சிபுரம், ஈரோடு, குறிஞ்சிப்பா... சேலம், மதுரை ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 6,000 நெசவாளர்கள் வேலை பெற்றுள்ளனர். இந்நிலையங்களின் நெசவாளர்களின் எண்ணிக்கை 22,000 ஆக அடுத்த இரண்டாண்டுகளில் உயர்த்தப்படும். இந்நிலையங்களின் கிளைகள் அந்தந்த பகுதிகளில் தேவையான இடங்களில் நிறுவப்படும்.

நூல் விலை குறைப்பு சம்பந்தமாக தமிழக அரசு மத்திய அரசுடன் தொடர்பு கொண்டுள்ளது. கைத்தறிக்கு நியாயமான விலையில் நூல் விற்பனை செய்ய 'டெக்ஸ்டைல் கார்ப்ரேஷன்' தமிழ்நாட்டில் பல இடங்களில் கிளைகள் திறந்துள்ளன.

நெசவாளர்களுக்குக் குறைந்த விலையில் நூல் கிடைக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் சமீபத்தில் மதுரையில் கூட்டுறவு நூற்பாலையின் கிளை ஒன்றினைத் துவக்கியுள்ளோம். அது மட்டுமல்ல திரு. இராஜா சுப்பிரமணியம் கமிட்டியின் அறிக்கைகளை அரசு பரிசீலித்து வருகிறது. கைத்தறி நெசவுத் தொழிலாளர்களின் நன்மையைக் கருத்தில் கொண்டு அதற்கென சட்டமுன்வடிவு இந்த சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிவடைவதற்குள்ளாகவே கொண்டுவரவேண்டும் என அரசு முடிவெடுத்து அதற்காக தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. ஏற்றுமதி தீவிரமாக இருப்பதால் மாஸ்டர் வீவர்கள் நல்ல கூலிகளை வழங்கி வருகின்றனர். கடந்த 20 ஆண்டுகளில் கிடைக்கப்பெற்ற கூலியை விட கூடுதல் அளவில் கூலி வழங்கப்படுகிறது. நெசவுத்தொழில் ஒரு சிறப்பான கட்டத்தை எய்தி வரும் இந்தச் சூழ்நிலையில் நெசவாளர்கள் கிளர்ச்சி, மறியல் போன்றவற்றில் ஈடுபட வேண்டாம் என கேட்டுக்கொள்கிறேன். எனவே இதற்காக அரசின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி துறை அமைச்சரவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் அனுமதி மறுக்கப்படுகிறது.

(இ) சென்னை மேற்கு மாம்பலத்தில் நடைபெற்ற கலவரம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சென்னை மேற்கு மாம்பலத்தில் 12-3-1979 அன்று திராவிட முன்னேற்றக் கழகம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இடையே ஏற்பட்ட பயங்கர மோதலில் தீ வைப்பு, கத்திக் குத்து, மத்திய போலீஸ் தடியடிப் பிரயோகம் ஏற்பட்டுள்ளதால் அந்தப் பகுதியில் மக்களின் மத்தியில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பான நிலைமைப் பற்றி விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டு திரு. இரா. எ. சந்திரன் ஜெயபால், திரு. து. புருஷோத்தமன், திரு. துரை முத்துசாமி, திரு. கூத்தக்குடி ச. சண்முகம், திரு. மு. அம்பிகாபதி, திரு. சோ. அழகர்சாமி, திரு. செ. சிவசாமி, திரு. சேலம் மு. ஆறுமுகம். ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்பதைச் மிகச் சுருக்கமாக விளக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இரா. எ. சந்திரன் ஜெயபால் : பேரவையின் மாண்புமிகு தலைவரவர்களே, சென்னை, தியாகராயநகர் பகுதி மேற்கு மாம்பலத்திலேயும் சைதாப்பேட்டை தொகுதி சைதாப் பேட்டையிலேயும் கடந்த ஒரு வார காலமாக சட்டமும் ஒழுங்கும் சீர் குலைந்து இருக்கிறது. அங்கே ஆளும் கட்சித் தொண்டர்கள் வேறு கட்சியினரைத் தாக்கியதன் காரணமாக பொதுமக்களிடையே பெரிய பீதியும், பதட்டமும் ஏற்பட்டிருக் கிறது. கடந்த 7ஆம் தேதி அன்று மேற்கு மாம்பலம் பிருந்தாவனம் காலனியில் உள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தினரின் வீடு களில் ஆளும் கட்சியைச் சேர்ந்த தொண்டர்கள் புகுந்து அடித் திருக்கிறார்கள். சோடா புட்டிகளை வீசியிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே ஓடுகின்ற பேருந்துகள் அந்த வழிகளிலே செல்லாமல் வேறு வழியாகத் திருப்பி அனுப்பப்பட்டன.

அதுமட்டுமல்ல, சைதாப்பேட்டையில் உள்ள திரு. குமார் என்ற கழகத் தோழரின் வீட்டில் 15 பேர்கள் கத்தியுடனும், சைக்கிள் செயினுடனும் புகுந்து தாக்கி இருக்கிறார்கள். அவர்கள் பொதுமக்களையும் தாக்கியுள்ளார்கள்.

(முற்பகல் 10.50)

கடைகள் தாக்கப்பட்டு, சைதாப்பேட்டையில் கடையடைப்பு ஏற்பட்டு கடைகள் மூடப்பட்டிருக்கின்றன. மார்ச் 9-ம் தேதி 116-வது வட்டத்தில் மேற்கு மாம்பலத்தில் வட்டச் செயலாளர் எஸ். கே. சாமி, இளஞ்செழியன் மன்றச் செயலாளர் சீனிவாசன், கோவிந்தசாமி நினைவுமன்றத்தைச் சேர்ந்த காசிநாதன் இவர்களை ஆளும்கட்சித் தொண்டர்கள் சைக்கிள் செயினாலும் கத்தியாலும் தாக்கி சீனிவாசனுக்கும் காசிநாதனுக்கும் கத்திக் குத்து காயம் ஏற்படுத்தி அவர்கள் இருவரும் மருத்துவ மனையில் காவல்துறையினரால் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

அதே நேரத்தில் சைதாப்பேட்டையில் சாமி என்ற கழக நண்பர் தாக்கப்பட்டு அவரும் மருத்துவமனையில் சேர்க்கப் பட்டிருக்கிறார். 10-ம் தேதி இரவு திராவிட முன்னேற்றக் கழக பொதுக்கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. இதே 116-வது வட்டத்தில் ஏரிக்கரையோரத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த பொதுக்கூட்டத்தை நடைபெறாதபடி தடுக்க கலாட்டா செய்து சோடா பாட்டில்களும் கற்களும் வீசப்பட்டு கூட்டம் நடை பெறமுடியாத அளவிற்கு செய்த பிறகு அதே சாலையில், அதே தெருவில் உள்ள நாஷனல் தியேட்டர் என்ற திரைப்பட அரங்கில் இந்த அராஜகத் தொண்டர்கள் நுழைந்து அங்குள்ள மக்களை குறிப்பாக பெண்களை தாக்கி திரைப்படக் காட்சி நடைபெறாத அளவிற்கு செய்திருப்பதும் எல்லாச் செய்தித்தாள்களிலும், தமிழ் ஆங்கிலச் செய்தித்தாள்களிலும் வெளிவந்துள்ளன. பிறகு 11-ம் தேதி இரவு, 12-ம் தேதி காலை சுமார் 2.30 மணிக்கு 116-ம் வட்ட செயலாளர் எஸ். கே. சாமி அவர்களின் சைக்கிள் கடையை இந்த அராஜகத் தொண்டர்கள் பெட்ரோல்

1979 மார்ச் 14] [திரு. இரா. எ. சந்திரன் ஜெயபால்]

ஊற்றி கொளுத்தி ஏறத்தாழ ரூ. 15,000 பெறுமான அளவிற்குள்ள சைக்கிள்களுக்கும் இதரச் சாமான்களுக்கும் சேதம் ஏற்படுத்தி பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளார்கள்,

இதுபற்றி மணி என்பவர் அசோக் நகர் போலீஸ் ஸ்டேஷனில் ஒரு பிராது கொடுத்திருக்கிறார். அங்கு வாச்மானாக இருப்பவர் ரோந்துவரும்போது துரைராஜ் மற்றும் ஐந்து பேர்களைக் குறிப்பிட்டு, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைப்பாளர் பட்டாபி உட்பட, பிராது கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பிராதின்மீது எவ்விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. 12ம் தேதி காலை இந்த மன்றத்தில் என் சக உறுப்பினராக இருக்கிற திரு. புருஷோத்தமன் அவர்களும் நானும் இங்கே இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்த பிறகுதான் சென்னை காவல் துறையினர் விழிப்புண்டு இந்த இடங்களில் நடவடிக்கைகள் எடுக்க ஆரம்பித்திருக்கிறார்கள். இந்த மன்றத்தில் இந்தத் தீர்மானத்தைத் தாக்கல் செய்த பிறகுதான் இரண்டுபேர்களை ஜாமீனில் விடக்கூடிய செக்ஷனின்கீழ் கைது செய்து நேற்று கோர்ட்டில் ஆஜர் செய்திருக்கிறார்கள். சரியான விசாரணை நடைபெறவில்லை. சட்டம் ஒழுங்கு அங்கு சீரழிந்திருக்கிறது. அங்கு பதட்டமானதொரு நிலை நீடிக்கிறது. இரண்டு மூன்று தொகுதிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே மக்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மக்களிடையே பதட்ட நிலை பரவியிருக்கிறது. ஆகவே இதுபற்றி விரிவாக விவாதிக்க அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் தலைநகரில், சென்னையில் கடந்த 7-ம் தேதியிலிருந்து 13-ம் தேதி வரை தொடர்ச்சியாக மேற்கு மாம்பலம் பகுதியில் கலவரங்கள் நடந்துகொண்டிருப்பதாக ஆங்கிலப் பத்திரிகைகளிலும் தமிழ்ப் பத்திரிகைகளிலும் செய்திகள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. குறிப்பாக மேற்கு மாம்பலம் பகுதியில் நடைபெற்ற கலவரங்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவருடைய கடை தீவைக்கப்பட்டிருப்பதாகவும், ஆட்கள் காயம் அடைந்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது. குறிப்பாக இதில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் பிரதான எதிர் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இடையே தாக்குதல்கள் நடந்ததாக பத்திரிகைகளில் செய்திகள் வந்திருக்கின்றன.

இதனுடைய முழுமையான உண்மைகளை நாம் புரிந்து கொள்ளவேண்டும். ஆளும்கட்சியினர்களால் எதிர்கட்சியினர் தாக்குதலுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள், இதில் உண்மையிலேயே ஆளும்கட்சியினர் சிலர் ஈடுபட்டிருக்கிறார்களா என்பதைப்பற்றி பரிசீலிக்கவேண்டிய முக்கியமான பல

விஷயங்கள் இதில் இருக்கின்றன. ஏனென்றால் ஆளுகிற கட்சி என்கின்ற காரணத்தால் தவறு செய்யலாம் என்கின்ற உணர்வு வந்துவிடுமானால் அது ஆளும் கட்சிக்கே நல்லதல்ல. ஆளும்கட்சியினர் எதிர்கட்சியினரை தாக்கினால் தங்களுக்கு போலீஸ் பாதுகாப்பு உண்டு என்று எண்ணுவது ஆளும் கட்சிக்கு நல்லதாக அமையாது. இப்படிப்பட்ட ஒரு கலவரம் தமிழகத்தின் தலைநகரத்தில் நடக்கிறது. காவல் துறை இதை கட்டுப்படுத்தாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. மத்திய ரிசர்வ் போலீஸ் அழைக்கப்பட்டிருப்பதாகவும் பல்வேறு நிலைமைகள் நடந்திருக்கின்றன. பத்திரிகைகளில் பரபரப்பாக செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இப்படி நகரத்திலேயே நடக்குமானால் கிராமப்புறங்களில் எப்படி நடக்கும் என்கின்ற பீதி மக்கள் மத்தியில் இருந்து கொண்டிருக்கிறது. இவைகளைப்பற்றியெல்லாம் விரிவாக விவாதிக்கவேண்டும் என்பதால் அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு யார் இதில் ஈடுபட்டார்கள் என்பதைப்பற்றியெல்லாம் விசாரிப்பதற்கு உயர் நீதி மன்ற நீதிபதியின் மூலம் விசாரித்தால்தான் உண்மை கிடைக்கும் என்பதால் இதை வலியுறுத்தி அவையின் பிற நிகழ்ச்சிகளை ஒத்தி வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் மேற்கு மாம்பலத்தில் நடைபெற்ற சம்பவங்களைப்பற்றி எடுத்துக் குறிப்பிட்டார்கள். இந்த சம்பவங்கள் ஒரு தொடர் சங்கிலி போல் இருக்கின்ற காரணத்தால், அவைகளைப் படித்துவிடுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதி அதை படித்துவிடலாம் என்று கருதுகிறேன். அரசுக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையில் இவற்றை அவை முன் வைக்க கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் சந்திரன் ஜெயபால் அவர்கள் குமார் என்பவர் தாக்கப்பட்டது பற்றியும் குறிப்பிட்டார். அது சம்பந்தமான விவரத்தையும் அவை முன் தெரிவிக்க விரும்புகிறேன்.

மைலாப்பூரில் ஆறுமுகம் கோஷ்டி என்றும் கபாலி கோஷ்டி என்றும் இரண்டு கள்ளச் சாராயக் கோஷ்டிகள் இருந்தன.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சட்டமன்ற உறுப்பினர் கபாலி அல்ல என்பதையாவது தெளிவுபடுத்தவேண்டும்.

திரு. டி. கே. கபாலி : இதில் குறிப்பிடுகிற கபாலியை கள்ளச் சாராய கபாலி என்று குறிப்பிட்டால் சரியாக இருக்கும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இதில் எம். எல். ஏ. கபாலி என்று குறிப்பிடவில்லை. தொடர்ந்து அதைப் படிக்கிறேன். 1-9-78 அன்று மயிலாப்பூர் கபாலியை ஆறுமுகமும்

மற்றவர்களும் கத்தியால் குத்தியதாகவும் அது சம்பந்தமாக அபிராமபுரம் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப் பட்டு. . (குறுக்கீடு) இந்தக் கபாலியை அல்ல. .

திரு. சி. ஆறுமுகம் : இதில் ஆறுமுகம் என்று குறிப் பிட்டார்கள். யார், எந்த ஆறுமுகம் என்பதை தெளிவாக சொல்லிவிட்டால் நல்லது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதுராந்தகம் ஆறுமுகம் என்று சொன்னால்தான் உங்களைக் குறிக்கும். இன்னார் மகன் இன்னார் என்று சொல்லிவிட்டால் சரியாய் இருக்கும்.

திரு. து. புருஷோத்தமன்: * * *

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : 1-9-78 அன்று மயிலாப்பூர் கபாலியை ஆறுமுகமும் மற்றவர்களும் கத்தியால் குத்தியது சம்பந்தமாக அபிராமபுரம் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு சைதாப்பேட்டை மாஜிஸ்ட்ரேட் கோர்டில் விசாரணை நடந்து வருகிறது. மயிலாப்பூர் ஆறுமுகம் தான் திருப்பி தாக்கப்படுவோம் என்ற அச்சத்தில் மயிலாப்பூர் பகுதியை காலி செய்துவிட்டு சைதையில் குடியேறினார். சைதையில் ஏற்கனவே இரு கள்ளச் சாராய கோஷ்டிகள் இருந்து வருகின்றன. ஒன்று, துரை, குமார் கோஷ்டி, இன்னொன்று கடும்பாடி கோஷ்டி, மயிலாப்பூர் ஆறுமுகம் துரை கோஷ்டியின் ஆதரவில் ஜாபர்கான் பேட்டையில் வசித்து வருகிறார். துரை கோஷ்டிக்கும் கடும்பாடி கோஷ்டிக்கும் முன்பே பகையுணர்வு இருந்து வந்துள்ளது. துரை கோஷ்டியினர் கடும்பாடி கோஷ்டியை 19-11-78 அன்று தாக்கியதாகவும் அது சம்பந்தமாக சைதை காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. துரை கோஷ்டியினரும், கடும்பாடி கோஷ்டி யினரும் அ. தி. மு. க. என்று தங்களை கூறிவந்தனர். ஆனால் இந்தச் சம்பவத்திற்குப் பிறகு துரை கோஷ்டியினர் தங்களை தி. மு. க. என்று கூறி வந்தனர்.

[முற்பகல் 11.00]

மயிலாப்பூர் கபாலியினுடைய தூண்டுதலின் பேரில் கடும்பாடி கோஷ்டியினர் 8–3–79 அன்று துரை கோஷ்டியைச் சேர்ந்த குமார் என்பவரை கத்தியால் குத்தியதாகவும், அந்த வழக்கு சைதாப்பேட்டையில் பதிவு செய்யப்பட்டு ஆய்வில் இருந்து வருகிறது.

குமார் என்பவர் மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் 10 தடவை களுக்கு மேலாக அபராதம் செலுத்தியவர்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. ச. இராமச்சந்திரன்] [1979 மார்ச் 14

சந்திரன் என்கிற சின்னப்பையன் இவ்வழக்கில் கைது செய்யப்பட்டுள்ளார். மயிலாப்பூர் ஆறுமுகமும், துரையும் மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். அசோக் நகர் 116-வது வட்டத்தில் தி. மு. க. வினருக்கும், அ. தி. மு. க. வினருக்கும் பகையுணர்வு வளர்ந்து வந்தது. இவ்வட்டத்தின் தி. மு. க. செயலாளர் எஸ். கே. சாமி, அ. தி. மு. க. அமைப்பாளர் பட்டாபி 27-2-79 அன்று நடைபெற்ற தி. மு. க. பொதுக் கூட்டத்தில் அ. தி. மு. க. விலிருந்து விலகிய சீனு என்கிற சீனிவாசன் தலைமை தாங்கினார். இக் கூட்டத்தில் பட்டாபி பற்றி கடுமையாக விமரிசித்ததாகவும், இதனால் இரு சாராருக்கும் இடையே மோதும் அளவிற்கு நிலைமை முற்றியது.

7 3–79 அன்று இரவு சமாதானப்படுத்துவதற்காக பட்டாபி என்ற அ. தி. மு. க. வைச் சேர்ந்தவர் இரு சாராரையும் மன்றத்திற்கு வர அழைத்தார். தி. மு. க. வைச் சேர்ந்த எஸ். கே. சாமி மட்டுமே வந்தார். தி. மு. க. வைச் சேர்ந்தவர்கள் வேறு யாரும் வரவில்லை. ஆகவே, பஞ்சாயத்து நடை பெறவில்லை. அப்போது திடீரென்று தம்பையா ரெட்டித் தெரு, பிருந்தாவன் சாலை சந்திப்பில் சோடா பாட்டில்கள் வீசப்பட்டன. காவல் துறை உடனே அங்கு சென்று நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர். பிருந்தாவன் சாலை சந்திப்பில் தன் கடையிலிருந்த சோடா பாட்டில்களை வீசியதாக வேதாசலம் புகார் செய்தார்.

9-3-79 அன்று பட்டாபியும், அவரோடு சேர்ந்து 15 பேரும் தனது கடைக்கு வந்து சீனன் என்பவரைத் தாக்கியதாக தி. மு. க. எஸ். கே. சாமி புகார் செய்தார். தன் சைக்கிள் கடையையும் தாக்கியதாக புகார் செய்தார். சீனன் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளார். வழக்கு பதிவு செய்யப்பட்டு, ஆய்விலுள்ளது.

10-3-79 அன்று சீனனின் ஆதரவாளர்களான, தி. மு, க. வினர் என்று கூறப்படுகின்ற சுமார் 100 பேர்கள் இரவு 8.30 மணியளவில் லேக் வியூ ரோடு, ஈஸ்வரன் கோவில் தெருவில் பிருந்தாவன் சாலையில் கலகம் விளைவித்தனர். கோவிந்தன் என்பவரின் டீக் கடையை சேதப்படுத்தினர். டி. எம். சி. 1524 என்ற ஆட்டோ ரிக்ஷா சேதமாயிற்று. டிரைவர் மாணிக்கமும் காயமுற்றார். பரமசிவத்தின் வெற்றிலை பாக்கு கடைக்கும் சேதம் விளைவித்து மாட்டுக் கொட்டகைக்கு தீ வைக்க முயற்சித்தனர். லேக் வியூ ரோடில் உள்ள கான்டீன் டியூப் லைட்டுக்கு சேதம் விளைவித்தனர். தியேட்டர் முன்னால் உள்ள டீக் கடையில் வேலை செய்யும் பாஸ்கரன் காயமுற்றார். இக்கலவரத்தில் 1 காவலர் காயமுற்றார். காவல்துறை தலையிட்டு நிலைமையைக் கட்டுப்படுத்தியது. கோவிந்தன் புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. காவல் துறை இப்பகுதியை தீவிரமாக கண்காணித்து வந்தனர்.

1979 மார்ச் 14] *[திரு. ச. இராமச்சந்திரன்]*

12-3-1979 அன்று *8.30* மணி அளவில் மூர்த்தி என்பவர் ஜோன்ஸ் ரோடு வழியாகப் போகும்போது பூங்காவனமும், மற்றும் 3 பேர்களும் சேர்ந்து புருவத்தையும், மீசையையும் மழித்து விட்டதாகவும், தன்னைத் தாக்கியதாகவும் புகார் செய்தார். மூர்த்தி பொது மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார். வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

12-3-79 அன்று *3.30* மணியளவில் எஸ். கே. சாமி என்பவருடைய கடை தீப் பிடித்தது. மின்சாரக் கோளாறினால் தீப் பிடித்ததாக கூறப்படுகிறது. காவல் துறையினரும், தீயணைக்கும் படையினரும் விரைந்து தீயணைத்தனர். ரூ. *1,000* இழப்பு ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. சோமநாதன் கொடுத்த புகாரின் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. *7-3-1979* முதல் *10-3-1979* வரை இக்கலவரத்தின் காரணமாக *40* பேர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். நிலைமை கட்டுக்கடங்கியுள்ளது என்கிற காரணத்தால், அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, விவாதிக்கத் தேவையில்லை என்று கூறி அமர்கிறேன்.

* திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மின்வாரியத் துறை அமைச்சர் அவர்கள் மின்சாரக் கோளாறால்தான் கடை தீப்பிடித்தது என்று குறிப்பிட்டார்கள். அப்படி அவருக்கு ஒரு அறிக்கை தரப்பட்டிருக்கிறது. நான் இன்று காலையில் அந்தப் பகுதிக்குச் சென்று கலவரம் நிகழ்ந்த சில இடங்களைப் பார்த்து விட்டு கொளுத்தப்பட்ட, சேதமுற்றிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத் தோழர் சாமி அவர்களுடைய கடையையும் பார்த்துவிட்டுத்தான் இந்த மன்றத்திற்கு வந்தேன். இன்று இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் வருகிற காரணத்தால் அது பற்றிய விவரங்களை அமைச்சருக்குத் தரவேண்டுமென்ற எண்ணத்தோடு, டீக்கடை சேதப்படுத்தப்பட்டது அ. தி. மு. க. கட்சியைச் சேர்ந்தவருடையது என்று அறிக்கை தந்த போலீசார், திராவிட முன்னேற்றக் கழகத் தோழர் சாமியின் கடை தாக்கப் பட்டது என்பதோடு முதல் குறிப்பில் நிறுத்திவிட்டு, இறுதிக் குறிப்பில் சொல்லும்போது அங்கு மின்சாரக் கோளாறு ஏற்பட்டு அதன் காரணமாக அது பற்றி எரிந்து விட்டது என்று குறிப் பிட்டிருக்கிறார்கள்.

நான் நேரில் பார்த்த வகையில் அந்தக் கடையின் கதவு உடைக்கப்பட்டு உள்ளே பெட்ரோல் ஊற்றப்பட்டு தீ வைக்கப் பட்டு அங்குள்ள சாமான்கள் எல்லாம் எரிந்துபோகும் காட்சியைப் புகைப்படம் மூலமாக அமைச்சர் அவர்களுடைய பார்வைக்குக் கொடுத்திருக்கிறேன். ஆயிரம் ரூபாய் சேதம் என்று அதிகாரிகள் அறிவித்திருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் இப்போதே வேண்டு மானாலும் அவர் அலுவல்களை முடித்துவிட்டு அந்தப் பகுதிக்குச் சென்று அந்த இடத்தைப் பார்ப்பாரேயானால் போலீசார் எந்த அளவுக்கு உண்மைக்கு மாறான செய்தியைச் சொல்லியிருக் கிறார்கள் அல்லது சொல்லும்படி செய்யப்பட்டிருக்கிறார்கள்

என்பதைத் தெரிந்து கொள்ளமுடியும். ஏறத்தாழ பத்து அல்லது பதினைந்தாயிரம் ரூபாய்க்கு மேல் உடைமைகள் கொளுத்தப்பட் சேதமுற்று இருக்கின்றன. ஆயிரம் ரூபாய்தான் சேதம் என்ற பெயரிலே வந்திருக்கிற அறிக்கை மகத்தான தவறு, உண்மைக்கு மாறானது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக சென்னை மாநகரத்தில் இன்றைக்கு அமைதியற்ற ஒரு சூழ்நிலை பல மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் காட்டியது போல் சட்டம் ஒழுங்கு இருக்கிறதா, செயல்படுகிறதா என்பது வினாக் குறியாக ஆகிவிட்ட சூழ்நிலை சென்னை மாநகரத்தில் ஏற்பட்டிருக்கிறது. சில சாராய சாம்ராஜ்ய அதிபதிகள் **** எல்லாம் காரில் ஏறிக்கொள்வது, எந்த இடத்திற்குச் செல்வது, எந்த இடத்தில் கொள்ளையடிப்பது என்று திட்டமிட்டுச் செல்கிறார்கள். போலீசார் தலையிட்டால் போலீசாருக்கே ஆபத்து விளைவிக்க முயற்சி செய்கிற நிலைமைக்குப் போய்க்கொண்டிருக்கிறது.

இந்த நிலைமை வளருமானால் தலைநகரத்தில் மாபெரும் புரட்சி ஏற்படக்கூடிய, பெரிய ரணகளம், அராஜகம் ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிடும். இதை விளையாட்டாக, சாதாரணமாகக் கருதாமல் அரசின் சார்பில் உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடும் அக்கறையோடும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சட்டமன்றத்தினுடைய வரைமுறைகளை நன்கு அறிந்தவர்கள். நாம் இங்கே பேசுகிறபோது வெளியிலே இருப்பவர்களைப் பற்றிப் பேசலாம். ஆனால் குற்றச் சாட்டு சுமத்துவது சரியாகாது.

காரில் குறிப்பிட்ட சிலபேர் *** இதைப் போல் சட்ட விரோத காரியங்களில் ஈடுபடுகிறார்கள் என்று சொல்வதும் எளிது. இரண்டும் நம்முடைய மரபுக்கு ஏற்றதல்ல என்பதைத் தங்களுடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

மின்சாரக் கோளாறு காரணமாக அந்தக் கடை எரிந்தது என்று சொல்வது 'It is reported'. அதைப் போல் தகவல் வந்திருக்கிறது என்று பொருளே தவிர 'It is proved' என்று சொல்லவில்லை. It is reported that it caught fire due to short circuit என்று.

ஆகவே, இவை எல்லாம் வழக்கு மன்றத்திற்கு வர இருக்கும் பிரச்சினைகள் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெளிவாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே, இந்தக் குற்றச்சாட்டுக்கள் அவைக் குறிப்பில் இடம் பெறலாமா என்பதைப் பற்றித் தயவுசெய்து தாங்கள்தான் தீர்ப் பளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1979 மார்ச் 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அதிலே கொஞ்சம் உணர்ச்சி வயப்பட்டுச் சொன்னார் கள். அவர்கள் குறிப்பிட்ட பெயர்களை எல்லாம் நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : எதிர்க்கட்சித் தலைவர் உணர்ச்சி வயப்பட்டார் என்று தாங்கள் சொன்னதையும் நீக்கவேண்டும்.

[முற்பகல் 11.10]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆறுமுகம், உட்காருங்கள்

திரு. சி. ஆறுமுகம் : எதிர்க்கட்சித் தலைவர் அவ்வளவு பொறுப்பு இல்லாது உணர்ச்சி வசப்பட்டு விட்டாரோ, அதற்கு நீங்கள் தீர்ப்புக் கொடுக்கிறீர்களோ?

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, திரு. ஆறுமுகம் பொறுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எனக்கு உணர்ச்சி இருப்பது ஒன்றும் குறைவானதல்ல உணர்ச்சி இருப்பவன் தான் மனிதன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்களே சொல்லி விட்டார்கள்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அமைச்சர் அவர்கள் விளக்கத்திலே ஒரு பெயரைச் சொன்னார்கள். அந்தப் பெயரை யும் எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் சொன்னதில் உள்ள அந்தப் பெயரையும் அவைக்குறிப்பிலிருந்து எடுத்துவிட வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இந்த அவையை ஒத்தி வைத்து விவாதிப்பதற்குத் தேவையில்லை என்பதால் அதற்கு அனுமதி மறுக்கிறேன்.

4. அமைச்சரின் அறிக்கை

சிம்கோ நிறுவன தகராறு குறித்து தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, 7-3-1979 அன்று சட்டப் பேரவையின் அவைமுன்னவர் அவர்கள் அறிவித்தபடி, 8—3—1979 அன்று மாலை அனைத்துக் கட்சித் தலைவர்கள், அனைத்துத் தொழிற் சங்கத் தலைவர்கள் கொண்ட கூட்டம் மாண்புமிகு முதலமைச்சர்

அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் சிம்கோ மீட்டர் தொழிற்சாலை பற்றிப்பல தலைவர்களும் தங்கள் கருத்துக்களை எடுத்து வைத்த பின்னர், இப்பிரச்சினையை சட்டத்திற்குட்பட்டும் தொழிலாளர்களின் நன்மையைக் கருத்திற் கொண்டும் அரசு எடுக்கும் முடிவை ஏற்றுக் கொள்வது என்றும் முடிவு எடுத்தனர். மாண்புமிகு முதல்வர் அவர்களும் சம்பந்தப் பட்டவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி விரைவில் தொழிற் சாலை திறப்பதற்கு தக்க நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார்கள்.

அதன்படி முதலமைச்சர் அவர்கள் நடத்திய பேச்சு வார்த்தையின் பயனாக திருச்சி சிம்கோ மீட்டர் தொழிற்சாலை 16—3—1979 அன்று கதவடைப்பு நீக்கித் திறக்கப்படும் என்ற நற்செய்தியை இப்பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதற்கு முதல்படியாக இன்று 14—3—1979 அல்லது நாளை முற்பகல் ஐ.என்.டி.யு.சி. தொழிற்சங்கம் உயர்நீதி மன்றத்தில் தொடர்ந்துள்ள உரிமை மனுவை (ரிட் பெட்டிஷன்) திரும்பப் பெறும். 15-3-1979 அன்று மாலை தொழிலாளர்கட்கு கீழ்க்கண்ட சலுகைகள் வழங்கும் ஒப்பந்தம் திருச்சி தொழிலாளர் அலுவலர் முன்பு கையெழுத்திடப்படும்:—

''1. நிர்வாகம் இன்று தினக்கூலி ரூ. 4.50 பெறும் தொழிலாளர்களில் 102 பேரை நிரந்தரத் தொழிலாளி ஆக 1-3-1979 முதல் நியமிக்கும். இதனால் அந்தத் தொழிலாளிகள் ஒவ்வொருவருக்கும் மாதம் சுமார் ரூ. 75.00 வரை அதிக வருமானம் கிடைக்கும்.

2. இதர கேஷுவல் தொழிலாளர்களுக்குத் தினக் கூலி ரூ. 4.50-க்கு மேலாக ரூ. 1.50 கூடுதலாகக் கொடுக்கப்படும். ஆக தினம் ரூ. 6-00பெறுவர்.

3. அடுத்த கட்டமாக 1-5-1979 முதல் மேலும் 113 தொழிலாளர்களை நிர்வாகம் நிரந்தரமாக்கும்.''

இவை மட்டுமின்றி நிர்வாகம் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்குக் கீழ்க்கண்ட வாக்குறுதிகளும் எழுத்து மூலம் அளித்திருக்கிறது:—

''1. தேவைக் கேற்ப 5-11-1978-ல் பணியாற்றிக் கொண் டிருந்த கேஷுவல் தொழிலாளிகள் அனைவருக்கும் வேலை கொடுத்த பின்னரே, வேறு தொழிலாளிகள் பணிக்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.

2. தற்காலிக வேலை நீக்கத்தில் இருக்கும் 28 தொழி லாளிகள் தவிர மற்ற அனைத்துத் தொழிலாளிகளும் 16-3-1979ல் இருந்து ஒரு வாரத்திற்குள் தங்கள் பணியில் சேர்ந்துவிட வேண்டும். இது வெளியூரில் உள்ள தொழிலாளிகட்குப் பயன் படும் ஓர் வாய்ப்பு.

1979 மார்ச் 14] [திரு. எஸ். இராகவானந்தம்]

3. வேலை நிறுத்தத்தைத் தூண்டி வன்முறையில் ஈடுபட்டதற்காகத் தற்காலிக வேலை நீக்கத்தில் இருக்கும் 28 தொழிலாளிகட்கு சஸ்பென்ஷன் காலத்து ஊதியமாக பாதி சம்பளம் கொடுக்கப்படும். அவர்கள் மீது குற்றச்சாட்டு பிறப்பிக்கப்பட்டு விதிகளின்படி விசாரணை நடத்தப்படும். அந்த விசாரணையில் அவர்கள் மீது சாட்டப்பட்ட குற்றம் நிரூபணம் ஆகவில்லை என்றால் அவர்கள் மீண்டும் முழு ஊதியத்துடன் பணிக்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள். குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டவர்கள் மீது தண்டனை விதிப்பதற்கு முன் தனது தீர்ப்பை நிர்வாகம் ஓர் ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி முன் (ஆர்பிட்ரேஷன்) வைக்கும். அவருடைய தீர்ப்பு அனைவரையும் கட்டுப்படுத்தும்.

4. வேலையில் சேர்ந்த நிரந்தரத் தொழிலாளிகள் அனைவருக்கும் தொழிற்சாலை திறந்த 8 நாட்கள் ஆனவுடன் ரூ. 300 முன்பணமாக வழங்கப்படும். இத் தொகை அதை அடுத்து வரும் 12 மாத ஊதியங்களில் தவணை முறையில் பிடித்தம் செய்யப்படும்.

5. வேலை நிறுத்தம் செய்த காலம் அந்தந்தத் தொழிலாளிக்கு விடுப்பு உள்ள அளவுக்கு ஈடு செய்யப்படும்.''

மாண்புமிகு முதலமைச்சர் முயற்சியால் அவர்கள் அமைத்துத் தந்த இந்த நல்ல ஒப்பந்தத்தை அனைத்துத் தொழிலாளர்களும் நிர்வாகமும் மன நிறைவுடன் ஏற்றுக் கொள்வார்கள் என நம்புகிறேன். வேலை நிறுத்தம் செய்துள்ள தொழிலாளர்களை வேலைக்குத் திரும்பும்படிப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்,

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இது சம்பந்தமாக ஒன்று. அவர் சொன்னதிலிருந்து ஒரு கிளாரிபிகேஷன் வேண்டும். 8ஆம் தேதிக் கூட்டத்திலே முதலமைச்சருடைய முடிவு இதுவரையிலே கட்டுப்படுத்தும் என்ற முறையிலேயே ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது. அது கரெக்ட் பொசிஷன் அல்ல. முதலமைச்சரவர்கள் கடைசியிலே இரண்டு ஆல்டர்நேட்டிவை வைத்தார்கள். ஒன்று, ''ஆர்பிட்டரேஷன் முன்னால் விடலாமா அல்லது அரசாங்கமே தலையிட்டு முடித்துக் கொள்ளலாமா என்று வைத்தார்கள். நாங்கள் ''செகண்ட். ஆல்டர்நேட்டிவை அக்செப்ட் பண்ணுகிறோம்'' என்று சொன்னோம்.

இரண்டு அஷ்யூரன்ஸை கவர்ன்மெண்ட் மீறியிருக்கிறது, ஒன்று, எக்காரணத்தைக்கொண்டும் விக்டிமைசேஷன் இருக்காது என்று பேச்சுவார்த்தையில் வலியுறுத்திக்கொண்டு வரப்பட்டது. நார்மலாக ஒரு ஸ்ட்ரைக் முடிகிறபோது என்ன செய்ய வேண்டும்? 6ஆம் தேதி நடந்தது, 5ஆம் தேதி ''as on 5-11-1978

status-quo ante''. மறுபடியும் ரெஸ்டார் செய்வது என்பது எப்பொழுதும் வரக்கூடிய விஷயம். ஆனால் அமைச்சர் கொடுத்த ஸ்டேட்மெண்டில் அவர்கள் அப்படியே வேலைக்கு எடுக்கப்பட மாட்டார்கள். 5ஆம் தேதி வேலையிலிருந்தவர்கள், 6ஆம் தேதி ஸ்ட்ரைக்கில் ஈடுபட்டவர்கள் அப்படியே இருக்க மாட்டார்கள், ஜனவரியில் 100 பேர் வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்டவர்கள் இப்பொழுது எடுக்கப்பட மாட்டார்கள், மேனேஜ்மெண்ட் தேவையான அளவில் நினைத்த பொழுதுதான் எடுப்பார்கள். That means persons III will be victimised.

நம்பர் 2 அஷ்யூரன்ஸில் வரக்கூடிய விஷயம், 28 பேரிலே இது வல்லாமல் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது, ரூ. 4.50 என்பது நியாயம் அல்ல, ரூ. 6 என்று ஆக்கியதற்குப்பிறகு தொழிலாளர்களின் கோரிக்கையின் எசென்ஸை ஒத்துக்கொண்ட பிறகு அதற்காகப் போராடிய தொழிலாளர்கள்மீது மறுபடியும் வன்முறை என்று சொல்லி 28 பேர்கள் மீது நடவடிக்கை எடுப்பது என்பது ரியல் விக்டிமைசேஷன். அதையும் நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது.

கடைசியாகச் சொல்ல விரும்புவது, நிதியமைச்சரின் முன்னால் நடந்திருக்கும் அனைத்துக் கட்சி கூட்டத்தில் 'ஃப்ரேம் ஒர்க்' எல்லோராலும் ஒத்துக்கொள்ளப்பட்டது. அதற்குள்தான் பேச்சுவார்த்தை நடத்தி முடிக்க வேண்டுமென்பது. நிரந்தரத் தொழிலாளர்களுக்கும் நிவாரணம் அளிக்க வேண்டுமென்பது கம்ப்ளீட்டாக விடப்பட்டிருக்கிறது.

இவைகளின்மீது எங்களுக்குக் கடுமையான ஆட்சேபம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் அரசாங்கம் செய்ய வேண்டுமென்று சொல்லியதை வற்புறுத்தும் வகையில் இந்தச் சட்டமன்றத்திலேயிருந்து வெளிநடப்பு செய்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மார்க்சீஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தனர்.)

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, பாயிண்ட் ஆஃப் ஆர்டர், அன்றைக்கு நடந்த சர்வ கட்சிக் கூட்டத்தில் நாங்களும் கலந்துகொண்டோம். ஒரு ஸ்ட்ரைக் நடந்தால்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 82ஆவது விதியின் கீழ் அறிக்கை கொடுத்த பிறகு அதன்மேல் விவாதம் கிடையாது. உறுப்பினரவர்கள் முதலில் விதியைப் பார்க்க வேண்டும். திரு. உமாநாத் அவர்கள் சொன்னார்களே என்பதற்காக அதை விட்டேன்.

1979 மார்ச் 14]

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, அந்தக் கூட்டத்தில் நாங்கள் கலந்து கொண்டோம். ஒரு வேலை நிறுத்தம் வந்தால் அதன்மீது முதலமைச்சர் தலையிட்டு பேசித் தீர்த்த பின்னர், வேலைநிறுத்தத்தில் கலந்துகொண்டவர்கள், 5-11-1979-க்கு முன்னால் எவ்வளவுபேர் வேலையில் இருந்தார் களோ (குறுக்கீடு) 5-11-1978ஆம் தேதிக்கு......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினரவர்கள் நேரத்தை வீணாக்க வேண்டாம். பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்று நேரத்தை நிறைய எடுத்துக்கொள்வது சரியல்ல.

திரு. மு. அம்பிகாபதி : 5-11-1978ஆம் தேதிக்கு முன்னால், வேலைநிறுத்தம் துவங்குகின்ற தேதிக்கு முன் வேலையிலிருந்த அனைவருக்கும் இந்த அறிவிப்பின்மீது உத்தரவாதம் இல்லை, முதலமைச்சர் தலையிட்டபிறகும், வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட வர்களைப் பழி வாங்கலாம் என்ற நிலைமையிருந்தால் இந்த அறிவிப்பை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்லி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நாங்களும் வெளிநடப்பு செய்கிறோம்.

(இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தனர்.)

[முற்பகல் 11-20]

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளின் சார்பிலும் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்து, அமைச்சர் இங்கு வெளியிட்ட அறிக்கை தங்களுக்கு மன நிறைவு தருவதாக இல்லையென்று கூறியிருக்கிறார்கள். அதற்குப் பிறகாவது அவர்களுடைய உணர்வுகளை மதித்து மீண்டும் மறுபரிசீலனை செய்து இந்தப் பழி வாங்குகின்ற நிலை யிலே இருந்து தொழிலாளிகளை விடுவிக்க அமைச்சரவர்கள் மேற்கொண்டு முயற்சிகளைத் தேடுவாரா என்று நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

(பதில் இல்லை)

தலைவரவர்களே, பதில் கூட சொல்லாமல் * அலட்சியம் காட்டுவதால், நாங்கள் கூட வெளிநடப்பு செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.)

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1979 மார்ச் 14]

திரு. ஜே. ஜேம்ஸ் : பாயின்ட் ஆப் ஆர்டர், தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே 82-வது விதியின் அடிப்படையில் வைத்துள்ள அறிக்கையில், தற்காலிகமாக 28 தொழிலாளர்களை, மீண்டும் இப்பொழுது வேலையில் அமர்த்துவதாக இல்லையென்று கூறினார்கள். உண்மையிலே, முதலாளி—தொழிலாளி உறவு நல்ல முறையில் இருக்கவேண்டும். அந்தத் தொழில் நிறுவனம் நல்ல முறையில் செயல்படவேண்டுமென்று சொன்னால், அந்தத் தொழிலாளிகளை, மீண்டும் மற்ற தொழிலாளிகளைப் போல் உடனடியாக வேலையில் அமர்த்தவேண்டும். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவாதம் கொடுக்க வேண்டுமென்று கேட்டதற்கு அமைச்சரவர்கள் விருப்பம் தெரிவிக்காத காரணத்தால் எங்கள் கட்சியும் வெளிநடப்பு செய்கிறது.

(ஜனதா கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சார், ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். மாண்புமிகு அமைச்சரவர்கள் விதி 82-ன் கீழ் ஒரு அறிக்கை தாக்கல் செய்திருக்கிறார். எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் மறுபடியும் அதிலே கேள்விகள் கேட்டு அமைச்சரவர்கள விளக்கம் தர வேண்டுமென்று வற்புறுத்துவது விதிகளுக்கு முரண்பாடானது. ஆகவே, அமைச்சரவர்கள் அறிக்கையை தாக்கல் செய்த பிறகு விதிகளின்படி அந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்லாமல் அமர்ந்திருந்தார்கள். ஆனால் அதை * என்றோ, அலட்சியம் என்றோ சொல்வது முறையானதா என்பதைத் தங்களிடம் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 82-வது விதியின் கீழ் அறிக்கை தாக்கல் செய்த பிறகு, கேள்விகளை அனுமதிக்கவே கூடாது என்பது எனக்குத் தெரியும். ஆனால், இருக்கிற பிரச்னை தொழிலாளிகளைப் பற்றியது என்பதால், அதை நான் அனுமதித்தேன், அடுத்தது, * என்ற வார்த்தையை நீக்கும்படி நான் உத்தரவிடுகிறேன்.

41-வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து கவன ஈர்ப்பு—திரு. தீ. சு. நல்லதம்பி—இருக்கையில் இல்லை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே,* என்ற வார்த்தை இருப்பதிலே தவறில்லை, இருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அதை முதலிலே நீக்கியாகி விட்டது, மறுபடியும் அதைச்சேர்க்க வேண்டாம்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

5. கவன ஈர்ப்பு

முகவை மாவட்டத்தில் புது வழித்தடங்கள் ஏற்படுத்துவது குறித்து.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

''முகவை மாவட்டம், திருவில்லிபுத்தூர் தொகுதியில் பாட்டாகுளம், விழுப்பனூர், கூளம்பட்டி ஆகிய ஊர்களுக்கு பஸ் விடவேண்டும் எனக்கூறி பொதுமக்கள் மறியல் போராட்டங்களில் ஈடுபடுவதின் காரணமாக நிலவும் பதட்ட நிலை குறித்து''.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே. பாட்டாகுளம், விழுப்பனூர் முதலிய கிராமங்களுக்கு போக்குவரத்து வசதி செய்யும் நோக்கத்துடன் திருவில்லிப்புத்தூரிலிருந்து மல்லி, விழுப்பானூர், பாட்டாகுளம்' கிருஷ்ணன் கோயில் ஆகிய ஊர்களின் வழியாக மீண்டும் திருவில்லிபுத்தூர் வந்து சேரும் வண்ணம் புதிய புறநகர் வழித்தடத்துக்கான விண்ணப்பங்கள் முகவை மாவட்டப் போக்குவரத்து அதிகாரியால் கோரப் பட்டன. ஆகவே முகவை மாவட்டப்போக்குவரத்து அதிகாரி இப்பேருந்து உரிமையாளருக்கே இவ்வழித்தட உரிமத்தை வழங்க முடிவு செய்துள்ளார். போக்குவரத்து அதிகாரியால் இவ்வழித்தடத்திற்கு 24—11—78ஆம் நாளன்று உரிமம் வழங்கப்பட்டுள்ளது. 1940ஆம் ஆண்டின் தமிழ்நாடு மோட்டார் வண்டிகளின் 163 ஆம் விதியின்படி நான்குமாத காலத்திற்குள் உரிமம் வழங்கப்பட்டவர் வழித்தடத்தினில் இயங்கக்கூடிய வரைவை போக்குவரத்து அதிகாரியின் முன்னர் சமர்ப்பித்து உரிமம் பெற வேண்டும். உரிமையாளருக்கு 23—3—1979ஆம் நாள் முடிய வரைவை சமர்ப்பிக்க காலவரை உள்ளது. எனவே இன்னும் 9 தினங்களுக்குள் இவ்வழித்தடத்தில் பேருந்து இயங்கும்.

மேற்குறிப்பிட்ட விவரங்கள் பஸ் மறியல் போராட்டத்தில் ஈடுபட முனைந்தோருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே இது பற்றி சட்டமன்றப் பேரவையில் விவாதிக்கத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இன்னும் 9 நாட்களுக்குள் அங்கே பஸ் விடப்பட்டு விடும் என்று சொல்லியிருக்கிறார். அதற்காக அவருக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அந்த

தொகுதி யூனியன் ரோடு நல்ல முறையில் இருக்கிறது. அதற்காகவும் அவருக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். சென்ற முறை நான் திருவில்லிப்புத்தூரில் சுற்றுப்பயணம் செய்த போது அங்குள்ள படித்த சகோதரிகள், 40, 50 பேர்கள் என்னிடம், நாங்கள் திருமணம் ஆகாமல் இருக்கிறோம் இங்கே பெண் பார்க்க வரவேண்டியவர்கள் டவுனிலிருந்து வரவேண்டும். அவர்கள் வருவதற்கு சரியான போக்குவரத்து இல்லை, காரில் தான் வரவேண்டும். சம்பந்தம் செய்ய வருபவர்கள் இதனால் துன்பப்படுகிறார்கள். ஆகவே எங்களுக்குத் திருமணம் ஆவதற்காவது சீக்கிரம் பேருந்துகளை விட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். ஆகவே அமைச்சர் அவர்களை தகப்பனார் நிலையில் சிந்தித்து அந்த இடங்களிலே விரைவில் பஸ் போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்தால் நன்றாக இருக்கும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் ; பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிராமப் புறங்களில் பேருந்து விடாமல் இருப்பதன் காரணமாக இத்தகைய இன்னல்கள் ஏற்படுகின்றன என்று எனக்குத் தெரியும். இது மட்டும் அல்ல பொருளாதார ரீதியாகவும் சில கிராமங்கள் பாதிக்கப்படுகின்றன. இவற்றையெல்லாம் போக்கப்பட வேண்டும் என்ற காரணத்தினால்தான, இதை Unserved Road village, Inadequately served village and Excessively Served village பேருந்து இல்லாதிருக்கக்கூடிய வழித்தடங்கள், சரிவர பேருந்துகள் இல்லாத வழித்தடங்கள்,— அதாவது மிகக் குறைவாக பேருந்துகள் உள்ளவை, அதிகமாக பேருந்துகள் உள்ள வழித்தடங்கள் என்று பிரிக்கப்பட்டு, அந்த இடங்களில் பேருந்துகளை விடுவதற்கு அரசு முயற்சி செய்து கொண்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

6- அரசினர் சட்ட முன் வடிவுகள்

(அ) பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவா அவர்களே, ''தமிழ்நாடு 1979—ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1979) சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்'' என்று முன் மொழிகிறேன்.

*1979, பிப்ரவரி 19-ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

1979 மார்ச் 14] (திரு. எஸ். டி. சோமசுந்தரம்)

தலைவர் அவர்களே, இதே மாதிரி இரண்டு சட்ட முன் வடிவுகள் இருக்கின்றன. இரண்டையும் ஒன்றாக எடுத்துக் கொள்ளலாம் என்று அனுமதி கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இரண்டையும் ஒன்றாக எடுத்துக் கொள்ள முடியாது. ஒவ்வொன்றாகத்தான் எடுக்கவேண்டும்.

* மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே,, 1979 ஆம் ஆண்டு புயலாலும், வெள்ளத் தாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகை தாரர்கள், குத்தகை செலுத்தவில்லை என்ற காரணத்திற்காக வெளியேற்றப்படுகின்றனர்.குத்தகை செலுத்தாத காரணத்திற்காக அவர்களை வெளியே அனுப்பவேண்டும் என்பதைத் தடுப்பதற்காக ஒரு சட்டம் 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ம் தேதியோடு முடிவடைகிறது. இதை நீடிக்க வேண்டும் என்பதற்காக இந்தச் சட்டம் கொண்டு வரப் படுகிறது. அவர்களை நீக்காமல், வெளியேற்றாமல் அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்பதற்காக இந்தச் சட்டம் கொண்டு வரப் படுகிறது; அது மட்டும் அல்ல. நிரந்தரமான பாதுகாப்பு பயிரிடுபவர்களுக்கு கிடைக்க வேண்டும் என்பதற்காக அரசு இதை பரிசீலனையும் செய்துக் கொண்டிருக்கிறது. இதன்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொன்னால், அரசு அந்த நல்ல கருத்துக்களையெல்லாம் ஏற்று விரைவில் நடவடிக்கை எடுக்கும் என்பதை அறிவித்து அமர்கிறேன்.

[முற்பகல் 11-30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதனின்றும் பாதுகாத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுச்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்; தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகை தாரர்கள் (வெளியேற்றப் படுவதனின்றும் பாதுகாத்தல்)

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1979 மார்ச் 14

திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1979) சட்டமாக நிறைவேற்றப் பெற வேண்டும்'' என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, ஏகமனதாக நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு சட்டமாக ஆக்கப்பெற்றது.

(ஆ) புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) திருத்தச் சட்ட முன் வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும், என்று கேட்டு, ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல உங்களுடைய அனுமதியைக் கோருகிறேன்.

புயலால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் 1386, 1387 பசலியின் போது பாதிக்கப்பட்ட காரணத்தால் அந்த மக்கள் குத்தகையைக் கொடுக்க முடியாது, பூரா குத்தகையையும் கொடுக்க முடியாது என்கிற காரணத்தால் அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கப்பட்டு இருக்கிறது. இன்றைக்குக் கொடுக்கப்படுகிற இந்தப் பாதுகாப்பு 1979-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15-ம் தேதியோடு முடிவு அடைகிறது. அதை நீட்டிப்பதற்காக இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று சொல்கிற நேரத்தில், இதற்காக நிரந்தரமாக ஒரு சட்டத்தைக் கொண்டு வருவது அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்குக் கொண்டு வரப்படும் சட்ட முன்வடிவை, இன்றைக்கு எதிர்க்கட்சியில் இருக்கும், பிரதான எதிர்க்கட்சியாக இருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும், மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும் இங்கே இல்லாவிட்டாலும், எனக்கு மிக நன்றாகத் தெயும், இந்தத்

*1979, பிப்ரவரி 19 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

1979 மார்ச் 14] (திரு. எஸ். டி. சோமசுந்தரம்)

திருத்தச் சட்டத்தை, குத்தகைதாரர்களைப் பாதுகாக்கும் சட்டத்தைப் பற்றி, இங்கே இருந்தால் நிச்சயமாக ஆதரிப்பார்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும். அதிலே குறைபாடுகள் இருந்தால் அதைச் சுட்டிக்காட்ட இங்கே வந்து இருப்பார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் நிகழ்ச்சிகளை கூர்ந்து கவனித்துக் கொண்டு இருக்கிறார்கள், இந்தச் சட்டத்திலே குறைபாடுகள் இல்லை என்ற காரணத்தால் தான், அவர்கள் இங்கே வரவில்லை. இல்லையென்றால், நாட்டு மக்களின் நலன் கருதி, குத்தகைதாரர்களின் நலன் கருதி, அந்தக் குறைகளை சுட்டிக்காட்டுவதற்கு இங்கே நிச்சயமாக வந்து இருப்பார்கள். இதிலே குறைபாடுகள் இல்லாத காரணத்தால் இங்கே இருந்து சுட்டிக்காண்பிக்க தேவை இல்லை என்ற காரணத்தால் அவர்கள் வரவில்லை என்று கருதுகிறேன். ஆகவே, இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : ''தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகை தாரர்கள் (தற்காலிக நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2, 3, 4 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, ''தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1979) சட்டமாக நிறைவேற்றப்பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பெற்றது.

7. அறிவிப்ப

ஆளுநர் இசைவு குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ''தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு.கட்டுதலும், முறைப்படுத்துதலும்) குறித்த திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1979) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் இசைவு தெரிவித்துள்ளார்கள்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி)

(இ) நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப்படுத்துதலும்) குறித்த திருத்தச் சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, ''தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப்படுத்துதலும்) குறித்த திருத்தச் சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டுமென்று கோருகிறேன்.

இந்தச் சட்டத்தை நான் முன்மொழியும்போது, சில கருத்துக்களையும் சொல்ல விரும்புகிறேன். நகர்ப்புறத்தில் இருக்கிற நிலங்களுக்கு உச்சவரம்பு சட்டம் கொண்டு வருகிறபோது சில விதிவிலக்குகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. தர்ம ஸ்தாபனம், மத ஸ்தாபனம் மற்றும் பொது ஸ்தாபனங்களுக்கு எல்லாம் விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த விதிவிலக்கு அளிக்க பட்டிக்கிறபோது அந்தச் சட்டத்தின்படி அவர்கள் அந்த நிலங்களை குறிப்பிட்ட ஸ்தாபனங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ள லாம். பயன்படுத்திக் கொள்ளும் காலம் போக, அதுபற்றி அரசுக்குத் தெரிவித்து விட்டு 120 நாட்களுக்குப் பிறகு அதை அவர்கள் அரசுக்கு வேண்டுமானால் கொடுக்கலாம். அரசு வாங்க மறுத்துவிட்டால் வேறு யாருக்காவது விற்க அவர்களுக்கு உரிமை இருக்கிறது. அப்படி உரிமை இருக்கிறபோது, இன்றைக்கு நகரில் இருக்கிற நிலங்களுக்கு விலை அதிகமாக இருக்கிறது. இந்தச் சட்டத்தில் எப்படி கொண்டுவந்திருக்கிறோம் என்றால் அப்படி அளிக்கப்பட்ட விதிவிலக்கு ரத்து செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் குறிப்பிட்ட அந்த ஸ்தாபனங்களுக்கு தேவையான காலம்

* 1979, பிப்ரவரி 19 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

1979 மார்ச் 14] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

வரையில் பயன்படுத்திக் கொள்ளலாம். தேவையில்லாதபோது அதை அரசு தான் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இன்றைக்கு சட்டத்தில் கொண்டுவரப் பட்டிருக்கிறது.

உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால், சென்னையில் இருக்கிற நிலம் ஒரு கிரவுண்டுக்கு 2,000 ரூபாயிலிருந்து 1,20,000 ரூபாய் வரையில் இருக்கிறது. மதுரையில் இருக்கிற நிலம் ஒரு கிரவுண்டுக்கு 1,500 ரூபாயிலிருந்து 81,000 ரூபாய் வரையில் இருக்கிறது. கோவையில் 2,000 ரூபாயிலிருந்து 81,000 ரூபாய் வரையில் இருக்கிறது. சேலத்தில், 6,000 ரூபாயி லிருந்து 1,32,000 ரூபாய் வரையில் ஒரு கிரவுண்டுக்கு விலை இருக்கிறது.

(முற்பகல் 11-40)

திருச்சிராப்பள்ளியில் ஒரு கிரவுண்டின் விலை ரூபாய் 600-லிருந்து ரூபாய் 43,000 வரை இருக்கின்றது. திருநெல்வேலியில் ஒரு கிரவுண்ட் விலை ரூபாய் 50 லிருந்து ரூபாய் 19 ஆயிரம் வரை இருக்கின்றது, இன்றைக்கு சந்தை விலை இப்படி இருக்கிறது. இன்றைக்கு இருக்கின்ற சட்டப்படி தர்ம ஸ்தாபனங்களின் நிலங்களை அரசு எடுத்துக்கொள்வதாக இருந்தால் இப்படிப்பட்ட அதிகமான விலை கொடுத்துத்தான் வாங்க வேண்டியிருக்கிறது. இது மிக அதிகமாக இருக்கிறது என்பதற்காகத்தான் விதிவிலக்கை ரத்து செய்கின்ற அளவில், நில உச்சவரம்புச் சட்டப்படி நிலங்களை எடுத்துக்கொள்ளும் போது எவ்வளவு கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்யப் படுகிறதோ அப்படி கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த சட்ட முன்வடிவு வந்திருக்கிறது என்பதை உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். நான் முதலிலேயே சொல்கிற போது சென்னை மாநகராட்சியிலே ஒரு கிரவுண்ட் விலை ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாயிலிருந்து 20 ஆயிரம் ரூபாய் வரை இருக்கிறது என்று சொன்னேன். ஆனால் கொண்டுவரப் படுகின்ற சட்டத்தின்படி ஒரு கிரவுண்ட் விலை 11 ஆயிரத்தி லிருந்து 50 ரூபாய் வரை வரும். மதுரையில் இன்றைக்கு சந்தை விலை ரூபாய் 81,600லிருந்து ரூபாய் 1500 ஆக இருக்கின்றது. ஆனால், இன்றைக்குக் கொண்டுவரப்படுகின்ற சட்டத்தின்படி மதுரையில் ஒரு கிரவுன்டின் விலை ரூபாய் 5,574—லிருந்து ரூபாய் 22 வரை வரும். சேலம் திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி போன்ற இடங்களில் கிரவுண்டின் சந்தை விலை அதிகமாக இருந்து வருகின்ற காரணத்தால்தான் இப்படிப் பட்ட சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆகவே இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, நகராட்சி நில உச்சவரம்புச் சட்டத்தின்மீது என்னுடைய கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரை எல்லா நகரங்களும் வளர்ந்து வருகின்ற நகரங்களாக இருக்கின்றன. கிராமங்களில் மக்களுக்குத் தேவையான வாய்ப்பு, வசதிகள் குறைந்து போனதன் காரணமாக, கெட்டும் பட்டணம் சேர் என்ற பழமொழிக்கிணங்க இன்றைக்கு மக்கள் நகரங்களில் குடியேறி வருகிறார்கள். தெருக்களிலும், சந்தைகளிலும் இன்று ஏழை எளிய மக்கள் படுகின்ற அவஸ்தையைப்பார்க்கின்றபோது மிக வேதனையாக இருக்கின்றது. ஆகவே நம்முடைய அரசு நகரங்களில் இருக்கின்ற நிலங்களை நிலஉச்ச வரம்புச் சட்டத்தின் கீழ் எடுத்து மக்களுக்குக் குறைந்த விலையில் இடம் ஒதுக்கித்தர வேண்டும். அதன்மூலம் அவர்கள் படுகின்ற துன்பத்திற்கு ஒரு எல்லை காண வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை போன்ற நகரங்களில் மக்கள் வாழ்கின்ற நிலை மிகவும் மோசமாக இருக்கின்றது. ஆகவே நகரங்களில் இருக்கின்ற புறம்போக்கு நிலங்களை நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் எடுத்து ஏழை மக்களுக்கு அவர்களுடைய வருவாயின் அடிப்படையில் குறைந்த விலை நிர்ணயம் செய்து பகிர்ந்தளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இத்துடன் என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : ''தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப்படுத்துதலும்) குறித்த திருத்தச் சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2, 3, 4 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, ''தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப்படுத்துதலும்) குறித்த திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1979) சட்டமாக நிறைவேற்றப் பெறவேண்டும்''.

1979 மார்ச் 14]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பெற்றது.

(ஈ) மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்'' என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகிறது.

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தின் மூலம் மாநகராட்சி மற்றப் பகுதிகளுக்கு மட்டும் வரிவிதிப்பு செய்வதன்மூலம் இந்த அரசுக்கு எவ்வளவு ரூபாய் கிடைக்கப் போகிறது என்பதையும் அதன்மூலம் பல்வேறு நல்ல பணிகளைச் செய லாக்குவதற்கு இந்த வரியின் மூலம் கிடைக்கிற தொகையை எந்த வகையில் பயன்படுத்தப் போகிறது என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். மாநகராட்சி மற்றப் பகுதிகளில் ஓட்டுகிற வாகனங்களுக்கு இப்படி ஒரு கூடுதல் வரி விதிக்க வேண்டும் என்பது வரவேற்கத் தக்க ஒன்றாகும். அந்த வகையில் போக்குவரத்துக் கழகங்களுக்கு விதிக்கப்படுகிற இந்த வரிகள் நம்முடைய போக்குவரத்துக் கழகங்களின் வளர்ச்சிக் காகச் செலவிடப்படுகிற நிலையில், மக்கள் எந்தளவிற்கு இன்னல்களை ஏற்றிருக்கிறார்கள் என்பதும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னால்தான் பல்வேறு நல்ல காரியங்களை எல்லோரும் பாராட்டுகிற அளவிற்கு, மிகச் செம்மையாக, சிறப்பாக ஆற்றியிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட்டாக வேண்டும், பல்வேறு போராட்டங்களை, பல்வேறு பிரச்னைகளை சந்திக்க வேண்டிய நேரங்களிலெல்லாம் திறமையான முறையில் மாநகராட்சிப் பகுதிகளில் ஒரு திறமையான நிர்வாகத்தை நடத்துவதன்

* 1979, பிப்ரவரி 24 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[திரு. எஸ். ஆர். இராதா] [1979 மார்ச் 14

மூலமாக மற்றவர்கள் பாராட்டக்கூடிய அளவிற்கு அவர்கள் நடந்து கொண்டிருக்கிறார்கள். இந்த வரிவிதிப்பின் மூலம் அரசு நல்ல வருவாயைத் தேடுவதோடு அதே நேரத்தில் யாரும் பாதிக்கப்படாத அளவிற்கு, யாருக்கும் துன்பம் ஏற்படாத அளவிற்கு, சிறப்பான முறையில் இந்த வரி விதிப்பை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள் என்ற வகையில் இந்தச் சட்டத்தை நான் ஆதரித்து என் உரையை முடிக்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குப் பிறகு, இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, நெடுஞ்சாலைத் துறையும் போக்குவரத்துத் துறைகளும் ஒன்றாக இணைக்கப்பட்ட பிறகு, தமிழ்நாட்டில் குறிப்பாக கிராமப்புறங்களில் எங்கெங்கு பேருந்து வசதிகள் இல்லை எங்கெங்கு சாலை வசதிகள் இல்லை, எங்கெங்கு குறைந்த அளவிற்குத்தான் பேருந்துகள் ஓடுகின்றன என்பனபற்றி ஆய்வு செய்ய உத்தரவிட்டு அரசு அதன் அடிப்படையில் ஒரு ஆய்வு செய்தது. குறிப்பாக பஞ்சாயத்து ஆன்ட் பஞ்சாயத்து ஒன்றியச் சாலைகள் என்று சொல்லப்படுகிற சாலைகளில், பஞ்சாயத்துச் களுக்கும் பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கும் நிதிநிலை நல்ல முறையில் இல்லாத காரணத்தால், இந்தச் சாலைகளை செப்பனிடக்கூட முடியாத சூழ்நிலையில், ஓடுகிற பேருந்துகள் கூட அவ்வப்போது நின்றுவிடக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டு வந்தது. அந்நிலையை மாற்றியமைக்க, அந்தச் சாலைகளைப் பயன்படுத்துகிற பேருந்துகள் நஷ்டத்தை அதிகம் சந்திக்காமல் சாலைகள் செம்மையாக இல்லாத காரணத்தால், வேர் ஆன்ட்டேர் போன்ற இன்னல்களுக்கு ஆட்பட்டு நட்டம் ஏற்படாமலிருக்குமுகத்தான் சாலைகளைச் செப்பனிட நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்துக் கழகங்கள் அவற்றின் லாபத் தொகையில் ஒரு பகுதியை சாலைகள் மேம்பாட்டிற்காக ஒதுக்க வேண்டும் என்று அரசு முடிவு செய்தது. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு ஏழு போக்குவரத்துக் கழகங்கள் நல்ல முறைகளை ஏற்படுத்தியதன் காரணமாக 'மெட்டீரியல் மானேஜ்மென்ட்', ப்யூயல் எக்கானமி, போன்ற விஞ்ஞான ரீதியான ஏற்பாடுகளைச் செய்ததன் காரணமாகவும் பல போக்கு வரத்துக் கழகங்கள் நஷ்ட நிலையினின்று மாறி, இன்று பாரதத்திலேயே தமிழ்நாட்டில்தான் ஏழு போக்குவரத்துக் கழகங்கள் முதன் முறையாக ஒட்டுமொத்தமாக ஏறத்தாழ ஏழு கோடி ரூபாய் ஆதாயம், நிகர லாபம் சம்பாதித்திருக்கிறது.

[முற்பகல் 11.50]

அந்த லாபத்தின் ஒரு பகுதியை சாலை மேம்பாட்டுக்காக பயன் படுத்தவேண்டும் என்கின்ற அளவில் 700-க்கு குறைவாக இருக்கின்ற போக்குவரத்து நிறுவனங்களுக்கு 40 சதவிகிதமும்,

1979 மார்ச் 14] [திரு. சி. பொன்னையன்]

700-க்கு அதிகமான பேருந்துகள் உள்ள நிறுவனத்திற்கு 66 சதவிகிதம் என்றும் கூடுதல் வரி விதிக்கவேண்டும் என்ற முறையில் முடிவு எடுத்து அதை இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது. இந்த கூடுதல் வரியின் மூலமாக 6,86,09,000 ரூபாய் உபரியாக கிடைக்கும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இவ்விதம் விதிக்கப்படுகின்ற உபரி வரி இந்த ஆண்டுக்கு மட்டும் தற்போதைக்கு விதிக்கப்படுகிறது. மேலும் டீசல் ஆயில் போன்றவைகளுக்கும் போக்குவரத்து பேருந்துகளுக்கு பயன்படுத்தப்படும் சாதனங்களுக்கும் மத்திய அரசு போடுகின்ற அதிக வரி காரணமாக—இனிமேல் வருகின்ற ஆண்டுகளில் அந்தந்த நிதிநிலைமைகளுக்கு ஏற்ப இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் மாண்புமிகு உறுப்பினர் இராதா அவர்கள் கேட்டார்கள். இந்த நிதி சாலை போக்குவரத்துக் கழகங்களுக்கு மட்டுமே பயன்படவேண்டும், வேறு எதற்கும் செலவு செய்யக்கூடாது என்று சுட்டிக்காட்டினார்கள். நான் குறிப்பிட விரும்புவது, இந்த மேல்வரியின் மூலமாக கிடைக்கும் தொகையின் பெரும் பகுதி சாலை மேம்பாட்டுக்கும், பயணிகளின் வசதிகளுக்கும் பயன்படுத்தப்படும். வேறு எதற்கும் இந்த உபரி நிதி பயன்படுத்தப்பட மாட்டாது என்பதை தெரிவித்துக் கொள்வதோடு, பேருந்துகள் செல்லுகின்ற சாலைகளுக்கு இதில் முக்கியத்துவம் அளிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்வதோடு, அத்துடன் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒரு உறுதிமொழியையும் அளிக்க விரும்புகிறேன. இந்த கூடுதல் வரி விதிப்பின் காரணமாக, போக்குவரத்து நிறுவனங்களின் ஆதாயம் குறையத்தான் செய்யும், இந்த நிலைமையில் போனஸ் பகிர்ந்து கொடுப்பதும் குறையவே செய்யும். என்றாலும், நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்துக் கழகங்களிலுள்ள தொழிலாளர்களுக்கு இந்த மேல்வரி விதிக்கப்படாமல் இருந்த நேரத்தில் எந்த அளவுக்கு போனஸ் பெற்றிருக்கிறார்களோ அந்த அளவுக்கு இப்போதும் போனஸ் தொகை குறையாது. குறைந்த அளவுக்கு போனஸ் கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையிலும் கருணையின் அடிப்டையிலும் போக்குவரத்துக் கழக தொழிலாளர்களுக்கு அளிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>: பேரவை முன்னுள்ள கேள்வி— ''தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2, 3, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 4.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி ––"பிரிவு 4 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்."

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் ; பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன் மொழிகிறேன்.

In Clause 4, for the expression "in one lump sum within such period, not being less than seven days or more than thirty days from the date of publication of this Act in the Tamil Nadu Government Gazette as may be prescribed." substitute the expression "in four equal monthly instalments on or before the last day of each of the four months immediately following the date of publication of this Act in the Tamil Nadu Government Gazette."

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்றது.

பிரிவு 4, திருத்தப்பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 5 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1979) திருத்தப்பெற்றபடி சட்டமாக நிறைவேற்றப் பெற வேண்டும்." எனகோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு திருத்தப்பெற்றபடி சட்டமாக நிறைவேற்றப் பெற்றது.

1979 மார்ச் 14]

(உ) நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1979.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; திருவாளர்கள், மு. அம்பிகாபதி, திரு. ரா. கிருஷ்ணன், சோ. அழகர்சாமி, கூத்தக்குடி ச. சண்முகம், செ. சிவசாமி, பொ. திராபதி ஆகியோர் அவசரச் சட்டத்தை நிராகரிக்கும் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் இருக்கையில் இல்லாததால் அவர்களது தீர்மானம் திரும்பப் பெற்றதாக கருதப்பெறுகின்றது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 4/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும் என்று கோருகிறேன்.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத துணைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்பு பஞ்சாயத்து மன்றங்களுக்கு தனி அதிகாரிகள் போடுவதற்கு அரசாங்கத்தின் அனுமதி பெற்று, தனி அதிகாரிகளை நியமித்திருக்கிறார்கள். இந்தப் பஞ்சாயத்துக்களிலே வேலைகள் எப்படி நடந்திருக்கிறது என்பதைப் பார்க்கும் போது, இப்போது அங்கே எலெக்டட் பாடி இல்லாததால் எந்தவிதமான வேலையும் நடக்கவில்லை என்பது நன்றாகத் தெரிகின்றது. ஏனென்றால், மக்கள் தனி அதிகாரிகளிடத்திலே போய் நேரிலே எதுவும் கேட்க முடியவில்லை. அப்படிக் கேட்டாலும் சரியான பதில் சொல்வதில்லை என்று சொல்வதை நான் கேட்டிருக்கிறேன். இப்போது இந்த அரசாங்கம் முனிசிபாலிடிகளுக்கு தனி அதிகாரிகள் நியமிக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். தனி அதிகாரிகள் நியமிப்பதை நான் இங்கே வன்மையாக கண்டிக்க வரவில்லை. ஆனால், இதிலுள்ள சங்கடங்களை எடுத்துக்கூற விரும்புகிறேன். இன்றைக்கு எலக்டட் பாடியின் ரெப்ரசென்டேடிவ்கள் இருந்தால், அந்தந்த வார்டுகளிலே உள்ளவர்கள் என்னென்ன கோளாறுகள் இருக்கின்றன, என்னென்ன தேவைப்படுகின்றதோ, அவைகளைப் பற்றி அந்தந்த வார்டு ரெப்ரசென்டேடிவ்களிடம் முறையீடு பண்ணுவதற்கு வாய்ப்பு இருந்திருக்கும். அங்கே இருக்கக்கூடிய அந்தந்த வார்டுகளின் எலக்டட் பாடியிடம் சென்று, எங்களுக்கு இதைச் சீக்கிரம் செய்து கொடுங்கள் என்று உரிமையோடு கேட்பதற்கு அவர்களுக்கு அந்த வாய்ப்பு இருந்திருக்கும். ஆனால், இன்று தனி அதிகாரிகளிடம் போய் அவர்கள் அப்படி அணுகுவதற்கோ அல்லது பேசுவதற்கோ வாய்ப்பு இல்லாத வகையில் சில

* 1979, பிப்ரவரி 15ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழ் வெளியிடப்பெற்றுள்ளது.

இடங்களிலே இருப்பதை நாம் பார்த்து வருகிறோம். இதற்காக தான் நான் சொல்கிறேன். எலக்டட் பாடியைச் சீக்கிரம் நாம் உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கம் சொல்லியிருப்பதை நான் பத்திரிகையிலே பார்த்தேன். ஜூன் மாத வாக்கிலே முனிசிபல், பஞ்சாயத்து யூனியன்கள் எலக்ஷன் வரப்போகின்றது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால்' இந்தத் தனி அதிகாரிகளை இன்னும் எத்தனை நாளைக்கு போடப்போகிறார்கள் என்பது தெரியவில்லை. ஜூன் மாதம் வரை இருப்பதற்கு இதை எக்டென்ஷன் செய்வார்களா அல்லது அதற்குப் பிறகும் இருப்பார்களா என்பது எனக்குத் தெரியவில்லை. அதைப்பற்றி அறிய விரும்புகிறேன். ஏனென்றால், சிறுசிறு முனிசிபாலிடிகளைப் பார்க்கும்போதும், ரோடு வசதிகள், தண்ணீர் வசதிகள் போன்றவைகள் எல்லாம் மிகவும் குறைந்து வருகின்றது, மிகவும் செம்மையாக இல்லாத ஒரு நிலைமையைப் பார்க்கிறோம். அதனால்தான், நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வதெல்லாம், தனி அதிகாரிகள் போடுவதாக இருந்தால் ஒரு மாதத்திற்கு போட்டுவிட்டு, பிறகு மாற்றிவிட்டு, சீக்கிரம் எலக்ஷனைக் கொண்டுவந்து. இந்த மன்றங்களிலே எல்லாம் எலக்டட் பாடிகளாக ஆக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

[நண்பகல் 12-00]

திரு. இரா. முத்தையா : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்த மன்றத்தின் முன்னால் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களாலே முன்மொழியப்பட்டிருக்கிற இந்தத் தீர்மானத்தின் மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூற விழைகிறேன்.

பல்வேறு நகராட்சி மன்றங்கள் பழைய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை விட்டு வெளியேற்றப்பட்ட பின்னர் ஆளுநருடைய ஆட்சிக் காலத்தில் கலைக்கப்பட்டது என்பது அனைவருக்கும் தெரியும், அதற்குப் பின்னர் இந்த நகராட்சி மன்றங்களுக்கெல்லாம் முறையான தேர்தலை நடத்தி அந்த முறையான தேர்தலின் மூலம் பொறுப்புக்கு வருகிற பிரதிநிதிகளைக் கொண்டு நகராட்சி மன்றங்கள் எல்லாம் இயங்கவேண்டுமென்ற நோக்கத்தோடு இரண்டு மூன்று முறை அந்த நகராட்சி மன்றங்களுக்கெல்லாம் தனி அதிகாரிகளை நியமிக்கிற அதிகாரத்தை அரசுக்கு இந்த மன்றம் வழங்கி வந்திருக்கிறது. விரைவில் அந்த நகராட்சி மன்றங்களுக்கெல்லாம் தேர்தல் வர இருக்கிறது. அந்தத் தேர்தலைக் கூட இதுவரையில் நடந்து வந்த ஆள்தூக்கி தேர்லாக இல்லாது அந்த நகரத்தில் இருக்கக்கூடிய அனைத்து மக்களும் நேரடியாக வாக்களித்து

1979 மார்ச் 14] [திரு. இரா. முத்தையா]

அந்தத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கிற ஒரு நல்லமுறையையும் நம்முடைய அரசாங்கம் அமல் படுத்த இருக்கிறது. இத்தகைய ஒரு நல்ல முறையை நடைமுறைப்படுத்தும் வகையில் அதற்கு உரிய ஆய்வினை செய்து உரிய நேரத்தில் தேர்தல் நடத்த வேண்டுமென்ற காரணத்தால் இன்னொரு முறை நகராட்சி மன்ற தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீட்டித்துக் கொடுப்பதில் தவறு இல்லை என்பதை அனைவரும் ஒப்புக் கொள்வார்கள் என்று கருதுகிறேன். இவ்வளவு காலமாக ஒவ்வொரு நகராட்சி மன்றத்திற்கும் வார்டுக்கு ஒரு உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டு மறுநாளே அவர்களை எல்லாம் வண்டிகளில் வைத்துத் தூக்கிக் கொண்டு சென்று, அடுத்த மாநிலங்களிலே இடம் தெரியாத இடத்திலே வைத்திருந்துவிட்டு 10 நாளைக்குப் பின்னால் கார்களிலே அவர்களைக் கொண்டு வந்து அவர்களை வீட்டுக்குக் கூட விடாது நேரடியாக நகராட்சி மன்றத் தலைவர் தேர்தல் நடத்தும் இடத்திற்குக் கொண்டு வந்து வாசலுக்குள்ளே தள்ளிவிட்டுத்தான் வெளியே இருப்பவர்கள் போவார்கள். அந்த அளவுக்கு நிர்ப்பந்தப் படுத்துகிற தேர்தல் முறை இருந்தது என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள். அத்தகைய தேர்தல் முறையைக் கடுமையாக பல்வேறு கால கட்டங்களில் எல்லாக் கட்சி நண்பர்களும் அதைக் கண்டித் வந்திருக்கிறார்கள். அத்தகைய கண்டிக்கத்தக்க முறையை, எல்லோரும் ஏற்றுக்கொள்ளாத அந்த முறையை இவ்வளவு காலமாக வைத்துக் கொண்டிருந்தார்கள் என்பதையும் நாம் அறிவோம். எனவே, அத்தகைய தவறான முறையை இன்றைக்குத் தூக்கி எறிந்து விட்டு இவ்வளவு காலமாக எந்த முறையைக் கொண்டு வரவேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்தோமோ அந்த முறையை நடைமுறைப் படுத்தும்போது ஓராண்டு அல்லது ஒன்றரையாண்டு போய்விட்ட காரணத்தால் பெரிய அளவில் குடி முழுகிப் போய்விடவில்லை.

இன்றைக்குத் தனி அதிகாரி என்று இருக்கிறவர்கள் ஏதோ ஆப்பிரிக்கா கண்டத்தில் இருந்து வந்தவர்கள் அல்ல. ஏற்கனவே நகராட்சி மன்றங்களில் பணியாற்றிக் கொண்டிருந்தவர்கள் தான். ஒரு நகராட்சி மன்றம் இருந்து, அதற்கு ஒரு தலைவர் இருந்து, அதற்கு ஒரு கவுன்சில் இருந்து என்னென்ன காரியங்கள் நடந்து கொண்டிருந்தாலும் அவற்றை நடைமுறைப்படுத்திய அதிகாரிகள்தான் இன்றைக்கும் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள், அந்தக் கவுன்சிலில் இப்போது கூட ஒரு பெரிய குறை என்று யாரும் கருதிவிட முடியாது. முறையான தேர்தல் மூலம் நல்ல கவுன்சில் வர இருக்கிறபோது, சங்கடமான நிலைமை ஏதும் இல்லாமல் இருக்கும்போது ஆறுமாத காலத்திற்கு அவர்கள் பதவிக் காலத்தைக் கூட்டிக் கொடுப்பதில் எந்தவிதமான தவறும் இல்லையென்பதை இந்த நேரத்தில்

[திரு. இரா. முத்தையா] [1979 மார்ச் 14

சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதற்கு முன்னால் அமைச்சர் அவர்களால் இந்த அவையில் வைக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியத் திருத்த மசோதாவின்மீது பேசியவர்கள் எல்லாம் கூடச் சொன்னார்கள். ஊராட்சி ஒன்றியங்கள் கவுன்சில்கள் இல்லாத காரணத்தால் ஒரு வேலையும் நடைபெறவில்லை. கவுன்சில் தலைவர் இருந்து செயலாற்றாத காரணத்தால் இன்றைக்கு எல்லாமே தேங்கிப் போய்க் கிடக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். எனக்கு ஒரு சந்தேகம். நாளைக்கே கூட ஒரு தேர்தலை நடத்தி ஒன்றியத்திற்கு ஒரு பெரிய தலைவர் வந்துவிட்டால் அந்த ஒன்றியத்திலே ஒரு கவுன்சில் வந்து விட்டால் இன்றைக்கு இருப்பதை அப்படியே தலைகீழாக மாற்றிவிடுவார்களா என்றால் இல்லை. ஆண்டாண்டுக்காலமாக ஒன்றியக் கவுன்சில்கள் இருந்து வந்திருக்கின்றன. அவைகளின் மூலமாக அப்பாயின்ட்மென்ட் கமிட்டி என்றெல்லாம் கூட அமைத்து அவ்வப்போது சில நியமனங்களையெல்லாம் செய்து கொண்டு வந்திருக்கிறார்கள். அத்தகைய கமிட்டிக்குப் பதிலாக 2, 3 அலுவலர்கள் சேர்ந்துகொண்டு அதைச் செய்து கொண்டிருக் கிறார்கள். அதன் காரணமாக ஊழல் பெருகிவிட்டது, டி. டி. ஓ. க்கள் எல்லாம் லஞ்சம் வாங்குகிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் நடந்த நிலைமைகளையெல்லாம் எண்ணிப் பார்த்தால் இன்றைக்கு இருக்கிற நிலைமை ஓரளவிற்குப் பரவாயில்லை என்ற நிலைமை தான் இருக்கிறது. பழைய பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் இருந்த நேரத்திலே அங்கே கூட இங்கே இருக்கிற பலர் ஊராட்சி ஒன்றியங் களின் தலைவர்களாக இருந்திருக்கிறார்கள், அந்த நியமனக் குழு விற்கு இருந்த போட்டியை அவர்கள் எல்லாம் அறிவார்கள். ஒரு கட்சியின் சார்பிலே ஒன்றியத்தின் தலைவராக இருந் திருப்பார் ஒருவர், அந்தக் கட்சியை மீறிக்கூட நியமனக்குழு விற்குப் போட்டிபோடுவார்கள், ஒரு ஆண்டுக்கு அவர், இன்னொரு ஆண்டுக்கு இவர் என்று அதைப் பங்குபோடுகிற நிலைமைதான், அந்த வேலைதான் அன்றைக்கு நடந்து கொண்டிருந்தது.

இன்றைக்குச் சில இடங்களிலே தவறுகள் நேர்ந்து இருக்கலாம். அப்படி இருந்தாலும் பல இடங்களிலே முழுமையாக அது மாற்றப்பட்டிருக்கிறது. என்னுடைய பகுதியிலே எல்லாம் இரண்டாண்டுக்காலத்திலே ஒரு 4, 5 ஆசிரியர்கள் இடங்களுக்கு தான் வேலைகளுக்குத்தான் காலியிடங்கள் வந்தன அந்தப் பகுதி முழுவதற்கும் தெரியும், எந்தவிதமான லஞ்சமோ அல்லது ஊழலோ இல்லாமல் அதிகாரிகள் நியமித்து இருக்கிறார்கள். ஆனால் ஒன்றியங்கள் ஆரம்பித்த 10 ஆண்டுக்காலமாக கவுன்சில் இருந்த காலத்திலே 2 ஆயிரம் ரூபாய் இல்லாமல் எந்தவித ஆசிரியர் நியமனமும் நடந்தது கிடையாது. இன்றைக்கு எந்த விதமான லஞ்சமும், ஊழலும் இல்லாமலே நியமனங்கள் நடந்துகொண்டிருக்கின்றன என்பது அந்தப் பகுதி மக்களுக்குத் தெரியும். அந்த மக்கள் ஏற்றுக் கொள்கிறார்கள்.

1979 மார்ச் 14] [திரு. இரா. முத்தையா]

இந்த முறையிலே இருக்கிற தவறான செயல்கள் அந்த முறையிலே பழைய முறையிலே நடந்ததில்லை என்று சுட்டிக் காட்ட முடியுமா? அதிகாரிகள் கையில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு, தேர்தல் வருகிற வரையில், அதிகாரம் என்றால் வரம்புக்கு மீறிய அதிகாரமல்ல, வரம்புக்கு மீறாத அதிகாரங்கள் தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு கவுன்சில் இருந்தால் அங்கே தினம் தினம் என்ன என்ன வேலைகள் நடக்குமோ அவைகள் தான் நடந்து கொண்டிருக்கின்றன. என்ன வேலை, மாதா மாதம் தோட்டிக்குச் சம்பளம் கொடுப்பது, போன்ற வேலைகள் நடக்கின்றன. தேர்ந்தெடுக்கப் பட்ட கவுன்சில் வந்தாலும் இன்றைக்கு அந்த வேலைகள்தான் செய்வார்கள், அதைத்தான் இன்றைக்குத் தனி அதிகாரிகள் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் காலத்தைக் கொஞ்சம் நீட்டித்துக் கொடுப்பதாலே ஒன்றும் குடிமுழுகிப் போய்விடாது என்று தெரிவித்துக் கொண்டு, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த மசோதாவை ஆதரித்து முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் ; பெருமதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, நகராட்சிகளுக்குத் தனி அதிகாரிகளை நியமிப்பதுபற்றி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்பு கிறேன். நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தனி அதிகாரிகளுடைய நீட்டிப்புச் சட்டம் கொண்டு வந்தபோது வருகிற ஜூன் மாதத்திற்குள். தேர்தல் நடத்தப்படும் என்ற உறுதிமொழியைச் சொன்னார்கள் அதைப்போல் நகராட்சிகள் தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டிக்கிற சட்டம் வருகிறபோது கண்டிப்பாக வருகிற ஜூனுக்குள் தேர்தல் வரும் என்ற உறுதிமொழியை அறிவிப் பார்கள் என்று நம்புகிறேன். அப்படி அறிவித்தால் நான் மகிழ்ச்சியடைவேன்.

நகராட்சிகளிலே உள்ள அவல நிலைமையைப் பார்க்கிற போது நகராட்சிகளிலே சட்டம், ஒழுங்கு இருக்கிறதா, என்று பார்த்தால் அங்கே ஒரு அரசாங்கமே நடந்துகொண்டிருக்கிறது என்று எண்ணத்தக்க மிக மோசமான நிலைமை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு அங்கத்தினர் திரு. முத்தையா அவர்கள் நகராட்சிகளுக்கு தேர்தலே தேவையில்லை என்ற அளவிற்குச் சொன்னார்கள். அப்படிப் பார்த்தால் நம்முடைய சட்டமன்றத்திற்குக் கூட தேர்தல் தேவையில்லை....

[பிற்பகல் 12-10]

திரு. இரா. முத்தையா : தலைவரவர்களே, நான் சொன்னது ஒரு முறையான தேர்தல் நடக்க இருக்கிறது, நாமெல்லாம் விரும்பிய ஒரு முறையிலே தேர்தல் நடக்கவிருக்கிறது, அந்த

ஒரு காலகட்டம் வருகின்ற வரையில் கொஞ்ச நாட்களுக்குத் தள்ளி கொடுப்பதால் ஒன்றும் குடி முழுகிப் போய்விடாது என்ற கருத்தில் தான் சொன்னேனே தவிர தேர்தலே நடக்கக்கூடாது என்று சொல்லவில்லை. அவரும் அப்படிக் கருத மாட்டார் என்று நம்புகிறேன். நாமெல்லாம் விரும்பும் வகையில் விரைவில் தேர்தல் நடக்கவிருக்கிறது என்பதைத்தான் சொன்னேன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, நீங்கள் விரும்புகின்ற முறை என்றால் இரண்டாண்டுகள் ஆகிவிட்டன, நீங்கள் விரும்புகின்ற முறையில் எப்பொழுது வரவிருக்கிறது என்பதற்கு நீங்கள் சரியான விளக்கம் சொல்லவில்லை என்பதைத் தான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்,

நம்முடைய நகராட்சிகளில் இலஞ்சமே இல்லை என்று சொன்னார்கள். நகராட்சிகளில்....

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, கொஞ்ச நாட்கள் தள்ளி வைப்பதால் குடி முழுகிபபோய் விடாது என்று அருமை நண்பர் முத்தையா அவர்கள் குறிப் பிட்டார்கள். குடி முழுகிப் போய்விடக்கூடாது என்பதற்காக தான் மதுவிலக்கு அவசரச் சட்டம் நேற்று நிறைவேறியிருக் கிறது.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, இங்கே நம்முடைய முத்தையா அவர்கள் சொல்லும்பொழுது நகராட்சி களில் இலஞ்சம் இல்லை என்று சொன்னார்கள். இதன்மூலம் ஏற்கனவே இலஞ்சம் இருந்தது என்பதை அவர்கள் ஒத்துக் கொண்டார்கள். ஆசிரியர்கள் வேலைக்கு இரண்டாயிரம் ரூபாய் வாங்கிக்கொண்டு போடவில்லை என்று சொன்னார்கள். இப்பொழுது இரண்டாயிரம் என்பது நான்காயிரம் ரூபாயாக ஆகியிருக்கிறது என்பதை அவர்கள் மறுத்துவிட மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். இதற்காக அவருக்கு வேண்டுமானால் ஆதாரத்தை என்னால் கொடுக்க முடியும்.

இன்றைக்கு ஒவ்வொரு நகராட்சியிலும் நடக்கின்ற வேலை களில் இலஞ்சம் என்பதற்கு ஒரு எல்லை இல்லாமல் போய் விட்டது. அதற்குக் காரணம் என்னவென்றால் அங்கே கேள்வி கேட்பார் இல்லாத சூழ்நிலை இருக்கிறது.

நம்முடைய நகராட்சிகளில் தெருவிளக்குகள் எரிவதில்லை, எல்லாயிடங்களிலும் இருளாக இருக்கும் சூழ்நிலையில் ஏராளமான திருட்டுகளும், ஒழுங்கீனங்களும் நடந்து கொண்டிருக்கின்றன. மின் வாரியத் துறையிலே இருக்கின்ற அலுவலர்கள் இப்பொழுது சங்கத்தை மிகவும் பலமாக வைத்திருக் கிறார்கள். ஏற்கனவே சங்கம் வைத்திருந்தார்கள். இப்பொழுது நகராட்சிகள் தேர்ந்தெடுக்கப்பெற்ற மன்றங்களாக இல்லாமல்

இருப்பதன் காரணமாக அவர்களின் சங்கத்தைப் பலமாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், பரமக்குடியில் கிட்டத்தட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகளுக்கு ஒரே நாளில் மின்னிணைப்பைத் துண்டித்து விட்டார்கள், காரணம் என்னவென்று கேட்டால், நீங்களெல்லாம் மின்சாரக் கட்டணத்தை முறைப்படியாகக் கட்டவில்லை என்று சொல்கிறார்கள், ஏன் கட்டவில்லை என்று வீட்டுக்காரர்களைக் கேட்டபொழுது, எங்களுக்கு எந்த டிமான்ட் நோட்டீசும் வரவில்லை என்று சொன்னார்கள். ஏன் டிமான்ட் நோட்டீஸ் அனுப்பவில்லை என்று மின்சாரத் துறையிடம் கேட்டால் அது எங்களுடைய பொறுப்பு இல்லை, துண்டிக்கின்ற வேலைதான் எங்களுடையது என்று சொல்கிறார்கள். இப்படி ஒழுங்கில்லாத முறையில் நகராட்சிகளிலே இப்பொழுது வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

அடுத்து, குடிநீர்ப் பிரச்சினையைப்பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், பல குழாய்களில் குடிநீரே வருவதில்லை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், பரமக்குடியில் இரண்டாண்டுகளுக்கும் மேலாக நான் குடியிருந்து வருகிறேன். நான் என்னுடைய வீட்டிற்குத் தண்ணீர் வேண்டுமென்று இரண்டு ஆண்டுகளாகக் கேட்டுக் கொண்டு வருகிறேன். ஆனால் இன்னும் தண்ணீர் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள். அதற்குக் காரணம் என்னவென்று கேட்டேன். இப்பொழுது இருக்கின்ற கிணறு பற்றாக்குறையாக இருக்கிறது, உங்களைப் போல 200 பேர்களுக்குக் கொடுத்தால்தான் உங்களுக்குக் கொடுக்க முடியும் என்று சொன்னார்கள். அதற்காக எனக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று சொல்லவில்லை, 201-வது ஆளாக எனக்குக் கொடுங்கள் என்று கேட்கிறேன். இரண்டாண்டுகளாகியும் 200 பேர்களுக்குத் தண்ணீர் கொடுக்கப் படவில்லை.

ஆகவே, தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றமாக இருந்தால் எப்படியாவது அரசை அணுகி, அமைச்சர்களைக் கட்டாயப் படுத்தி இந்நேரம் தண்ணீர் கொடுத்திருப்பார்கள். எனவே, இதையெல்லாம் நான் உதாரணத்திற்காகச் சொல்கிறேன்.

நம்முடைய அமைச்சரவர்கள் சொன்னபடி, நேற்றைய தினம் இங்கே புனிதமான சட்டம் — மது விலக்குச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. மதுவிலக்குச் சட்டம் அமலில் இருந்தாலும் இன்றைக்கு நகரங்களில் கள்ளச் சாராயம் என்பது குடிசைத் தொழிலாகவே, ஆக்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றியெல்லாம் எடுத்துச் சொல்வதற்கு அங்கே தேர்ந்தெடுக்கப் பெற்ற மன்றங்கள் இல்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றங்கள் இருந்திருக்குமேயானால் ஆங்காங்கே இருக்கின்ற குறைகளை எடுத்துச் சொல்லி, அதிகாரிகளுக்கு எடுத்துரைத்து இந்தக் குறைபாடுகளை நீக்குவதற்கு மிகவும் வசதியாக இருக்கும். ஆகவே, நகராட்சிகளுக்கு இரண்டாண்டுகளாகத் தேர்தல்

வைக்காதது மிகப் பெரிய கொடுமை என்பதை நான் இந்த நேரத்தில் அமைச்சரவர்களுக்கு நம்முடைய தலைவர் மூலமாகச் சொல்லிக் கொள்கிறேன்.

ஆகவே, உடனடியாக இனிமேல் எந்த வெள்ளம் வந்தாலும், கோடைக்காலம் வந்தாலும், குளிர்காலம் வந்தாலும் இவ்வாண்டு ஜூன் மாதத்தோடு தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை முடித்து விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஜூன் மாதத்தில் கண்டிப்பாக நகராட்சிகளுக்குத் தேர்தல் வைத்து, தனி அதிகாரிகள் ராஜ்யத்திலிருந்து நகரமக்களைக் காப்பாற்ற வேண்டுமென்று நான் கேட்டு முடித்துக் கொள்கிறேன், வணக்கம், நன்றி.

<u>திரு. எஸ். ஆர். இராதா :</u> பேரவைத் துணைத் தலைவரவர்களே, அருமை நண்பர் பாலகிருஷ்ணன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். இரண்டு ஆண்டுகளாக தேர்தல் நடத்தாதது கொடுமை என்று சொன்னார்கள். தேர்தல் இரண்டு ஆண்டுகளாகத்தான் நடைபெறவில்லையென்பது சரியல்ல, அதற்கு முன்னரே பல்லாண்டுகளாகத் தொடர்ந்து தேர்தல்கள் நடைபெறவில்லை. ஆகவே, தொடர்ந்து பல்லாண்டுகளாகத் தேர்தல் நடக்காமல் கொடுமை நடந்து கொண்டிருக்கிறது என்று அவர்கள் சொல்வார்களானால் அதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

<u>திரு. சோ. பாலகிருஷ்ணன் :</u> என்னுடைய கருத்துக்குத் திருத்தம் கொடுத்ததற்காக, நான நம்முடைய இராதா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

<u>திரு. துரை கோவிந்தராசன் :</u> பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் நகராட்சிகளுடைய தனி அதிகாரி பதவிக் காலத்தை நீட்டிக்கின்ற, சட்டப்பேரவையினுடைய விதியின்படி இங்கே வைக்கப்பட்டிருக்கிற அந்த அறிக்கையை நான் வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்கிற நேரத்தில், இப்படிப்பட்ட தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீட்டிப்பது என்பது ஏதோ இந்த அரசு தேர்தலை சந்திப்பதற்குப் பயந்துகொண்டு, அல்லது ஆட்சி ஏற்பட்ட இரண்டாண்டுக் காலத்திலே மட்டும் தான் இப்படிப்பட்ட தனி அதிகாரிகளுடைய பதவிக்காலத்தை நீட்டிக்க வேண்டுமென்கிற நிலையிலே இருப்பதைப் போல் தெரிவித்திருக்கிறார்கள். ஊராட்சி மன்றத்தினுடைய தேர்தல்கள் எல்லாம் நடைபெற்று ஏறத்தாழ 10 ஆண்டு காலமாகிவிட்டது, ஆக, 10 ஆண்டுகளாக ஊராட்சிகள் தேர்தல்கள் நடைபெறவில்லையென்பதை இங்கே இருக்கிற அனைவரும் அறிவார்கள். ஆனால் இதற்கிடையிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட

1979 மார்ச் 14] [திரு. துரை கோவிந்தராசன்]

காலத்தில், அந்த இடைவெளியிலே உள்ள இரண்டு, மூன்று ஆண்டுக்காலத்தில் இந்த நாட்டிலே ஏற்பட்டிருக்கிற இயற்கையினுடைய கொடுமையால், புயலால், வெள்ளத்தால், வறட்சியால், அந்த நகராட்சிகளுடைய பகுதிகளில், சின்னஞ்சிறு குடிசைகளை வைத்திருந்தவர்கள்கூட பெரும் பாதிப்புக்குள்ளாகி அந்தக் குடிசைகள் இருக்கிற இடம் தெரியாமல் அவர்கள் பள்ளிக்கூடங்களிலே தங்கி வாழ்கிற நிலையிலே அவர்கள் அவதிப்பட்டார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு இடம் தேடித் தருவதிலும், சாலைப் பகுதிகள் வெகுவாகப் பழுதடைந்திருந்த நேரத்தில் இந்த அரசினுடைய கவனம் பொது மக்களுடைய அன்றாடப் பிரச்சினைகளுக்காக திசை திருப்பப்படவேண்டிய நிலை இருந்ததை எண்ணிப் பார்க்கவேண்டும். ஏதோ அரசினுடைய சார்பாக, அப்படிப்பட்ட தேர்தலை, இந்த நேரத்திலே சந்தித்தாலே, ஆளுங்கட்சிக்குத் தோல்வி வருமோ என்ற அச்சத்தில் தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை இந்த அரசு நீடிக்கிறது என்பதைப் போல, கருத்து தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். நான் சொல்லிக் கொள்வது, இந்த இயக்கம் தோன்றியக் காலத்தில் தேர்தலிலே தான் தோன்றியிருக்கிறது என்பதையும், சந்தித்த தேர்தல்களில் எல்லாம் வெற்றியைக் கண்டிருக்கிறது என்பதையும் ஊராட்சியிலேயிருந்து நகராட்சி வரையில், மாநகரம் வரையில் வெற்றியைக் கண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்வதோடு, இந்த அரசு தேர்தலைச் சந்திக்கத் தயங்காது, பின் வாங்காது என்பதையும் அதே நேரத்தில் நாட்டுமக்களுடைய எண்ணத்தையும், நாட்டுமக்களுக்கு இயற்கையாலே ஏற்பட்ட கொடுமைகளை மனதிலேகொண்டு, இந்த நகராட்சிகள் பதவிக்காலத்தை நீட்டிக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில், இன்னும் வாக்காளர்களை, குறிப்பாக, வாக்காளர் இருக்கிற இடங்கள் மாறிப்போய்விட்ட காரணத்தால், எல்லா வாக்காளர்களையும் பதிவுசெய்து கொள்கிற அந்த நிலைமையை உருவாக்க, வாக்காளர் பட்டியலைத் திருத்தி அமைத்து புதிதாக குடிசைகளில் இருந்து வெளியேறி, பாதிக்கப்பட்டவர்கள் வெளியேறி, 'கேர்' நிறுவனத்தின் மூலமாகவும் மற்ற நிறுவனங்கள் மூலமாகவும் வேறு இடங்களிலே மாறியுள்ள வாக்காளர்கள் தங்களுடைய உரிமையை பயன்படுத்துகிற அளவுக்கு வாக்காளர் பட்டியலில் அவர்களைச் சேர்க்க, அப்படிப்பட்ட காரியங்களில் முறையாக, சரியாகச் செய்ய, காலதாமதமானாலும் நல்லமுறையில் செய்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதையும் அதைச் செய்யவேண்டுமென்பதையும் இந்த நேரத்தில் நான் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12-20]

ஆனால் இது வரையில் இந்த அரசு அறிவிக்கப்பட்ட தேர்தல் முறைகள் பொதுவாக பார்க்கும்போதும், இன்னும் அறிவிக்கப்பட இருக்கிற தேர்தல்களை நடத்தச் செய்யும்

முயற்சிகளை பார்க்கும்போதும் தேர்தல்களை நடத்தவேண்டும் என்றுதான் இந்த அரசு விரும்புகிறது என்று தெளிவாகத் தெரியும். அப்படி ஜனநாயகத்திலே பற்றுக் கொண்டிருக்கிற நாம், ஜனநாயகத்தை பேசிக்கொண்டு இருக்கிற நாம், சோஷலிசத்தைப் பரப்பவேண்டும் என்ற எண்ணம் கொண்டிருக்கிற நாம், கிராமப்புரத்திலே மட்டும் ஒட்டு மொத்தமாக அந்தப் பொதுவான வாக்குகளைப் பெற வேண்டும் என்ற நிலையிலே இருக்கிறது அந்தச் சட்டம். அதே சட்டம் தான் மாவட்ட ஒன்றியங்களாக இருந்தாலும், நகராட்சியாக இருந்தாலும காணுகிற எண்ணுகிற நிலையிலே இருக்கிறது. அந்தக் கருத்தில் பார்க்கிற போது, அப்படி பொது வாக்களிப்பின் மூலமாக எப்படி இந்தச் சட்ட மன்றத்தில் உட்கார்ந்திருக்கிறோமோ, அப்படி பொது வாக்குகளின் மூலமாக தேர்ந்தெடுத்து வரக்கூடியவர்கள் நிர்வகிக்க வேண்டும் என்ற நல்ல நினைப்போடு தான் இந்த அரசு ஊராட்சி ஒன்றியங்களை கலைத்திருக்கிறது. அதே காரணத்திற்காகத் தான் நகராட்சியிலும், தனி அலுவலர் பதவி நீட்டிப்பு வேண்டும் என்று இந்த சட்ட முன் வடிவைக் கொண்டு வந்திருக்கிறது. தேர்தல்களை நடத்த காலதாமதம் ஆகலாம். இந்தக் காலதாமதம் 6 மாத காலம் நீடித்தது என்றாலும், தேர்தல்கள் நடத்துவதற்கு ஆயத்தங்களைச் செய்ய இந்த அவகாசம் வேண்டாமா என்று கேட்கிறேன். அதனாலேயே இந்த இடைக் காலத்தில் தேர்தல்கள் நடத்தினால், ஆளும் கட்சி தாம் தோற்றுவிடுவோம் என்று பயப்படுவதாக சொல்வதில் அர்த்தமே இல்லை.

நகராட்சி மன்றங்களிலேயும், ஊராட்சி ஒன்றியங்களிலேயும், ஆணைக்குழு அமைக்கப்பட்டு அரசாங்கத்தின் தனி அதிகாரி நிர்வாகத்திற்கும், அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளையும் கொண்டு இருக்கிற பொது நிர்வாகக் குழுவையும், நிர்வாகக் காரியங்களில் ஆலோசனை கூறச் செய்து அதன் அடிப்படையில் தான் காரியங்களை ஆற்ற வேண்டும் என்கிற நேரத்தில்

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நகராட்சியின் குழுவைக் கலைத்து தனி அதிகாரிகளை நியமிப்பது போல, பஞ்சாயத்து குழுக்களையும் கலைத்து தனி அதிகாரிகளை நியமிக்க உறுப்பினர் அவர்கள் விரும்புவாரா? ஏனென்றால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பஞ்சாயத்து தலைவராக இருக்கிறார். பஞ்சாயத்துக்களை கலைத்தால் அதை அவர் வரவேற்பாரா என்று அறிய விரும்புகிறேன் ?

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான் சொல்லிக் கொண்டு வந்த கருத்துக்களை புரிந்துக் கொள்ளவில்லை என்று கருதுகிறேன். இந்த மன்றத்திலே இருக்கிற உறுப்பினர்கள் அந்தந்த தொகுதியினுடைய

பொதுவான வாக்குகளைப் பெற்று வந்திருப்பது போல், ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்று சொன்னேன் — அதனால்தான் அவைகள் கலைக்கப்பட்டன என்று சொன்னேன். அப்படிப்பட்ட நிலையை மாற்ற வேண்டும் என்பதற்காகத்தான் தேர்தல்கள் வைக்கப்படும் கால அளவிற்குள், அவைகள் நிர்வாக விஷயங்களில் தேக்கப்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இத்தனி அலுவலர்கள் பதவி நீட்டிக்கப்பட வேண்டும் என்று அரசு கொண்டு வந்திருக்கிறது. சட்ட மன்ற உறுப்பினர்கள் பஞ்சாயத்து தலைவர்கள் மக்களால் நேரிடையாக தேர்ந்தெடுக்கப்பட்டதுபோல், ஊராட்சி ஒன்றிய தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லை; பஞ்சாயத்துத் தலைவர்கள் சேர்ந்து இந்த ஊராட்சி ஒன்றிய தலைவர்களை தேர்ந்தெடுக்கிறார்கள். இவைகளை ஒப்பிட்டு பார்க்கும்போது..............

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்து தலைவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, 7 வருஷம் 10 வருஷம் ஆகிறது ? அவர்களுக்கே அவர்கள் எப்பொழுது தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்பது தெரியாது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்ற ஒரே காரணத்திற்காக அவர்களே தொடர்ந்து பதவியில் இருக்கவேண்டும். ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர்கள் இருக்கக்கூடாதா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தலைவர் அவர்களே, உறுப்பினர் இராதா அவர்கள் கும்பகோணம் ஊராட்சி ஒன்றியத் தலைவராக இருந்தவர். இப்பொழுது ஒன்றியங்கள் கலைக்கப்பட்டு விட்டன. மாண்புமிகு உறுப்பினர் துரை கோவிந்தராசன் அவர்கள் பஞ்சாயத்துத் தலைவராக இருக்கிறார், அதனால்தான் இந்தக் கேள்வியைக் கேட்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. இரா. முத்தையா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஊராட்சி மன்றத் தலைவர்கள் இருப்பது நியாயம் என்று சொல்கிறாரா அல்லது கலைக்கவேண்டும் என்று சொல்கிறாரா ? கும்பகோணம் நகராட்சி மன்ற உறுப்பினராக இருந்தவர், அவர்கள் மனம் எப்படிப் பேசுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் நகராட்சி மன்ற உறுப்பினராக 12 ஆண்டு காலம் இருந்து இருக்கிறேன். ஆனால் திடீரென்று நகராட்சிகள் கலைக்கப்படுகிறபோது, மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட உறுப்பினர்களும் சேர்ந்து கலைக்கப்பட்டு இருக்கிறார்கள்.

பஞ்சாயத்துத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மட்டும் எத்தனை ஆண்டுகளுக்கு வேண்டுமானாலும நீடித்து இருப்பது என்பது சரியல்ல. ஆகவே, அவர்களையும் கலைத்து விட்டு தேர்தல் நடத்துவது தான் நல்லது. அப்படி தேர்ந்தெடுக்கப் பட்ட தலைவர் தான் நல்ல முறையில் செயல்பட முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்களும் இங்கே மற்ற உறுப்பினர்களும் தெரிவித்த கருத்துக்களைப் பார்க்கிறபோது அவர்கள் தங்கள் தங்களை பாதிக்காமல் இருப்பதற்குச் சட்டம் அரசாங்கம் கொண்டு வரவேண்டும் என்ற கருத்தில் பேசுவது போல் தெரிகிறது. அவர்கள் பொது மக்களின் நன்மைக்காகப் பேசுகிறார்களா அல்லது தங்கள் தங்கள் உள்நோக்கத்தை நிலைநாட்டுவதற்காகப் பேசுகிறார்களா என்பதை விளக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா: என்னைப் பொறுத்தவரையில், இந்த ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள் கலைக்கப்பட்டது நியாயம் என்று கருதுகிறேன். நீண்ட காலமாக பதவிகளில் இருப்பதால் தான் தவறுகள் வருவதற்கு வழிகள் பிறக்கின்றன. ஆகவே, இந்த ஊராட்சி மன்றத் தலைவர்களையும் கலைத்து விட்டு தேர்தல் நடத்தினால் நல்லது. பொதுமக்களுக்காகவும் சொல்வேன் யாருமே தொடர்ந்து நீண்டகாலத்திற்கு இருப்பதால் தான் அநியாயம் நடைபெறுவதற்கு துணையாக இருக்கிறது. ஆகவே, பஞ்சாயத்துத் தலைவர்கள் தொடர்ந்து இருப்பது நியாயம் அல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரை கோவிந்தராசன்: தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்களில் இருக்கும் தலைவர்கள் நியாயமாக இருக்காமல், அநியாயத்தில் ஈடுபட்டு இருந்தால், மக்களுக்கு சேவை செய்யாமல், தவறான காரியங்களில் ஈடுபட்டு இருந்தால் அப்படிப்பட்ட ஊராட்சி மன்றங்களை அரசு கலைத்து அதிகாரிகளைக் கொண்டு நடத்துவதற்கு முயற்சிகளை மேற் கொண்டு இருக்கிறார்கள். அப்படிப்பட்ட முறைகேடு உள்ள இடங்களில் ஊராட்சி மன்றங்களைக் கலைத்து இருக்கிறார்கள், என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின், கும்பகோணம் முன்னாள் நகராட்சி மன்ற உறுப்பினர் அவர்களின் கவனத் திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இப்படி நகராட்சிகளின் தனி அதிகாரிகளின் பதவி காலத்தை நீட்டித்துத் தருகிற அதே நேரத்தில் இந்த அரசு வர இருக்கிற தேர்தல்லில் ஒரு புதுமையை மேற்கொள்ள இருக்கிறது. ஜனநாயக அடிப்படையில் மொத்த மக்களின் பெருவாரியான வாக்குகளைப்பெற்று அந்தத் தலைவரின் பதவிக்கு வரவேண்டும்

1979 மார்ச் 14] [திரு. துரை கோவிந்தராசன்]

என்ற நல்ல நோக்கத்தோடு அந்தத் தேர்தலை நடத்த இருப்பது வரவேற்கத்தக்கது. இதை சொல்லப்போனால், இங்கே சில பேர் சொல்வார்கள், வாக்காளர் பட்டியல் தயாராகிவிட்டது, தயாரான நிலையில் இருக்கிறது, என்று சொல்வார்கள். என்னைப் பொறுத்த வரையில், திருத்திக் கொள்ள வேண்டுமானால் திருத்திக்கொள்கிறேன். அப்படிப் பட்ட வாக்காளர் பட்டியல், ஏதோ புதிதாக வாக்காளர் பட்டியல் தயாரிக்கவேண்டும் என்று மேலே இருக்கிற அதிகாரியின் தாக்கீது பெறப்பட்ட உடனே, இருக்கிற பட்டியலில் மேலும் சில எண்ணிக்கையைச் சேர்த்து, பட்டியல் தயாராகிவிட்டது என்று சொல்லாமல், இன்னொரு 6 மாத காலத்திற்கு தனி அதிகாரி ஆட்சி நீடிக்கவிரும்பவில்லை என்றாலும், அப்படிப் பட்ட பட்டியல் தயாரிக்காமல், அதிலே உள்ள குறைபாடுகளைப் போக்கும் வகையில் அதிகாரிகள் நடந்து கொள்வார்கள் என்ற உத்தரவாதத்தைத்தந்து இன்னும் கொஞ்சம் முறையாக அந்த வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் பணி நடைபெறவேண்டும், அந்த வகையில் தான் அரசு வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன். பழைய நிலைமைகளை நீடிக்கவிடாமல் புதிய சட்டம் முறை யாக கொண்டு வந்து இருப்பதை வரவேற்று, கொஞ்சம் கால தாமதம் ஆனாலும், அதை முறையாச் செய்யவேண்டும் என்று கேட்டு இந்தச் சட்டத்தை ஆதரித்து முடிக்கிறேன்.

திரு. அ. க. அரங்கநாதன்: துணைத் தலைவர் அவர்களே, நகராட்சி மன்றங்களில் உள்ள தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீடித்துத் தரும் மசோதாவை வரவேற்று சில கருத்துக் களைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்குத் தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருப்பதற்கான காரணம் என்ன, சூழ்நிலை என்ன என்பதை நாட்டு மக்கள் நன்றாக உணர்ந்து இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி செய்தபோது 3 ஆண்டு காலம் தான் ஒரு நகர மன்றத்தின் பதவிக் காலம் இருக்கும் என்று அறிவித்து தேர்தல் நடத்தினார்கள். ஆனால் 3 ஆண்டு காலம் முடிந்த பிறகும் கூட தேர்தல் நடத்தாமல், அதை மேலும் இரண்டு ஆண்டு காலத்திற்கு நீட்டித்து, 5 ஆண்டுகாலம் அந்த நகர மன்றங்களில் பதவியில் இருக்கலாம் என்று சொல்லப் பட்டது.

[பிற்பகல் 12-30]

ஆனால் அவர்களை 5 ஆண்டு காலம் நிரந்தரமாக பதவியில் உட்கார வைத்ததால்தான் பல்வேறுபட்ட ஊழல்கள் நடை பெற்றன. கான்ட்ராக்ட் போன்றவைகளில் எல்லாம் ஊழல் நடைபெற்றது. ஊழல் மிகுந்திருந்த காரணத்தால்தான் அவசர கால ஆட்சி வந்தபோது எங்கெங்கே ஊழல் இருக்கிறதோ அங்கங்கே இருந்த நகரமன்றங்களை கலைத்துவிட்டு, எங்கெங்கே உதாசீனம் செய்யப்பட்டு, மக்களுடைய வரிப் பணம் பாழாக்கப்

பட்டதோ அந்த நகராட்சிகளை எல்லாம் கலைத்துவிட்டு தனி அதிகாரிகளை நியமித்தார்கள் என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

அந்த தனி அதிகாரிகள் ஏதோ வேண்டுமென்றே நியமிக்கப் பட்டதாக பலரும் சொல்கிறார்கள். இன்றைக்கு இரண்டு ஆண்டுகாலம் பதவியில் இருக்கிற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பாலகிருஷ்ணன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். இரண்டு ஆண்டு காலத்திற்கு முன்னாலேயே அவசர கால ஆட்சியில் பல்வேறு நகராட்சிகளில் வேலைக்கு ஆள் சேர்ப்பது, கான்ட்ராக்ட் விடுவது போன்றவற்றில் ஏற்பட்ட ஊழல் காரணமாக அந்த நகராட்சிகளை கலைத்துவிட்டு தனி அதிகாரிகளை நியமித்தார்கள். தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டதன் மூலம் எந்த எந்த நகராட்சிகளில் யார், யார் ஊழல் புரிந்திருக்கிறார்கள், எந்தெந்த நகராட்சித் தலைவர்கள் ஊழல் செய்தார்கள் என்பதை கண்டுபிடித்து, அவர்களை இந்த நாட்டு மக்களுக்கு அடையாளம் காட்ட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக வேலூர் நகராட்சியிலே காந்தி நூற்றாண்டு விழா கமிட்டியின் பெயரால் 1,30,000 ரூபாய் வசூல் செய்தார்கள். ஒரு கடைக்கு 5000 வீதம் பகடி வசூல் செய்து அந்தத்தொகையைச் சேர்த்தார்கள். காந்தி நூற்றாண்டு விழா கமிட்டியில் நானும் ஒரு மெம்பராக இருந்தேன். அன்றையதினம் நான் திராவிடமுன்னேற்றக்கழகத்தில் இருந்தேன் இந்த பகடி வசூல் செய்வதற்கு ஆட்சேபம் தெரிவித்து நான் அந்த கமிட்டியிலிருந்து ராஜினாமா செய்துவிட்டு வெளியே வந்தேன். பகடி வசூலிப்பதைக் கண்டிக்கும் வகையில் ஒரு ஊர்வலம் நடத்தினேன். அன்றைக்கு இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அங்கே அப்படிப்பட்ட ஊழல் நடைபெற்றிருக்கிறது. இப்படிப்பட்ட ஊழல்களை எல்லாம் கண்டுபிடிக்கவும், மேலும் இவ்வாறு நடக்கக்கூடாது என்பதற்காகவும் தான் தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதைப்போன்று பல்வேறு இடங்களில் பல்வேறுபட்ட ஊழல்கள் நடைபெற்றிருக்கின்றன. தனி அதிகாரிகள் அப்படிப்பட்ட தவறுகளைக் கண்டுபிடித்து, தவறு செய்தவர்களை இந்த நாட்டு மக்களுக்கு அடையாளம் காட்டுவதன் மூலம் நல்ல ஒழுக்க சீலர்களான தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு நிச்சயமாக ஏற்படும். அதற்காகத்தான் இந்தச் சட்டத்தை கொண்டுவந்திருக்கிறார்கள்: இந்தச் சட்டத்தை நான் வரவேற்கிறேன்.

பல்வேறு நகராட்சிகளில் இன்றைக்கு தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டதால் அங்கே லைட் எரியவில்லை: குழாய்களில் தண்ணீர் சரியாக வரவில்லை என்று திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள், ஆனால் தனி அதிகாரிகள்

1979 மார்ச் 14] [திரு. அ. க. அரங்கநாதன்]

நியமிக்கப்பட்டதன் காரணமாகத்தான் இன்றைக்கு ஒழுங்கான முறையில் நடவடிக்கை எடுத்து, பல்வேறுபட்ட சீர்திருத்தங்கள் எல்லாம் நகராட்சிகளிலே ஏற்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல் ஊழல் பேர்வழிகள் நாட்டு மக்களுக்கு அடையாளம் காட்டப்பட்டும் வருகிறார்கள்: இன்னும் காட்டப்பட வேண்டியவர்களும் இருக்கிறார்கள். ஆகையால் இந்த தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை இன்னும் நீட்டிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. மீதி இருக்கிற ஊழல் பேர்வழிகளும் அடையாளம் காட்டப்பட்ட பிறகு தேர்தலை நடத்தினால் தான் உண்மையான நல்ல ஜனநாயகத்தைக் காக்கின்ற தேர்தலாக அது அமையும், ஆகவே, தனி அதிகாரிகளுடைய பதவிக்காலம் நீட்டிக்கப்படுகிறது.

குழாய்களில் தண்ணீர் வரவில்லை: லைட் எரிய வில்லை என்று சொன்னார்கள், அதனால்தான், இப்படிப்பட்ட குறைபாடுகளை எடுத்துச் சொல்லி, நிவர்த்தி செய்வதற்கான சர்வ கட்சி உறுப்பினர்களைக் கொண்ட அட்வைசரி கமிட்டி ஒவ்வொரு நகராட்சிக்கும் அமைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இன்றைக்கு மாதத்திற்கு ஒரு முறை அல்லது மாதத்திற்கு இரண்டு முறை என்று அந்த அட்வைசரி கமிட்டி கூடி எங்கெங்கே தண்ணீர் வரவில்லை, எங்கெங்கே லைட் எரியவில்லை என்பதை விவரமாகத் தெரிந்து கொண்டு— அதாவது அனைத்துக்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் அதிலே உறுப்பினராக இருப்பதால்—ஆங்காங்கே தக்க ஏற்பாடுகளைச் செய்ய ஏதுவாக இருக்கின்றது. ஆகவே இப்போது லைட் எரியவில்லை, தண்ணீர் வரவில்லை என்று சொல்லப்படுகின்ற குற்றச்சாட்டுகளை ஏற்றுக்கொள்ள முடியாதவனாக இருக்கிறேன்.

ஏனென்றால் இன்றைக்கு அதிகாரிகள் மூலமாக, பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களும் எடுத்துச்சொல்கின்ற காரியங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. நான் இப்படிச் சொல்வதால் தேர்தலே வரவேண்டாம், எப்பொழுதுமே அதிகாரிகள்தான் பார்த்துக் கொண்டிருக்கவேண்டும் என்பது என்னுடைய நோக்கமல்ல. ஆனால் அந்தத் தேர்தல் வருவதற்கு முன்னதாக பல சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டும். நகராட்சிக்கு தேர்ந்தெடுக்கின்ற வகைகளில் நல்ல ஒழுக்கம் நிறைந்த நிலை இருக்கின்றது என்பதற்கான அடையாளங்கள் காட்டப்பட வேண்டும். ஆகவேதான் மேலும் 6 மாதங்களுக்கு தேர்தலை நீட்டிக்கவேண்டும் என்ற இந்த சட்டத்தை நான் வரவேற்கிறேன். இன்றைக்கு நகராட்சியிலே பல்வேறு திட்டங்கள் வெகு வேகமாக நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. மக்களில் யாராக இருந்தாலும். அதாவது சாதாரண மக்கள் சென்று சொன்னாலும் கூட அதிகாரிகளும், நகராட்சி ஆணையரும் அவர்கள் சொல்கின்ற காரியங்களை உடனடியாகக கவனிதது நடவடிக்கை

[திரு. அ. க. அரங்கநாதன்] [1979 மார்ச் 14

எடுக்கின்றனர். ஆனால் நகரசபை இருந்த காலத்தில் குறிப்பிட்ட ஒரு கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே நன்மை கிடைத்து வந்தது. ஆகவே கட்சி உறுப்பினர்கள் இல்லாத காரணத்தால் அதிகாரிகள் மக்களுக்கு வேண்டியவற்றை, கட்சி என்ற வகைகளில் பார்க்காமல் செய்கின்ற நிலை இருக்கின்றது. அவர்கள் தங்களுடைய கடமையைச் செம்மையாக செய்கிறார்கள். இவ்வாறு சரியாக நடைபெற்று வந்தாலும் கூட ஆங்காங்கே சில தவறுகள் நடைபெறுவதுண்டு. ஆகவே தவறுகள் எங்கெங்கே இருக்கின்றன என்று சுட்டிக்காட்டப்படுமேயானால் அந்தத் தவறுகள் மீண்டும் நடைபெறாத அளவுக்கு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் ஆவன செய்வார்கள். வருகின்ற தேர்தல் நல்ல ஒரு தேர்தலாக இருக்கவேண்டும் என்ற அடிப்படையில்தான் இம்மாதிரி ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. தேர்தல் நல்லமுறையில் அமைவதற்காக பல்வேறு வகையில் திருத்தி அமைப்பதின் காரணத்தால்தான் காலதாமதம் ஏற்படுகிறதே தவிர வேறல்ல.

ஆகவே இரண்டாண்டுகளுக்கு முன்பு ஆட்சிக்கு வந்துவிட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தேர்தலை சந்திக்கத் தயங்குகிறது, பயப்படுகிறது என்ற குற்றச்சாட்டுகளை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. இதற்கு முன்னாலே இருந்த அரசு 3 ஆண்டுக்காலத்திற்கு ஒரு முறை தேர்தல் என்று இருந்ததை 5 ஆண்டுக்காலத்திற்கு நீட்டித்தது சட்டத்தின் மூலமாக. அதேபோல் அவசர காலம் அமலில் இருந்தபோது ஒன்றரை ஆண்டுக்காலம் நீட்டிக்கப்பட்டது. அதன் பிறகு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வந்து இதனை நீட்டிப்பதற்குக் காரணம் நடைபெறப்போகும் தேர்தல் நல்லவிதமாக அமையவேண்டும் என்பதுதான். ஆகவே இந்தச் சட்டத்தை வரவேற்று விடைபெற்றுக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த அவையின் முன்பு விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ள நகராட்சி தனி அதிகாரிகள் சம்பந்தப்பட்ட சட்ட முன்வடிவில், நான் சார்ந்திருக்கின்ற பார்வட் பிளாக் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைச் சுருக்கமாகக் கூற விரும்புகிறேன்.

நகராட்சித் தேர்தலைக் குறிப்பிட்ட காலத்திற்குள் நடத்துவதற்கு இந்த அரசு பயப்படுகின்றது என்ற காரணத்தை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பல முறை எடுத்துச் சொல்லியிருந்தாலும் என்னைப் பொறுத்தவரையில் தேர்தலை சந்திக்க இந்த அரசுக்கு அச்சமிருக்கிறது என்று நான் கருதவில்லை. எதற்கெடுத்தாலும் சந்தேகப்பட்டால் யாருமே நல்ல மனிதனாக சமுதாயத்தில் நடமாட முடியாது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். நகராட்சி

1979 மார்ச் 14] [திரு. கே. கந்தசாமி]

பஞ்சாயத்து ஆகியவற்றின் தேர்தல்கள் தள்ளிப்போடப்படு கின்றன என்று சொல்லுகின்ற அதேநேரத்தில் நாம் இன்னொன்றை யோசித்துப்பார்க்கவேண்டும். கடந்த காலங்களில் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக மக்களின் உயிருக்கும் உடமைக்கும் ஏற்பட்ட சங்கடங்களையும், அதன் காரணமாக அரசுக்கு ஏற்பட்ட இன்னல்களையும் நாம் யோசித்துப்பார்க்க வேண்டும். கடந்த காலங்களில் இவ்வாறு பெருத்த சேதம் ஏற்பட்டு அரசினுடைய கவனத்தை ஈர்த்தது மாத்திரமல்லாமல் பொருளா தார ரீதியாகவும் பெருத்த சேதம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் அறிவோம். அப்போது பல டிப்பார்ட்மென்டுகளையும் சேர்ந்த அதிகாரிகள் தங்களுடைய முழு கவனத்தையும் செலுத்தி மக்களின் உயிர், உடமைகளைப் பாதுகாக்கவேண்டிய அவசர கட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டார்கள்.

[பிற்பகல் 12–40]

இந்த நிலையில் முறையோடு 'அண்டர் நார்மல் ஸர்கம்ஸ் டன்ஸஸ்', சாதாரணச் சூழ்நிலையில் அரசாங்கம், அதன் இயந்திரங்கள், அந்தந்த இலாக்காக்கள் இவை செயல்படுவதின் மூலம் இன்னும் சிறிது காலத்தை நீட்டித்தால் புதிதாக வாக்காளர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், இப்போது இல்லாதவர்களை அதிலிருந்து நீக்கவும், முறையோடு வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும் என்ற முறையில் சில யிடங்களில் முறைகேடுகள் நிகழ்ந்திருக்கின்றன என்று மக்கள் அரசாங்கத்தைக் குறை கூறாத அளவிற்கு நல்லபடியாக வேலை செய்ய வாய்ப்பளிக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடுதான் அரசாங்கம் இந்தத் தேர்தலை ஒத்திப்போட்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன். ஆகவே இதை நான் வரவேற்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை கோவிந்தராசன் அவர்கள் பேசுகிறபோது முறைகேடுகள் நிகழாவண்ணம் அரசாங்கம் மிக ஜாக்கிரதையாக நடக்கவேண்டும் என்றும் எச்சரிக்கை விடுத்து இன்னும் இதற்கு மேலும் காலத்தை நீட்டித்தால் கூட பாதகம் இல்லை என்ற கருத்தையும் தெரிவித்தார்கள். அந்த இடத்தில் நான் வேறுபடுகிறேன், காரணம், ஏற்கனவே நாம் அதிகமாக காலம் தாழ்த்தியிருக்கிறோம் என்ற எண்ணம் மக்களிடம் நிலவுகிறது. ஆகவே அந்த எண்ணத்தை மற்றவர்கள், எதிரிகள், உள்நோக்கம் கற்பிக்கிற அளவிற்கு அதுதான் உண்மை என்று கட்சிசார்பற்ற மக்கள் நினைக்கிற அளவிற்கு ஐயம் ஏற்படா வண்ணம் மறுபடியும் தேர்தல்களை தள்ளிப்போடாமல் இருக்க வேண்டும் என்று அரசைக்கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். நமது அரசியல் சாஸனத்தில் ஒத்துக் கொண்டிருப்பது, டெமாக்ரட்டிக் ரிபப்ளிக் என்பதை அத்தனைபேர்களும் நன்கு அறிவோம். வெகுஜன வாக்கெடுப்பிற்கு மரியாதை கொடுக்கும் முறையிலே நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். ஆகவே உரிய காலத்தில் தேர்தல்களை நடத்துவதின்மூலம் நாம் உண்மை ஜனநாயக வாதிகள் என்பதை

மக்கள் உள்ளங்களில் நிலைநிறுத்த முடியும். நாம் ஜனநாயக வாதிகள், ஜனநாயகத்தை மதிக்கிறோம், மக்களுடைய வாக்குகளை மதிக்கிறோம் என்பதற்கு முன்னோடியாக மாநகராட்சி, நகராட்சித் தலைவர்கள் தேர்தல்களையும், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் தேர்தல்களையும் வெகுஜன வாக்கெடுப்பாக வைத்திருக்கிறீர்கள். அதைப் பாராட்டுகிறேன். இது உங்கள் உள்நோக்கத்தைப் பிரதிபலிக்கிறது என்று நான் கருதுகிறேன். பெரும்பான்மையான மக்கள் யாரை விரும்புகிறார்களோ அவர்கள் தலைவர்களாக வருவதற்கு நல்ல வாய்ப்பளித்திருக்கிறீர்கள். இதற்கு முன்னால் இருந்த தேர்தல் ஊராட்சி ஒன்றியத் தலைவராக வரவேண்டும் என்றால், பஞ்சாயத்துத் தலைவர்களை கௌன்ஸிலர்கள் என்று சொல்வார்கள். ஆங்காங்குள்ள செல்வாக்கு படைத்தவர்கள், அரசியலில் அல்லது பணம் செல்வாக்குள்ளவர்கள் பஞ்சாயத்துத் தலைவர்களைக் கொண்டு ஒன்றியத் தலைவர்களாக வர முடிந்தது. சாதாரணமாக ஏழைகள், மக்கள் செல்வாக்கைப் பெற்றவர்களைவிட வெகுஜன வாக்கெடுப்பின்மூலம் ஒன்றியத் தலைவர்களாக வர வாய்ப்பில்லாமல் இருந்தது. ஆனால் இன்றைய நடைமுறைப்படி, சாதாரண ஏழையாக இருந்தாலும் அவர் மக்கள் நன்மதிப்பைப் பெற்றிருந்தால் ஊராட்சி ஒன்றியத் தலைவராக வர வாய்ப்பளித்திருக்கிறீர்கள். ஆகவே இந்தத் தேர்தல்களை விரைவில் கொண்டு வர வேண்டும். குறிப்பிட்ட தேதியில் கொண்டுவரவேண்டும். பல நகராட்சிகளில் மின் விளக்குகள் சரியாக எரிவதில்லை. அதை அமைச்சர் அவர்கள் உணர்ந்திருப்பார்கள் என்று கருதுகிறேன். மக்கள் பிரதிநிதிகள் சொன்னாலும்கூட அதைச் செயல்படுத்துவதில்லை, எமர்ஜென்ஸி பீரியேடில் இருந்த நிலையில் இன்னும் அந்த உணர்வோடு செயல்படுகிறார்கள் சில அதிகாரிகள். அவர்களைக் கண்காணித்து அதிகாரிகள் மக்கள் சேவகர்கள் என்ற உணர்வோடு செயல்படவேண்டும் என்ற அளவிற்கு அறிவுறுத்தப்பட வேண்டும், அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். எரியாத விளக்குகள் எரிவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பல குழாய்களில் சரிவரத் தண்ணீர் வருவதில்லை. அந்தப் பிரச்னையையும் நிவர்த்தி செய்யவேண்டும்.

அடுத்தபடியாக உசிலம்பட்டியை பொறுத்தளவுக்கு, அது என்னுடைய தொகுதியாக இப்போது இல்லாவிட்டாலும், அடிக்கடி நான் அங்கு உலாவுகிற காரணத்தால் இதைச் சொல்கிறேன். உசிலம்பட்டியை நகராட்சியாக அமைக்க வேண்டும் என்று பல ஆண்டுகளாக அங்குள்ள மக்கள் கோரிக்கையாக சொல்லிக் கொண்டு வருகிறார்கள். நான் உசிலம்பட்டி சட்டமன்ற உறுப்பினராக இருந்த நேரத்தில் இதை சட்டமன்றத்திலும் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். பின்னால்

1979 மார்ச் 14] [திரு. கே. கந்தசாமி]

உசிலம்பட்டி நகராட்சியாக ஆக்கப்பட்டது என்று அரசு அறிவித்தது என்றும் எனக்கு நினைவு இருக்கிறது. ஆனால் இன்னும் அது முறையோடு செயல்படுத்தப்படவில்லை. நகராட்சியாக ஆக்கப்படவில்லை. அதற்குக் காரணம், அங்குள்ள சில வியாபாரிகள், சில சுயநலக்காரர்கள், இன்னும் சிலர் சேர்ந்து கொண்டு நகராட்சியாக வரவேண்டாம் என்று சொல்லிவருவதாக தெரிகிறது. நகராட்சியாக ஆக்கப்பட்டால் சிட்டி பஸ்கள் என்ற அளவிலும், மற்றும் நகராட்சிக்காக தரப்படும் மற்ற பல வசதிகளும் பொது மக்களுக்கும் ஏற்படும். அதை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே அரசின் சார்பாக கொடுக்கப்படும் இந்த நன்மைகளை எல்லாம் அங்குள்ள மக்கள் பெறும்பொருட்டு, உசிலம்பட்டியை நகராட்சியாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்தச் சட்டத்தை வரவேற்று அமைகிறேன். வணக்கம்.

*டாக்டர் கே. சமரசம் : பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த மசோதாவை வரவேற்று ஒருசில கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன். ஊராட்சி மன்றங்கள் இந்தியாவின் ஜீவநாடியாக இருக்கிறது என்று சொன்னார்கள். பொதுவாக இந்த மசோதா மீது பேசுகின்ற நேரத்தில் ஊராட்சிகள், பேரூராட்சிகள் ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள், மாநகராட்சிகள் இவைகள் எல்லாம் அடங்கிய உள்ளாட்சித்துறை என்ற அடிப்படையில் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கிராமம், நகரம் என்றிருக்கக்கூடிய நிலையினைமாற்றி, சிறு நகரம். பெரு நகரம் என்ற வகையில் இருக்கவேண்டும் என்று நாம் வற்புறுத்துகின்றோம். அப்படி வற்புறுத்துகின்ற அதே நேரத்தில் ஊராட்சிகள் என்ற நிலை மாறி பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி என்கின்ற நிலை ஏற்படுவதற்கான வழி வகை செய்தாக வேண்டிய கட்டாயத்தில் நாம் இன்றைக்கு இருக்கிறோம். உண்மையில் கிராமம் என்ற நிலையில் பலப் பல வகையான பலன்களை செய்து கொடுக்கவேண்டும் என்று அரசு திட்டங்களை தீட்டி வந்தாலும், அவைகள் எல்லாம் பெரும்பாலும் மாநகராட்சிகளுக்கும் நகராட்சிகளுக்குமே செல்லக்கூடியதாக இருக்கின்றன. இந்த வசதிகள் எல்லாம் ஊராட்சிகளை சென்று எட்டிப் பிடிப்பதில்லை என்கின்ற சூழ்நிலைதான் இருந்து வருகிறது. ஆகவே கிராமம் என்கின்ற நிலையை மாற்றி சிறு நகரம், பெரு நகரம் என்ற அளவில் ஏற்படுத்துவதற்காக, ஊராட்சிகளை கலைத்துவிட்டு, பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள் என்ற அளவில் அமைக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். அந்த அளவுக்கு அந்தஸ்து உயர்த்தப்பட்டால்தான் ஊராட்சிகளிலுள்ள மக்களின் தரம் உயர முடியும் என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. ஒரு மாவட்டம் என்று சொன்னால், அந்த மாவட்டத்தில் நடக்கக்கூடிய மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் நடக்கின்ற விஷயங்களை நேரடியாக தெரிந்து கொள்ளுகின்ற வகையில்

அமைச்சரவையிலுள்ள ஒரு அமைச்சர் கலந்து கொள்ளுகின்ற ஒரு நிலையை உருவாக்கவேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திலும் பல பணிகள் நடைபெறுகின்றன, அவற்றையெல்லாம் மாண்புமிகு அமைச்சர்கள் தெரிந்து கொள்கின்ற வகையில்—அந்தந்த மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களில், மாவட்ட ஆட்சித் தலைவர், சட்டமன்ற உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், ஏனைய பொறுப்பானவர்கள், அத்துடன் அமைச்சர் அவர்களும் கலந்துகொள்ளக்கூடிய சூழ்நிலை இருந்தால் அந்தந்த மாவட்டத்தின் நிலையை அமைச்சர்கள் அறிந்து கொள்ளக்கூடிய நல்லதொரு வாய்ப்பை அவர்கள் பெற முடியும். மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் அமைச்சர் கலந்து கொண்டு நேரடியாக விஷயங்களைத் தெரிந்து கொள்கின்ற சூழ்நிலையை உருவாக்குவது, ஜனநாயகம் தழைத்தோங்குவதற் கேற்ற நிலை உருவாகும் என்பதை சொல்லிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், நகராட்சிகள் பல கலைக்கப்பட்டன. ஆனால் பஞ்சாயத்து தலைவர்களின் பதவி ஏன் இன்னும் கலைக்கப்பட வில்லை என்றும் கேட்டார்கள். பஞ்சாயத்துத் தலைவர்களின் தேர்தல் நடைபெற்று 9 ஆண்டுகள் ஆகியும் இன்னும் அவர்கள் தொடர்ந்து இருப்பது என்பது இப்போது கொள்கையாக இருந்து வருகிறது. அதுவும்கூட அங்கே தேர்தல் நடைபெற விருப்பதால், சுதந்திரமான முறையில் தேர்தலை நடத்த வேண்டியிருப்பதால், தேர்தல் நடைபெறுவதற்கு இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பே — பஞ்சாயத்துத் தலைவர்களையும் கலைத்துவிட்டு தேர்தல் நடைபெறுமானால், அது சுதந்திரமானதாகவும், ஜனநாயக ரீதியாகவும் அமையும் என்பதைச் சொல்லிக் கொண்டு, அப்பேர்ப்பட்ட சூழ்நிலையில் கிராமங்கள் அமைந்தால்தான், கிராமங்களில் உள்ள விளை பொருட்கள் எல்லாம் நகரத்திற்கு வரமுடியும். அந்த முறையில் சிறு நகரம், பெரு நகரம் என்ற முறையில் அமைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி என்ற அந்தஸ்தில் உயர்ந்தால்தான் உண்மையான பலன் கிடைக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் எடுத்துச்சொன்ன தெரு விளக்கு பிரச்னை மிக முக்கியமான பிரச்னை. உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், மின்சாரத்துறை அமைச்சர் அவர்களும் இது சம்பந்தமாக ஒரு முடிவு எடுத்திருப்பதாக இந்த மன்றத்தில் தெரிவித்திருக்கிறார்கள். அந்த முடிவை விரைவில் அறிவித்து, மின்விளக்கு வசதியை அதிகப்படுத்தி, கிராமங்களுக்கு ஒளி வழங்க செய்ய இந்த முடிவை உடனடியாக அமுலுக்கு கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

1979 மார்ச் 14] [டாக்டர் கே. சமரசம்]

[பிற்பகல் 12-50]

இங்கே பேசுகின்றபோது மாண்புமிகு நன்னிலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மணிமாறன் பேசுகின்றபோது சொன்னார்கள். வாக்காளர்கள், வேட்பாளர்கள், அரசு இதிலே யாருக்கு அச்சம்—வாக்காளர்களுக்கு அச்சமா, வேட்பாளர்களுக்கு அச்சமா, அரசுக்கு அச்சமா என்று கேட்டார்கள். ஊராட்சி ஒன்றியம், நகராட்சி, மாநகராட்சி தேர்தல்களைச் சந்திக்க அச்சமா என்று கேட்டார்கள். உண்மையிலேயே அவர்கள் அப்படிச் சொல்லிவிட்டு, சில விஷயங்களைச் சொன்னார்கள். வசந்த காலத்தை நீங்கள் எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறீர்களா என்று கேட்டார்கள். நான் அவருக்குச் சொல்லுவேன். உண்மையிலேயே அச்சம் இந்த அரசுக்கு இல்லை என்பதையும், இந்த அரசு எந்த நேரத்திலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எப்போது தேர்தலிலே நின்றாலும் வெற்றி பெறும் என்பதற்கு மதுரை மாநகராட்சி ஒரு எடுத்துக் காட்டாக இருக்கிறது. அது மட்டுமல்ல. புரட்சித் தலைவர் அவர்கள் என்றைக்கு அ.தி.மு.க-வை உருவாக்கினார்களோ, அன்றைக்கு மட்டுமல்ல, என்றும், எந்த இயக்கத்திலே அவர் இருக்கின்றாரோ அந்த இயக்கம் வெற்றி பெற்று வந்தது, அவர் இல்லாதபோது தி.மு.க. பொதுத் தேர்தல் வந்தபோது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இல்லாதபோது தோல்வி கண்டது என்பதும் ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது. ஆகவே இவைவெல்லாம் ஒரு வரலாற்று சிறப்புமிக்க உதாரணமாகும். இந்த அளவிலே இன்றையதினம் சூரியன் கொடுமையாலே பாதிக்கப்பட்ட மணிமாறன் போன்றோர் வசந்த காலத்தைத் தேடி இலையின் நிழலில் இளைப்பாற அதைப் பற்றிக் கவலைப் படவில்லை. அவர்களுக்கும் இந்த அரசு ஆதரவு அளிக்கும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அப்படிப்பட்ட சூழ்நிலையில், மக்கள் குழுவைப் பற்றிச் சொன்னார்கள். மக்கள் குழு, அரசு விழா இப்படிப்பட்டவைகளில் தி.மு.க. கலந்துகொள்ளாது என்று ஒரு தீர்மானம் போட்டு, அவர்கள் மக்கள் குழுவிலே இருந்து விலகியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையிலே விலகிவிட்டு, சட்டமன்றப் பேரவையிலே பேசுகின்றபோது மக்கள் குழுவா அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வின் கட்சிக் குழுவா என்று பேசுகிறார்கள். இது இரட்டை வேஷம் போடக்கூடிய நிலை. உண்மையிலேயே மக்கள் குழுவிலே இப்படி போடப்பட்டவர்கள், அவர்களுடைய கட்சியினுடைய கட்டளைக்கு ஏற்ப பலர் விலகியிருக்கிறார்கள்; சிலர் இன்றும் இருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். இப்படிபட்ட நிலையில் பந்திக்கு வராமல் பாயசத்திலே இனிப்பு இல்லை, பருப்பிலே உப்பில்லை, என்று சொல்வதுபோல் நண்பர் கள் பேசிக்கொண்டிருப்பதை நாம் அறிவோம். இந்த நிலையிலே உண்மையிலேயே வருகின்ற தேர்தல், நல்ல தேர்தலாக அமைய,

ஒழுங்கான வகையிலே நடக்க வாக்காளர் ஜாபிதா, இன்னும் பல தஸ்தாவேஜுகளை எல்லாம் முழுமையாக்க வேண்டுமென்ற வகையில், இந்தக் காலத்தை நீட்டிக்க கேட்பது என்பது தவறில்லை என்பதைச் சுட்டிக்காட்டி, ஆனால் அதே நேரத்தில் வருகின்ற தேர்தலில் நல்ல வழிவகைகளை இந்த அரசு மேற் கொண்டிருக்கிறது என்பதைக் கூறி, வரவேற்று நான் அமைகிறேன், நன்றி. வணக்கம்.

திரு. எஸ். ஆர். இராதா : துணைத் தலைவர் அவர்களே, டாக்டர் சமரசம் அவர்கள் கிராமங்கள், நகரங்களாக மாற்றப்பட வேண்டுமென்று சொன்னார்கள். வளர்ச்சி மூலமாகவா அல்லது பொதுவாக பெயர் மாற்ற வேண்டுமென்று விரும்புகிறார்களா? பாண்டிச்சேரியிலே, கிராமங்களே இல்லை, அதனால் பாண்டிச்சேரி நகராட்சி வளர்ந்து விட்டது என்று சொல்ல முடியாது. எனவே கிராமங்கள் வளர்வதன் மூலம் நகராட்சியாக்க வேண்டுமென்று சொல்கிறார்களா அல்லது பெயரை மட்டும் அப்படி மாற்ற வேண்டுமென்று விரும்புகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசு ஏற்பட்ட பிறகு எல்லா மாவட்டங்களிலும் உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் மாவட்ட மையங்கள் ஏற்படுத்தி, மிகப் பெரிய அளவிலே தொழில் அபிவிருத்திக்கு ஏற்பாடு செய்திருக்கின்ற காரணத்தால், அதேபோல் சிறு தொழில்களும் பெருகி இருக்கின்ற காரணத்தால், பட்டுத்தொழில் இன்னும் இதுபோன்ற தொழில்கள் எல்லாக் கிராமங்களிலேயும் பரவியிருக்கின்ற காரணத்தால், அந்த அடிப்படையிலேயே ஊராட்சிகள் பேரூராட்சிகளாக—நகராட்சிகளாக, ஒன்றியங்களாக மாறுவது சாலச் சிறந்தது என்பதை நண்பர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு பிரச்னையை மட்டும் நான் விளக்கி விடலாம் என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் பாலகிருஷ்ணன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் கந்தசாமி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் சமரசம் அவர்களும் ஒரு பிரச்னையை எழுப்பினார்கள். தெரு விளக்குகள் சரியாக எரிவதில்லை என்றும், குறிப்பாக நகரமன்றங்களில், ஊராட்சி மன்றங்களில் அது ஒரு பெருங்குறையாக இருக்கின்றது என்று தெரிவித்தார்கள். அதைப்பற்றி மட்டும் நான் விளக்குவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

இந்த மின் விளக்குகளைப் பொறுத்தவரையில், ஏற்கனவே மின் வாரியம்தான் பராமரித்து வந்தது. சாதாரணமாக விளக்குகள் இருந்தால், அதை ஆண்டுக்கு மூன்று முறைகள் கட்டணம் எதுவும் இன்றி மின் வாரியம் மாற்றியது.

1979 மார்ச் 14] *[திரு. ச. இராமச்சந்திரன்]*

குழல் விளக்குகளாக இருந்தால் ஆண்டுக்கு ஒரு முறை மின்வாரியம் மாற்றி வந்தது. மின்வாரியம் இந்தப் பணியை மேற்கொண்டிருந்தபோது இரண்டு குறைகள் அப்போது தெரிவிக்கப்பட்டன. ஒன்று பல்புகள் ஃபியூஸ் ஆகிவிட்டால் அந்த பல்புகள் மின் வாரியத்தால் தக்க காலத்தில் மாற்றப்படவில்லை என்பது இரண்டாவது குறை, இந்த விளக்குகளுக்கு நிரந்தர கட்டணம் என்று வசூலிக்கப்படுகிற காரணத்தால் எரியாத விளக்குகளுக்கும் சேர்ந்து நகராட்சி மன்றங்களும், ஊராட்சி மன்றங்களும் பணம் செலுத்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறது என்று குறிப்பிட்டார்கள். ஒன்று மீட்டர் வைத்து அதன்படி கட்டணம் செலுத்த வழி செய்யவேண்டும். இரண்டாவது குறிப்பிட்ட காலத்தில் விளக்குகள் தீய்ந்து போய்விட்டால் அவற்றை மாற்றுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்பது கோரிக்கை. இது சம்பந்தமாக அப்போதிருந்த நிர்வாகச் சீர்திருத்தக் குழுவும் ஆராய்ந்தது. அதேபோல் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள் செயற்குழுவிலும் இது பற்றி ஆராயப்பட்டது.

1974 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி நடத்திய நேரத்தில் இதுபற்றி ஆராய்ந்து எடுத்த முடிவு என்னவென்றால் விளக்குகள் எரிய வேண்டுமென்பதில் உள்ளாட்சி மன்றங்களுக்கு இருக்கிற அக்கறை மின்வாரியத்திற்கு இருக்கவேண்டிய அவசியம் இல்லையாகையால் உள்ளாட்சி மன்றங்கள் இந்தப் பொறுப்பை மேற்கொள்ள வேண்டுமென்று 20—1—1974 ஆம் ஆண்டு ஒரு உத்தரவை அரசாங்கம் பிறப்பித்தது. அன்றிலிருந்து தெரு விளக்குகளைப் பராமரிக்கும் பொறுப்பு நகர மன்றங்களுக்கும் ஊராட்சி மன்றங்களுக்கும் வந்தது. ஆனால் இந்த விளக்குகளை மாற்றுவதோ அல்லது அந்த விளக்குகள் எரிகிற சூழ்நிலைகளில் ஏற்படுகிற குறைபாடுகளைக் களைவதோ ஆகிய அந்தப் பொறுப்பு மின்வாரியத்திடம் இருந்தது. ஆனால் இந்த உத்தரவு வந்தபோது உள்ளாட்சித் துறையைச் சேர்ந்த அத்தனைப் பேரும் தெரிவித்த கருத்து 'உத்தரவு சரிதான் என்றாலும் மீட்டர் வைத்த பிறகு தெரு விளக்குகளுக்குப் பயன்படுத்துகிற மின்சாரத்திற்கு யூனிட் ஒன்றுக்கு விதிக்கப்படுகிற கட்டணம் உயர்வாக உள்ளதால் ஊராட்சி மன்றங்கள் இதைத் தாங்காது. மறு பரிசீலனை செய்ய வேண்டும்' என்று வேண்டுகோள் விடுத்தார்கள். அதனால் அந்த உத்தரவு 1974 ஆம் ஆண்டு தாற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது.

அதற்குப் பிறகு இது மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு ஆளுநர் ஆட்சிக் காலத்தில் மின் கட்டணந்தான் அதிகமாக இருக்கிறது என்று தெரிவிக்கிறார்கள் என்று அதை பற்றி ஆராய்ந்து யூனிட் ஒன்றுக்கு 27 பைசா என்று தீர்மானித்து 1977 ஆம் ஆண்டு மே மாதம் 4 ஆம் தேதி மின் கட்டணத்தை

நிர்ணயித்து உத்தரவு பிறப்பித்தார்கள். அன்றிலிருந்து நிலைமை என்னவென்றால் மின் விளக்குகளைப் பராமரிக்கும் பொறுப்பு நகராட்சி மன்றங்களுக்கு, அது சம்பந்தமாக உள்ளாட்சித் துறை பல உத்தரவுகளைப் பிறப்பித்தும் பல்வேறு இடங்களில் இருந்து என்ன குறைபாடுகள் எங்களுடைய கவனத்திற்கு வந்தன என்றால், போதுமான அளவு பல்புகள் கிடைப்பதில்லை. கிடைத்தாலும் மாற்ற வேண்டுமென்று மின்வாரியத் தொழிலாளர்களை அழைத்தால் அவர்கள் வருவதும் இல்லை. இந்த இரண்டு குறைகள் இருக்கின்றன என்று அவர்கள் எங்களிடத்தில் எடுத்துச் சொன்னார்கள். உள்ளாட்சித் துறை அமைச்சரும், நானும் இந்த இரண்டு துறைகளைச் சேர்ந்த அதிகாரிகளும் இதுப்பற்றிக் கலந்து பேசி சில முடிவுகளை எடுத்திருக்கிறோம். அந்த முடிவுகளை நான் இந்த மன்றத்திற்கு அறிவிக்க விரும்புகிறேன்.

ஒன்று தெரு மின் விளக்குகளைப் பராமரிக்கும் பொறுப்பு உள்ளாட்சி நிறுவனங்களிடம் தொடர்ந்து இருக்கவேண்டும். இப்படி முடிவு எடுத்தற்குக் காரணம் விளக்கு எரிகிறதா இல்லையா என்று பார்க்கிற பொறுப்பு தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகளுக்குத்தான் அதிகமாக இருக்குமென்று நாங்கள் கருதுகிறோம். ஆகையால் இந்தப் பொறுப்பு உள்ளாட்சி மன்றங்களிடத்தில் இருப்பதில் தவறு இல்லை.

இரண்டாவது, பஞ்சாயத்துக்களுக்குத் தேவையான பல்புகள் மற்றும் குழல் விளக்குகளை பஞ்சாயத்து யூனியன் வாங்கி வைத்து பஞ்சாயத்துக்களுக்கு வழங்க வேண்டும். நகராட்சிகளுக்குத் தேவையான பல்புகள் மற்றும் குழல் விளக்குகளை அந்தந்த நகராட்சிகளே வாங்கிக் கொள்ள வேண்டும். சில ஊராட்சி மன்றங்களில போதிய நிதிவசதி இராது என்ற காரணத்தால் பல்புகளை வாங்கி ஊராட்சி மன்றங்களுக்கு தருகிற பொறுப்பு ஊராட்சி ஒன்றியங்கள் மேற்கொள்ளவேண்டும். ஆனால் நகராட்சி மன்றங்களைப் பொறுத்தவரை கமிஷனரும், நிர்வாக அதிகாரியும் இருக்கின்ற காரணத்தால் இந்தப் பிரச்னை எளிதானது.

மூன்றாவது, பழுதடைந்த பல்புகள், குழல் விளக்குகளை மாற்றுவதைப் பொறுத்தவரை அது மின் வாரிய ஊழியர்களின்

[பிற்பகல் 1.00]

பொறுப்பாகும். ஏனென்றால் மின் துறை சம்பந்தப்பட்ட லைன்கள் வைத்திருப்பதால் கம்பத்திலே ஏறுவதோ அல்லது அங்கே இருக்கிற தெரு விளக்குகளிலே ரிப்பேர் செய்வதோ வேறு யாரும் செய்ய முடியாது, தொழில் நுட்ப ரீதியாக மின்சார வாரியத்தைச் சேர்ந்தவர்கள் தான் செய்யவேண்டும். இப்பணி செவ்வனே நடைபெறும்படி மின்வாரியம் கவனத்தில் கொள்ளும்.

1979 மார்ச் 14] [திரு. ச. இராமச்சந்திரன்]

அடுத்து. பழுதடைந்த பல்புகள், குழல் விளக்குகளை மாற்றுகிறபோது ப்யூஸ் ஆப் கால் ஆகத்தான் அதைக் கருத வேண்டும். அத்தகைய ப்யூஸ் ஆப் கால் கீழ்க்கண்ட திருத்தங்களுக்கு உட்பட்டு கவனிக்கப்படும். ப்யூஸ் ஆப் கால் கார்டு என்பது மின் வாரியத் தொழிலாளருக்குத் தரப்படும். அவர் அதை எடுத்துக் கொண்டுபோய் நகராட்சி மன்றத்திற்கோ ஊராட்சி மன்றத்திற்கோ சென்று விளக்குகளை மாற்றுகிறபோது எந்த எந்த இடத்திலே விளக்குகள் மாற்றப்பட்டன என்று அதிலே எழுதுவார், எழுதி நகராட்சி மன்றத் தலைவருடைய அல்லது ஊராட்சி மன்றத் தலைவருடைய கையொப்பமிட்டு அந்தக் கார்டு மின்வாரிய செக்ஷன் ஆபீஸருக்கு சென்றுவிடும். இப்படி பழுதடைந்த பல்புகளை குழல் விளக்குகளை மாற்றும் மின்வாரியத் தொழிலாளர்கள் ஒரு பல்புக்கு 50 காசு வீதமும் ஒரு குழல் விளக்குக்கு 1 ரூபாய் வீதமும் பெற தகுதியுடையவராவார்கள். சாதாரண பல்புக்கு 50 காசும், டியூப் லைட்டுக்கு ஒரு ரூபாய் வீதமும் கிடைக்கும். ஆகவே பல்புகளை மாற்றுகிறபோது பியூஸ் ஆப் கால் என்ற முறையிலே வசூலிக்கப்படுகிற கட்டணம் அதை மாற்றச் செல்கின்ற தொழிலகளர்களுக்கே கிடைக்கச் செய்ய அரசு உத்தரவுப் பிறப்பித்திருக்கிறது. மேற்கொண்டு முறைப்படி ஒவ்வொரு மாதமும் 15ஆம் தேதி மின் வாரியத் தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய தொகையை சம்பந்தப்பட்ட மின்வாரியப் பிரிவு அலுவலர் தங்களிடம் உள்ள முன்பணத்திலிருந்து கொடுப்பார்கள். ஆகவே இந்த அடிப்படையிலே மின்வாரியத் தொழிலாளர்களுக்கு ஊக்கம் தருகின்ற வகையில் அந்தப் பணி அமைந்திருப்பதால் இனிமேல் நகராட்சி மன்றங்களானாலும் சரி, ஊராட்சி மன்றங்களானாலும் சரி பல்புகளை வாங்கி வைத்துக்கொண்டு மின்வாரியத் தொழிலாளர்களை அழைத்து செல்கிறபோது அவர்களுக்கும் ஊக்கமளிக்கும் என்ற காரணத்தாலே நிச்சயமாக வருங்காலத்திலே இப்படிப்பட்ட குறைகள் ஏற்படாது என்று உறுதிகூறி நான் அமைகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மகிழ்ச்சி தரத்தக்க வகையில் பல நல்ல ஆக்கப்பூர்வமான யோசனைகளைத் திடமான வகையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எனக்கு இருக்கிற ஒரே ஒரு சந்தேகம், மின்சார வாரியத்திலே ஊழியர்கள் பல்புகளை, டியூப் லைட்டுகளை மாற்றும்போது அவர்களுக்கு 50 காசும், 1 ரூபாயும் தரப்படும் என்று சொல்லப்படுகிறது. வழங்குகிற அந்த சம்பளம் அவர்களுக்கு அதிகமாக ஊக்கத்தை அளிக்கும் என்ற வகையிலே செய்யப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது, தமிழ்நாட்டிலே மின்சாரத் துறையிலே பயின்று அத்தாட்சி பெற்றவர்கள் பலபேர்கள், வேலையில்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்

[திரு. எஸ். ஆர். இராதா] [1979 மார்ச் 14

பட்டவர்களையெல்லாம் வைத்துக்கொண்டு இந்த வேலைகளை மிகவும் விரைவாகவும் சீக்கிரமாகவும் செய்யலாம். மின்சார வாரியத்தில் பணிபுரிகின்ற தொழிலாளர்களை வைத்தே இதைச் செய்வோமானால் இந்த வேலைக்குத்தான் அவர்களுக்கு நேரம் சரியாக இருக்கும், வேறு வேலைகளைப் பார்க்க முடியாது. ஆகவே மின்சாரத் துறையிலே பயிற்சிபெற்று அத்தாட்சி பெற்றிருக்கிற, லைன்மென் ஹெல்ப்பர்களாக எல்லாம் பயிற்சி பெற்றிருக்கிறவர்களை, இந்தப் பணியிலே ஈடுபடுத்துவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்; துணைல தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறும் போது அந்த பல்புகளை மாற்றும்பொழுது மின்சார வாரியத்திலே வேலை பார்க்கிறவர்கள் செய்கிறபோது அவர்களுக்கு 30 காசு என்றும் டியூப் லைட் மாற்றுவது என்றால் 1 ரூபாய் என்றும் கொடுக்கப் போவதாகச் சொன்னார்கள். அது எந்தப் பணத்திலிருந்து கொடுக்கப்படும்? அந்தப் பஞ்சாயத்து போர்டு பணத்திலிருந்து கொடுக்கப்படுமா அல்லது பஞ்சாயத்து யூனியன் பணத்திலிருந்து கொடுக்கப்படுமா என்பதை விளக்கமாக அறிய விரும்புகிறேன். எலக்ட்ரிசிடி போர்டிலே வேலைபார்க்கிறவர்களை பஞ்சாயத்து யூனியனுக்கு லோன் கொடுப்பது என்பதைப்போல் ஒரு 5, 6 பேர்களை அங்கே கொடுத்தால் எல்லாம் பஞ்சாயத்து போர்டு கன்ட்ரோலிலே வந்துவிடும். பஞ்சாயத்து யூனியன் கன்ட்ரோலில் கொடுத்தால், அப்பொழுது பஞ்சாயத்து யூனியன் நேராக பராமரிக்க சுலபமாக இருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. த. புஷ்பராஜு: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இன்றைக்கு கிராமப்புறங்களில் இருக்கும் தெரு விளக்குகளை சரியாகப் பராமரிக்க, ஊராட்சி ஒன்றிய அளவிலே பிற துறைகளிலே இருப்பதைப்போல் ஒரு உதவி மின் பொறியாளரை அதாவது ஏ.ஈ.-யை நியமிக்க அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், பத்து கிராம பஞ்சாயத்துக்களுக்கு ஒரு லயன்மேன் என்று போட்டால் நிச்சயமாகப் பராமரிக்க முடியும். ஒவ்வொரு கிராம பஞ்சாயத்தும் மாதம் 25 ரூபாய் என்று கொடுத்தால்கூட அவருடைய சம்பளத்தை ஈடு கட்ட முடியும். அந்த முறையில் அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. கு. வடிவேல்: பேரவைத் துணைத்தலைவரவர்களே, மின்சார விளக்குகளைப் பஞ்சாயத்திலே பொறுப்பேற்றுக் கொண்டு அந்த பல்புகளை மாற்றுவதில் சிக்கல்கள் ஏற்படுகின்றன. பஞ்சாயத்தில் பல்புகளை வாங்கி வைத்து விட்டால் மின்சாரத் துறையிலே உடனடியாக மாற்றுவது கிடையாது. ஊரிலே

1979 மார்ச் 14] [திரு. கு. வடிவேல்]

சொல்வார்கள். ''பாப்பாத்தி அம்மாள், மாடு வந்தால் கட்டினால் கட்டு, கட்டாவிட்டால் போ'' என்று சொல்வார்கள். அதைப்போல, இவர்கள் பல்புகளை சரியாக மாற்றுவதில்லை, மாற்றிவிட்டுப் போனாலும் அடுத்த நாளே பீசாகி விடுகிறது. இப்படிக் கிராமங்களில் மின்சார விளக்குகள் சரியாகஎரிவ தில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் கிராமங்களுக்குச் சென்றால் பெட்ரோமாக்ஸ் விளக்கைத் தூக்கிக்கொண்டு செல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலைகளைப் போக்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. சௌ. வே. வரதராஜன் ; தலைவரவர்களே. நமது மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவித்ததைப்போல் பல்பை மாட்டுவதற்கு போனஸ் கொடுத்தாலும்கூட, விளக்குகள் எரியாமல் இருப்பதற்கு முக்கியமான காரணம், ஒயர்கள் பழுதடைவதும் காரணமாகும். இந்த நிலையில் அவர்கள் பல்பை மாட்டுவதற்குப் போனஸ் கொடுத்தாலும்கூட, அவர்கள் பல்பை மாட்டிவிட்டுச் சென்றுவிட்டால் அடுத்த நாளே பல்ப் பீசாகி விடும் சூழ்நிலைகள் சேலத்திலே இருந்து வருகிறது, எனவே, குறிப்பிட்ட நாட்களுக்கு எரியக்கூடிய சூழ்நிலையில் ரிப்பேர் செய்தால்தான் சலுகை உண்டு என்று சொல்லி, அந்த மாதிரி சூழ்நிலையை ஏற்படுத்தி, அதுவாறு செயல்பட வேண்டுமென்று மின்சாரத் ஊழியர்களுக்கு அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ந. தனசேகரன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஊக்க போனஸ் என்ற அடிப்படையில் ஒரு தொழிலாளிக்கு எட்டு அணா. ஒரு ரூபாய் கொடுப்பதாகச் சொன்னார்கள். அதை நான் பாராட்டுகிறேன், நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் அதற்கு லிமிடேஷன் ஏதாவது வைத்திருக்கிறார்களா? ஒரு நகராட்சிக்கு இத்தனை பல்புகள்தான் என்று வைத்தால் இந்தத் திட்டம் சரியாக நிறைவேற்றப்படாத சூழ்நிலை ஏற்படும். எனவே, லிமிடேஷன் இல்லாத அளவில் எத்தனை பல்புகளை மாற்றினாலும் கொடுக்கப்படும் என்ற முறையில் அமலாக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். அத்துடன், அங்கே மாற்றப்படும் பல்புகள் முறையானதாக, செம்மை யானதாக இருக்கிறதா அல்லது பீசான பல்புகள் மாற்றப் படுகிறதா என்பதை அறிந்துகொள்ள ஏதேனும் ஆய்வுகள் வைத்திருக்கிறார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

திரு. பி. கிருஷ்ணன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, நமது மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறினார்கள், ஒரு பல்பை மாட்டினால் 50 பைசா என்றும், ஒரு குழல் விளக்கை மாட்டி எரியவைத்தால் ஒரு ரூபாய் என்றும் தருவதாக — உற்சாகப் படுத்த போனசாகத் தருவதாக — அறிவித்தார்கள். அவ்வாறு மாட்டிவிட்டுப் போனப் பிறகு அந்த லைட் எரிவது நின்று

விட்டால் அல்லது ஒயரில் காற்றடித்து அந்த பல்புகள் எரியவில்லை என்றால் மீண்டும் அப்படி வேலை செய்தாலும்கூட மீண்டும் பணம் கொடுப்பது யார் என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

திரு. க. இரா. சின்னராசு: பேரவைத் துணைத் தலைவரவர்களே, கிராமப்புறங்களில் மாட்டப்படும் இந்தப் பல்புகள் எரிவதற்கான சார்ட்டர்களெல்லாம் அலுமினியத்தால் தயாரிக்கப்படுவதால் உடனடியாக அந்த பல்புகள் பீசாகி விடுகின்றன. அவைகளைக் காப்பரிலே தயாரித்தால் நல்ல முறையில் எரியும் என்று மின்சாரப் பொறியாளர்கள் கூறுகிறார்கள். அதன்படி காப்பரிலே தயாரிக்கப்படுகின்ற பல்புகளை, தரமான பல்புகளைத் தயாரித்துக் கொடுக்கின்ற தொழிற்சாலைகளிலேயிருந்து வாங்கி மாட்டுவதற்கு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1.10]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, மின் வாரியத் தொழிலாளர்கள் அல்லாமல் மின் தொழிலில் பயிற்சிப் பெற்ற மற்றவர்களை இந்த வேலைக்குப் பயன்படுத்தலாமா என்று மாண்புமிகு இராதா அவர்கள் கேட்டார்கள். அதைப்பற்றியும் நாங்கள் பரிசீலிக்காமல் இல்லை. அதையும் நாங்கள் பரிசீலித்தோம். அதிலே என்ன சிக்கல் ஏற்படுகிறது என்றால், ஒயர்மேன் லைசன்ஸ் பெற்றவர்களோ, அல்லது கான்ட்ராக்டர் லைசன்ஸ் பெற்றவர்களோ இந்த வேலையைச் செய்ய வேண்டுமென்றால், அதற்காக அந்த மின்சாரக் கம்பிகளில் மின்சாரத்தைத் துண்டிப்பதற்காக மறுபடியும் மின் வாரியத் தொழிலாளர்களிடத்திலே வர வேண்டி இருக்கிறது. ஆகவே, மின் வாரியத் தொழிலாளர்கள் போய் லைன் கிளியர் கொடுத்தால்தான் மற்றவர்கள் கூட அந்தக் கம்பத்திலே ஏறி வேலை செய்யலாம். இல்லாவிட்டால், அந்தக் கம்பத்தில் ஒரு லைன் தெரு மின்சார விளக்குகளுக்காக இருக்கும், இன்னொன்று வீட்டுக்காக இருக்கும், இல்லையென்றால் ரைஸ் மில்லுக்காக இருக்கும். அதிலே போய் கை வைப்பார்களானால் விபத்துக்கள் ஏற்படும். மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்வதைப் போல் ஒரு தெரு விளக்குக்காக ஏறும்போது, வெறும் விளக்குக்காக மட்டுமல்ல, நாளடைவில் பழுதடைந்திருக்கும் கம்பிகள். ஒன்றோடொன்று உராய்ந்து கெட்டுப் போயிருக்கும். ஆகையினாலே, அந்தப் பகுதியிலே இருக்கிற, அவைகளைத் தெரிந்தவர்களாக இருக்கக்கூடிய மின்சார வாரிய ஊழியர்கள்தான் செய்யவேண்டுமென்ற நிலை ஏற்படுகிறது. மின தொழில் திறமையிலே சான்றிதழ் பெற்றவர்கள் இருந்தால்கூட, அவர்களைப் பயன்படுத்துவதே ஆபத்தானது, தேவையற்றது என்று அரசு கருதுகிறது.

1979 மார்ச் 14] [திரு, ச. இராமச்சந்திரன்]

அதற்காக நிதி யார் தருவது என்று மாண்புமிகு தொண்டைமான் அவர்கள் கேட்டார்கள். இது ஊக்க ஊதியம் என்ற அடிப்படையிலே இல்லை, Fuse of call charges என்ற வகையிலே இருக்கிறது. தெரு விளக்குகளைப் பொறுத்தவரையில் அதைப் பராமரிக்க வேண்டியது உள்ளாட்சி நிறுவனம். அங்கே ஏற்படுகிற தீய்ந்து போன பல்புகளைச் சரிசெய்ய மின் வாரியத் தொழிலாளர்களை உள்ளாட்சி நிறுவனம் கூப்பிடுகிறது. மின் வாரியத் தொழிலாளர்கள் அதைச் சரி செய்கிறார்கள். ஆகவே, அந்த Fuse of call charges செலுத்த வேண்டியது உள்ளாட்சி மன்றம்தான் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். இதற்கு ஒரு எல்லை இருக்கிறதா? இந்த போனஸ் நிறைய ஆகிவிட்டால் உள்ளாட்சி மன்றங்கள் என்ன செய்யமுடியும் என்ற கருத்தையும் இங்கே குறிப்பிட்டார்கள். நான் மீண்டும் தெரிவிப்பது உள்ளாட்சி மன்றங்களிலே சாதாரண விளக்குகளை ஆண்டுக்கு 3 தடவைதான் மாற்றலாம். குழல் விளக்குகளை ஒரு தடவைதான் மாற்றலாம். தொழில் நுட்ப ரீதியில் ஒரு சாதாரண விளக்கு 4 மாதம் வரையில வரும். ஆனாலும், போட்ட பல்பு மறுநாளே தீய்ந்துபோய் விடுகிறதே என்ற குறையும் சொல்லப்பட்டது. அப்படி தீய்ந்து போவதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று அந்த பல்பு நல்ல பல்பாக இல்லாமல் இருக்கலாம். அப்படியானால் அந்த பல்பை உற்பத்தி செய்கின்றவர்கள் குறைபாடு அது. இன்னொன்று அங்கே உள்ள வோல்டேஜ் ஏற்ற-இறக்கம் அதிகமாக இருக்கிற காரணத்தாலே அந்த பல்பு தீய்ந்து விடுவது உண்டு. அது போன்ற சந்தர்ப்பங்களில் மின் வாரியத்தைச் சேர்ந்த செக்ஷன் ஆ.பீசர் ஒரு பல்பை மாற்றி விட்டுவிடுவாரானால்-ஒரு ரீசனபிள் பீரியட், மறுநாளே ஃபியூஸ் போய்விட்டால், Fuse of call charges வாங்காமல் போடலாம். ஓரளவு குறைந்த கால அளவுக்கு அது எரிய வேண்டுமென்பதை அவர் பார்த்துக் கொள்வார். மின்சார வாரியத்திலே இருந்து தொழிலாளர்களை நகராட்சி மன்றங்களுக்கோ, உள்ளாட்சி மன்றங்களுக்கோ அனுப்பலாமா என்று யோசித்தோம்-டெப்புடேஷனில் அனுப்புவது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் பல்வேறு ஊர்கள் இருக்கின்றன. 100, 150 கிராமங்கள் கூட இருக்கின்றன. அதற்குப் போதுமான அளவு அனுப்பினால் செலவு ஊராட்சி மன்றத்திற்கும் அதிகமாகும், நீதிமன்றத்திற்கும் அதிகமாகும். ஆகவே, இவ்வளவு சம்பளம் கொடுத்து அவர்களை வைத்துக்கொள்ள வேண்டுமென்றால், 7 பேர், 8 பேர் போதுமானதாக இல்லை. இப்பொழுது மின் வாரியத்திலே உள்ள பணியாளர் தெரு விளக்கையும் பார்த்துக் கொள்ளலாம், பம்ப் செட்டையும் பார்த்துக் கொள்ளலாம், வீட்டு சர்வீசையும் பார்த்துக்கொள்ளலாம்.

ஆகவே, எல்லா வேலையையும் பார்ப்பதாலே பொருளாதார ரீதியிலே சாத்தியமாகிறது. ஆனால், ஒரு ஊராட்சியிலே இன்ஜினியர் வைத்துக்கொள்வதோ, மின்சாரத்

தொழிலாளர்களை வைத்துக்கொள்வதோ—பினான்ஷியல் ரீசன்ஸ் நிதிநிலை அடிப்படையிலே இது அவர்களுக்குச் செலவைக் குறைக்காது. செலவை அதிகப்படுத்தி விடும். அதனாலேதான் அந்தக் கருத்து ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதையும் தெரிவித்து, இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவோம். நடைமுறைப்படுத்துவதிலே இருந்து நமக்கு என்னென்ன அனுபவங்கள் ஏற்படுகிறதோ அந்த அனுபவத்தை ஒட்டி மாற்ற வேண்டி வந்தாலோ அல்லது வேறு காரியம் செய்ய வேண்டி வந்தாலோ நிச்சயமாக நாம் செய்யலாம்.

* மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திருத்த சட்ட முன் வடிவின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் பல நல்ல பயன் உள்ள கருத்துக்களை வழங்கி இருக்கிறார்கள். மிக முக்கியமான தெருவிளக்குகளுக்கு மின் தொடர்பு சம்பந்தமாக எந்த அளவுக்கு அரசு அக்கரை காட்டி வருகிறது என்பதை மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் இங்கே விளக்கம் தந்திருக்கிறார்கள். நம்முடைய உறுப்பினர் ராஜ்குமார் விஜயரகுநாத தொண்டமான் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதைப்போல், தனி அதிகாரிகள் பொறுப்பை ஏற்று நிர்வகித்து வருவது என்பது என்னதான் இருந்தாலும் மக்கள் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகள் பொறுப்பேற்று நடத்துவதைப்போல சிறப்பாக இருக்காது என்பதை இந்த அரசு தெளிவாக அறியும். மின்சார விளக்கு இல்லாத போது மெழுகு வர்த்தியை ஏற்றி வைப்பது போல தேர்தலுக்கான ஆயத்தங்களை செய்கின்றவரையில் தனி அதிகாரிகளுடைய பணி நீடிக்க வேண்டியது தான்.

நான் முன்பே ஜூன் மாதத்தில் ஊராட்சி ஒன்றியங்கள் மன்றங்களுக்கான தேர்தல்கள் நடத்தப்படும் என்று அறிவித்திருக்கிறேன். ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சி மன்றங்கள் எல்லாவற்றிற்கும் சேர்த்து 2, 5 தேதிகளில் ஜூன் மாதத்தில் தேர்தலை நடத்தி விடலாம் என்கிற வகையில் நீடிப்பு செய்திருக்கிறோம். நகராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், ஆகியவற்றிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் வைத்துதான் நடத்தப்படவேண்டும் என்பதை அரசு நன்றாக அறிந்துகொண்டிருக்கிறது. அதற்காகத்தான், எவ்வளவு பொருள் செலவானாலும் கவலை இல்லை என்று புதிதாக வாக்காளர் பட்டியல் தயாரிக்க முற்பட்டு அது கிட்டத்தட்ட முடிவடையும் கட்டத்தில் இருக்கிறது. அதனால் அரசாங்கத்திற்கு தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்ற விருப்பம் இருப்பதை அறிந்துக் கொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர் கந்தசாமி அவர்கள்கூட அதை தெரிந்துக் கொண்டு எடுத்துச் சொன்னார்கள்.

உசிலம்பட்டி ஊராட்சியைப் பொருத்தவரையில் அதை நகராட்சியாக்க வேண்டும் என்றும் ஒரு கருத்து தெரிவித்திருக்கிறார்கள். அதை நகராட்சி ஆக்கும் விஷயத்தில் ஒரு சிக்கல் இருக்கிறது. உசிலம்பட்டியில் உள்ள சந்தை, அந்த ஊராட்சி

ஒன்றியத்திற்கு நல்ல வருவாயை தேடிக் கொடுக்கிறது. இதை நகராட்சியாக்கிவிட்டால் அந்த வருவாய் முழுவதும் நகராட்சிக்கு போய்விடும் அதனால் ஒன்றியம் நிதி பற்றாக்குறையால் தவிக்க நேரிடும் நிலையை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இதனை ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டும் என்பதையும் சொல்லிக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : பேரவை முன்னுள்ள கேள்வி—''1979-ம் ஆண்டு சென்னை நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 4/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன் வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு-2

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : பேரவை முன்னுள்ள கேள்வி— ''பிரிவு 2, இச்சட்ட முன் வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்.''

<u>மாண்புமிகு திரு. கா. காளிமுத்து</u> : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன் :—

In clause 2,

(a) in sub-clause (i), for the words "two years and nine months', substitute the words ''three years and three months

(b) in sub-clause (ii), for the words ''two years and nine months'' substitute the words ''three years and three months''

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 2, திருத்தப் பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

[1979 மார்ச் 14

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே ''தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்டமுன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 4/1979) திருத்தப் பெற்றபடி சட்டமாக நிறைவேற்றப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்டமுன் வடிவு திருத்தப்பெற்றபடி சட்டமாக நிறைவேற்றப்பெற்றது.

[பிற்பகல் 1.20]

(ஊ) கோயம்புத்தூர் நகராட்சி மன்ற (தனி அலுவலர் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் மு. அம்பிகாபதி, கு. ரமணி, ஆர். கிருஷ்ணன், ரா. வெங்கிடு சாமி என்கிற வெங்கிடு ஆகியோர் இருக்கையில் இல்லாததால் அவர்களது தீர்மானம் திரும்பப் பெற்றதாக கருதப் பெறுகின்றது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே 1979 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்ற (தனி அலுவலர் நியமனம்) திருத்தச் சட்டமுன் வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 5/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்'' என்று கோருகிறேன்.

* திரு. க. மருதாசலம் ; சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் நகராட்சி மன்றத்தின் தனி அதிகாரி நியமனத்தின் காலக்கெடுவை நீட்டிக்கும் சட்டத்தை வரவேற்று ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். கோயம்புத்தூர் நகராட்சி மன்றத்தில் இருக்கிற தனி அதிகாரி அவர்களின் காலத்தை நீடிக்கின்ற அதே நேரத்தில், அங்கே ஒரு சில வேலைகள் நடைபெறாமல் இருந்தாலும்கூட நம்முடைய ஆட்சி வந்தபின்னாலே ஆலோசனைக் குழு ஒன்று நியமித்து அந்தக் குழுவை நியமித்ததற்குப் பிறகு அங்கே பல்வேறு வேலைகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன என்ற உண்மையை இந்த நேரத்தில் சொல்லாமல் இருக்க முடியாது. ஆனால் அதே நேரத்தில் அந்த ஆலோசனைக் குழுவிற்கு ஒரு சில அதிகாரிகள் இல்லாமல் இருப்பதும் இந்த நேரத்தில் கவனத்தில் கொள்ளவேண்டும் என்று தெரிவிக்கிறேன். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த நகராட்சி செயல்படுகின்றபோது அப்பாயின்ட்மென்ட் கமிட்டி இருக்கும். ஆனால் அந்தக் கமிட்டியில் இன்றைக்கு ஆலோசனைக்குழுவில் இருக்கின்ற

*1979, பிப்ரவரி 15 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு, சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

யாரும் உறுப்பினர்களாக இல்லை. அந்த நகராட்சி அதிகாரிகள் தான் அதில் செயல்படுகின்றார்கள். அந்த அப்பாயின்ட்மென்ட் கமிட்டியில் ஆலோசனைக்குழுவில் இருக்கின்ற இரண்டொருவரை நியமிக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே பேசியவர்கள் நகராட்சி தேர்தல்களையும், ஊராட்சித் தேர்தல்களையும், நடத்துவதற்கு இந்த அரசு பயப்படுகிறது என்று சொன்னால், கேரள மாநிலத்தில் கூட தேர்தல் 10 ஆண்டுகளுக்கு மேல் நடைபெறவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நகராட்சி மசோதா முடிந்து விட்டது. இப்போது கோயம்புத்தூர் நகராட்சி மன்றத்தைப் பற்றி மட்டும் சொல்லிவிட்டு முடியுங்கள்.

திரு. க. மருதாசலம் : கோவை மாநகராட்சி மன்றத்திலே தனி அதிகாரியின் பதவியை அதிக நாள் நீட்டிக்காமல், காலதாமதம் இல்லாமல் தேர்தல் நடத்தவேண்டும் என்று கேட்டு, முடித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. க. சு. தண்டபாணி : மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் நகராட்சி தனி அலுவலர் நியமனத்தை இன்னும் 6 மாதகாலம் நீட்டிக்க வேண்டும் என்று கொண்டு வரப்பட்டுள்ள இந்தச் சட்டமுன்வடிவை எதிர்த்து ஒரு சில மாண்புமிகு உறுப்பினர்கள் தீர்மானம் கொடுத்து இருப்பது உள்ளபடியே வேதனைக்குரிய ஒன்றாகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் தண்டபாணி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். திருத்தங்கள் முன்மொழியப்படவில்லை. ஆகவே, அதைப்பற்றிப் பேசவேண்டாம்.

திரு. ரா. க. சு. தண்டபாணி : இங்கே கொண்டு வரப்பட்டுள்ள மசோதாவை முழுமனதாக ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்கிறேன். கோவை மாநகரத்தை ஒட்டிய பகுதிகளான பெருந்துரை, சென்னிமலை போன்ற சிறிய நகரங்களையும் நகராட்சியாக மாற்றவேண்டும் என்ற திட்டம் இருக்கிறது என்று அறிகிறேன். அந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமானால், பெருந்துறையில் இருக்கும் டி. பி. சானடோரியம், முனிசிபாலிடியின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு, அந்த முழுகிக்கொண்டு இருக்கும் ஆஸ்பிடலை காப்பாற்றமுடியும் என்று தெரிவித்து, அதை வற்புறுத்தி, இந்த சட்டமுன்வடிவை ஆதரிக்கிறேன் என்று சொல்லி அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் நகராட்சி மாநகராட்சியாக்கப்பட்டு, அதற்கு தேர்தல் நடத்தவேண்டும் என்று அரசு கருதுகிறது. அந்த வகையில் அந்த நகர மன்றத்திற்கு ஏற்கனவே உள்ள நகரப்பகுதிகளைத் தவிர பிற சுற்றுப்புற பகுதிகளும் சேர்க்கப்பட்டு, அது மாநகராட்சியின் தகுதியைப் பெற்று தேர்தல் நடத்தவேண்டும் என்ற முறையில் குடியரசுத் தலைவரின் கையெழுத்திற்காக அனுப்பப்பட இருக்கிறது, ஆகவே, கோவை நகராட்சிக்கு மாநகராட்சி என்ற சிறப்போடு தேர்தல் நடத்த அரசு ஈடுபட்டு இருக்கிறது என்று தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர் தண்டபாணி அவர்கள் தெரிவித்த கோரிக்கையை அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்து, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :—

''1979 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்ற (தனி அலுவலர் நியமனம்) திருத்தச் சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 5/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன் வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு-2

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : பிரிவு 2, இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: துணைத்தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட சட்டத்திருத்தத்தை முன்மொழிகிறேன் :

'In clause 2, for the words, ''three years and nine months'', substitute the words ''four years and three months.''

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு-2 திருத்தப் பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு-3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு-1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

1979 மார்ச் 14]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, "1979 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்ற (தனி அலுவலர் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 5/1979) திருத்தப் பெற்றபடி சட்டமாக நிறைவேற்றப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திருத்தப்பெற்றபடி சட்டமாக நிறைவேற்றப்பெற்றது.

(எ) சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, 1979 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்ற பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : துணைத் தலைவரவர்களே, இந்த 'ஆப்ஜக்ட்ஸ் அண்டு ரீசன்ஸ்' என்பதில் இரண்டாவது காலத்திலே "As soon as delimitation work is completed, the draft electoral rolls will have to be published for receipt of objections and suggestions and after their disposal, the rolls will have to be finally published It will take more than six months to complete all these items of work" என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த வேலைகள் முடிவடைய 6 மாத காலத்திற்கு மேலாகும் என்று சொல்லப் பட்டிருப்பதால் 6 மாத காலத்திற்குள்ளாக நீங்கள் தேர்தலை நடத்துவீர்களா என்ற அச்சம் ஏற்படுகிறது. இந்த அச்சத்தைப் போக்குகின்ற வகையில் விரைவிலே தேர்தலை நடத்த வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தேனாம்பேட்டை பகுதியில் வீட்டுமனை ஒதுக்கப்பட்டு, அதை இன்ஸ்டால்மென்ட் பேசில் தந்திருக் கிறார்கள். 12 வருஷத்திற்கு மேற்பட்டு பணத்தைக் கட்டி யிருந்தாலும் அவர்களுக்கு அந்த இடம் இன்னும் சொந்தமாக்கப் படவில்லை என்ற குறையைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதை நிவர்த்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஸ்லம் ஏரியா என்று சொல்லக்கூடிய இடங் களில் குடிதண்ணீர் வசதி இல்லை; லைட் வசதி இல்லை; சானிட்டரி பிராப்ளம் எல்லாம் இருக்கிறது என்று சொல் கிறார்கள். அதை எல்லாம் சீர்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

@ 1979, பிப்ரவரி 15 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

கூவம் ஆற்றுக்கு இரண்டு பக்கத்திலும் இருக்கிற காலி இடத்தை மாநகராட்சி பயன்படுத்திக் கொள்வதன் மூலமும், லீசுக்கு அந்த இடத்தை மற்றவர்களுக்குக் கொடுப்பதன் மூலமும் மாநகராட்சிக்கு அதிக வருமானம் வர வாய்ப்பு இருக்கிறது. அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக கவுன்சிலர்கள் இல்லை என்ற காரணத்தால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.எல்.ஏ.க்கள் மக்கள் பிரதிநிதிகள் என்ற முறையில் குறைகளை எடுத்துச் சொன்னாலும் கூட அங்கே இருக்கின்ற அதிகாரிகள் அதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொல்லிவிடுகிறார்கள். அதிகாரிகளுடைய இந்தப் போக்கை மாற்றி, எம்.எல்.ஏ.க்களும் மக்கள் பிரதிநிதிகளே என்ற அடிப்படையில் அவர்கள் சொல்லுகின்ற குறைபாடுகளை நீக்குவதற்கு ஏற்ற முறையில் அதிகாரிகள் செயலாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்தத் திருத்தச் சட்டத்தை வரவேற்று அமர்கிறேன்.

*மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மார்க்கபந்து அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களை நிச்சயமாக பரிசீலனை செய்கிறோம். சென்னை மாநகராட்சி 150 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, வரையறை செய்யும் வேலை முடிவடையும் நிலையில் உள்ளது. இப்போது வாக்காளர் பட்டியலை முழுமையாகத் தயாரிக்கின்ற பணி நடக்கிறது. அந்தப் பணி முடிந்தவுடன் தேர்தலை நடத்துவதில் கருத்து வேறுபாடு இல்லை.

இங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் இல்லை என்றாலும் சென்னை மாநகராட்சிப் பகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்லுகின்ற கருத்துக்களைக் கேட்க வேண்டுமென்று சொன்னார்கள். மாநகராட்சி அதிகாரிகள் நிச்சயமாக சட்டமன்ற உறுப்பினர்களுடைய கருத்துக்களைப் புறக்கணிக்க மாட்டார்கள். மாநகராட்சியினுடைய அதிகாரிகள் ஆனாலும் சரி அல்லது இங்கே இருக்கிற உள்ளாட்சித்துறை அமைச்சர் என்ற முறையில் நானாக இருந்தாலும் சரி, அவர்கள் தெரிவிக்கின்ற பல்வேறு குறைபாடுகளையும் அவ்வப்போது நீக்குவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, அந்த வகையில் அரசு அலட்சியம் காட்டவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் மக்களுடைய குறைபாடுகளை எடுத்துச் சொல்லும்போது அதை நீக்குவது ஒரு நல்ல அரசினுடைய கடமை என்பதை இந்த அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது.

1979 மார்ச் 14]

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் அனுமதியோடு பேரவையின் நேரத்தை இன்னும் சில நிமிடங்கள் நீட்டிக்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் துணைத் தலைவரவர்களே, வாக்காளர் பட்டியல் பூரணமாகத் தயாரிக்கப் பட்ட பிறகு சென்னை மாநகராட்சிக்கான தேர்தல் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் அதிகமாகப் பேசப்போவதில்லை. சென்னைக் கார்ப்பரேஷன் தேர்தலைப் பொறுத்தவரை கொஞ்சம் தாமதமாக நடத்தினால் கூடப் பரவாயில்லை. ஏனென்றால் இங்கே சென்னையைச் சேர்ந்த பல சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அமைச்சர்களும் சென்னையிலேயே இருக்கிறார்கள். ஆகவே பொதுமக்களுடைய குறைகளைக் கவனித்துக் கொள்வதற்கு வாய்ப்பிருக்கிறது. அடுத்து தேர்தல் என்று பார்க்கின்றபோது நான் ஒன்றைச் சொல்லவிரும்புகிறேன். அதாவது தேர்ந்தெடுக்கப்பட்டு கவுன்சிலர்களாக வருபவர்களுக்கு மாதாமாதம் சம்பளம் கொடுக்கவேண்டும். அவ்வாறு அவர்களுக்கு சம்பளம் கொடுக்கப்படாததன் காரணமாகத்தான் ஊழல் ஏற்படுகிறது. சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுப்பது போல் அவர்களுக்கும் சம்பளம் கொடுப்பதற்கு ஒரு சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும். அப்போதுதான் அவர்களைக் கண்ட்ரோல் பண்ண முடியும். அவர்களுக்கு 500 ரூபாயாவது சம்பளம் கொடுக்கப்பட வேண்டும். 150 உறுப்பினர்களுக்கு மாதம் 500 ரூபாய் சம்பளம் கொடுப்பதில் ஒன்றும் பெரிய இழப்பு ஏற்பட்டுவிடாது. ஆகவே அதைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இங்கே பார்லிமென்டரி செக்கரட்டரியாக இருக்கின்ற மாண்புமிகு திரு. அய்சரி வேலன் அவர்களின் தொகுதியிலே நேதாஜி நகர் என்ற ஒரு பகுதி இருக்கின்றது. அங்கே ஆயிரக்கணக்கான குடும்பங்கள் போதிய வசதிகள் இன்றி வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியில் என்னுடைய உறவினர் ஒருவர் இருக்கிறார். அவருடைய வீட்டுற்கு நான் அடிக்கடி சென்று வருவது உண்டு. ஆகவே அந்தப் பகுதிப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். அங்கே தெரு விளக்குகளே கிடையாது. ரோடு வசதியும் சரியாகக் கிடையாது. கிராமங்களில் கூட விளக்கு எரியாவிட்டாலும் தூண்களாவது இருக்கும். இந்தப் பகுதியிலே விளக்குத் தூண்கள் கூட கிடையாது. சென்னை நகரிலேயே இப்படி ஒரு பகுதி விளக்குகளே இல்லாத நிலையில் இருக்கின்றது. இதுகுறித்து நம்முடைய மாண்புமிகு அமைச்சர் செல்வி பி.டி.சரஸ்வதி அவர்களுக்குக் கூட கோரிக்கை

சத்யமேவ ஜயதே / வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மனு கொடுத்தேன். அந்த மனு கொடுக்கப்பட்டு இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன. அந்தப் பகுதியிலே விளக்கு எரிவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டதாகத் தெரியவில்லை.

அடுத்து சென்னையைப் பொறுத்தவரையில் அண்ணா சாலையும், காமராஜர் சாலையும் தான் சாலைகளாகக் காட்சி அளிக்கின்றன. மற்ற சாலைகள் எல்லாம் மிக மோசமான நிலையிலே இருக்கின்றன. ஆகவே நம்முடைய அரசு தனிக் கவனம் செலுத்தி இந்த சென்னை நகரத்தைப் பொறுத்தவரை இருக்கின்ற சாலைகளையெல்லாம் மிக நல்ல முறையில் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். 'சிவிலைசேஷன் வாக்ஸ் ஆன் தி ரோடு' என்று சொல்வார்கள். இந்த சென்னை நகருக்கு வெளிநாடுகளில் இருந்தெல்லாம் நிறைய பேர் வருகிறார்கள். ஆகவே நம்முடைய நாட்டு மக்களுக்கு நாட்டிற்கும் மதிப்பு, மரியாதையை ஏற்படுத்தும் வகையிலே சென்னை நகரை அழகாக அமைக்கவேண்டு என்றுக் கேட்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பேரவைத் துணைத் தலைவரவாகளே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்ன சீரிய கருத்தை நிச்சயமாக அரசு பரிசீலிக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி— "1979 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண்: 6/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 & 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, "1979 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1979) சட்டமாக நிறைவேற்றப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு சட்டமாக நிறைவேற்றப்பெற்றது.

1979 மார்ச் 14]

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> பேரவையின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக்காலை 9·00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1·36 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

<u>(8) பேரவையின் முன் வைக்கப் பெற்ற ஏடுகள்</u>

<u>எதுவுமில்லை.</u>

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு I

[34-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 397-க்கான விடையைக் காண்க]

விவர அறிக்கை.

இந்த நாட்டில் மலேரியா பிரச்சினையைக் கட்டுப்படுத்துவதற்கு மாநிலங்களில் தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டம் நிறைவேற்றத்துக்கு இந்திய அரசு திருத்தப்பட்ட செயல் திட்டத்தை வகுத்துள்ளது. மலேரியா நோயை ஆரம்ப நிலையில் கண்டறிந்து, எல்லா நோயாளிகளுக்கும் தவறாமல் முறைப்படி சிகிச்சை அளித்தல் மற்றும் மலேரியா பரவுதலைக் குறைப்பதற்காக எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல் மூலம் மலேரியாவினால் ஏற்படும் இறப்பு மற்றும் நலிவைக்குறைத்தல் அல்லது ஒழித்தல் திருத்தப்பட்ட செயல்திட்டத்தின் குறிக்கோள். அதன்படி இந்த மாநிலத்தில் மலேரியா திட்டம் 1-4-77-லிருந்து திருத்தி அமைக்கப்பட்டது.

2. இத்திட்டத்தை மாவட்டங்களில் நிறைவேற்றுவதற்கு ஆரம்ப நல்வாழ்வு நிலையங்கள் அடிப்படை அமைப்புகளாக விளங்குகின்றன. ஆரம்ப நல்வாழ்வு நிலையப் பகுதியில் மலேரியா வேலை பற்றிய மொத்தப் பொறுப்பு ஆரம்ப நல்வாழ்வு நிலைய மருத்துவ அலுவலருடையதாகும். மாவட்ட அளவில் மாவட்ட நல்வாழ்வு அலுவலர் திட்ட நிறைவேற்றத்துக்குப் பொறுப்பாவார். இரண்டு முதல் மூன்று மாவட்டங்கள் ஒரு மண்டலமாக்கப்பட்டு, மண்டல அலுவலர் (மலேரியா) என்று அழைக்கப்படும் மக்கள் நல்வாழ்வு உதவி இயக்குநரின் கீழ் இயங்குகிறது. இவர் அந்த மண்டலத்தில் திட்டமிட்டு வழிகாட்டி, திட்டத்தை மேற்பார்வை இடுகிறார். மாநிலத் தலைமை அலுவலகத்தில் இணை இயக்குநர் (மலேரியா) இத்திட்ட நிறைவேற்றப் பொறுப்பு அளிக்கப்பட்டுள்ளார்.

3. இத்திட்டத்தின் கீழ், மலேரியா களப்பணியாளர்கள் பதினைந்து நாட்களுக்கொருமுறை ஒவ்வொரு குடும்பமாகச் சென்று பார்த்து, மலேரியா காய்ச்சல் நோயாளிகளை கண்டறிந்து எல்லா மலேரியா நோயாளிகளுக்கும் அடிப்படை சிகிச்சை அளிக்கின்றனர். இந்த மாநிலத்தில், மொத்தம் 4,492 அடிப்படை நல்வாழ்வு பணியாளர்கள், பதினைந்து நாட்களுக்கொருமுறை காய்ச்சல் நோயாளிகளைக் கண்காணித்துச் சிகிச்சை அளிப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

4. மலேரியா பரவும் பகுதிகளிலும் தொலைத்தூரக் கிராமங்களிலும் திருத்தப்பட்ட செயல் திட்டத்தின்படி, ''காய்ச்சல் சிகிச்சைக் கிடங்குகள்'' மற்றும் ''மருந்து வழங்கு நிலையங்கள்'' அமைக்கப்படுகின்றன. இதனால் எல்லா நேரங்களிலும் எளிதில் அணுக முடியாத கிராம மக்களுக்கு

1979 மார்ச் 14]

மலேரியா தடுப்பு மருந்துகள் கிடைக்கின்றன. இந்நிலையங்கள் ஆர்வமுள்ள உள்ளூர் மக்களின் ஒத்துழைப்புடன் நடத்தப்படும். இப்போது 2985 காய்ச்சல் சிகிச்சைக் கிடங்குகள் மற்றும் 4,594 மருந்து வழங்கு நிலையங்கள் பொது மக்களின் ஒத்துழைப்புடன் செயல்பட்டு வருகின்றன. இத்தகைய நிலையங்கள் மேலும் பல அமைக்கப்பட உள்ளன.

5 மேலும், மருத்துவ நிறுவனங்களில் 198 மலேரியா சிகிச்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்நிலையங்களில் இரத்தமெடுத்துப் பரிசோதனை செய்யப்பட்டு மலேரியா நோயாளிகளுக்கு உடனடி சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யப் படுகிறது.

6. மலேரியா பரவுதலைக் குறைப்பதற்கான ஆதார நடவடிக்கையாக DDT/BHC மலாதியான் முதலான உரிய பூச்சி கொல்லி மருந்துகளைத் தெளிக்கின்ற வேலை இந்த மாநிலத்தில் மலேரியா பரவும் பகுதிகளில் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

7. நகர்ப்பகுதிகளில் மத்திய அரசின் நகர்ப்புற மலேரியா ஒழிப்புத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் மலேரியா பிரச்சினை சமாளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் இந்திய அரசு வழங்கிய மருந்துகளைக் கொண்டு புழுப்பருவ கொசு ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப் படுகின்றன. இப்போது இத்திட்டம் சென்னை, சேலம், ராசிபுரம், எளம்பிள்ளை, தூத்துக்குடி, வேலூர், ஈரோடு ஆகிய நகரங்களில் நிறைவேற்றப் படுகிறது. மேலும் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், வேலூர், திருச்சிராப்பள்ளி ஆகிய 5 நகரங்களிலும் காய்ச்சல் நோயாளிகளிடமிருந்து சேகரிக்கப்பட்ட இரத்தப் பரிசோதனை செய்வதற்கான ஆய்வக வசதிகளுடன், மலேரியா நோயாளிகளைக் கண்டறிவதற்காக தமிழ்நாடு அரசு கண்காணிப்பு அமைப்பு ஒன்றையும் ஏற்படுத்தி உள்ளது. இத்திட்டம், கட்ட அடிப்படையில் மேலும் பல நகரங்களுக்கு விரிவு படுத்தப்பட உள்ளது.

8. கொசு உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்வதற்குத் தேவையான விதி முறைகள் பொதுச் சுகாதாரச் சட்டத்தில் வகுக்கப்பட்டுள்ளன. மலேரியா தடுப்புக்காக கொசுதொல்லையை ஒழிக்க இவ்விதிகளைப் பின்பற்றும்படி உள்ளாட்சி நிறுவனங்கள் அறிவுறுத்தப் பட்டுள்ளன. மேலும் மலேரியா மற்றும் பிற கொசுவினால் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்துவதற்காக, கொசு உற்பத்தியாகும் இடங்களை ஒழிப்புதற்கு சிறு பொறியியல் வேலைகளையும் மேற்கொள்ளும்படி உள்ளாட்சி நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

TAMIL NADU LEGISLATIVE LIBRARY
8 JUL 1980
MADRAS-600 009